

அஜ்மலுக்கு ஆதரவு தரும் முரளி

பக்கம் 18

# உதயன்

சுடர்: 29 கதிர்: 300 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 6, திங்கள் 22.09.2014

stay connected with: uthayan.print uthayanprint *Uthayan - A lively National Tamil Daily*

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04





## 24 ஆண்டுகளின் பின்னர்

யாழ்ப்பாணம், செப்.22

24 ஆண்டுகளின் பின்னர் நேற்று யாழ்ப்பாணம் வந்தது ரயில். ரயிலைப் பார்ப்பதற்கு யாழ்.ரயில் நிலையத்தில் மக்கள் முண்டியடித்தனர். யாழ்ப்பாணத்துக்கான பரீட் சார்த்த ரயில் சேவை நேற்று நடத்தப்பட்டது. பளையில் இருந்து பிற்பகல் 3.26 மணிக் குப் புறப்பட்ட ரயில் பிற்பகல் 3.42 மணியளவில் சாவகச் சேரி ரயில் நிலையத்தை வந் தடைந்தது. அங்கு தேங்காய் உடைக்கப்பட்டு பூசை வழி பாடுகள் நடத்தப்பட்டன. அங் கிருந்து பிற்பகல் 4 மணிய ளவில் புறப்பட்ட ரயில், யாழ். ரயில் நிலையத்தை பிற்பகல் 4.12 மணியளவில் வந்த டைந்தது. ரயில் யாழ்நகர்

22 ஆம் பக்கம் பார்க்க

# சரிந்தது அரசின் வாக்கு வங்கி 6 ஆசனங்களும் பறிக்கப்பட்டன

## பதுளையில் 3 தொகுதிகளில் பலத்த அடி ஊவாவில் ஓங்கியது எதிரணியின் கை

கொழும்பு, செப்.22

அரசியல் களத்தில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி யிருந்த ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசு வெற்றி வாகை சூடியிருந்தா லும் அதன் வாக்குவங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளது. அதன் 6 ஆசனங்களையும் பறி கொடுத்துள்ளது. இதனால் ஊவாத் தேர்தல் வெற்றி யானது அரசுக்கு நெருக் கடி யான வெற்றியாகவே அமைந் துள்ளது என்று அரசியல் ஆய் வாளர்கள் சுட்டிக்காட்டுகின் றனர்.

2009ஆம் ஆண்டு நடை பெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலில் 4 இலட்சத்து 18 ஆயிரத்து 906 வாக்குக ளைப் பெற்று இரண்டு போனஸ் ஆசனங்கள் அடங்கலாக 25 ஆசனங்களைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசால் இம்முறை 2 இலட்சத்து 49 ஆயிரத்து 906 வாக்குகளையே பெற முடிந்துள்ளது. இது கடந்த முறைப் பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் ஒரு லட்சத்து 69 ஆயிரம் வாக்குகளை

22 ஆம் பக்கம் பார்க்க

- முஸ்லிம் கூட்டுக்கு ஆசனம் இல்லை
- பொன்சேகாவின் கட்சியும் 'அவுட்'
- விமலின் தனிவழிப் பயணமும் தோல்வி



## ரயில் பார்த்த சிறுமியை தீண்டியது பாம்பு

தென்மராட்சி, செப்.22

யாழ்ப்பாணத்துக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பரீட் சார்த்த ரயில் சேவையைப் பார்ப்பதற்காகச் சென்ற ஆறு வயதுச் சிறுமி ஒருவரைப் பாம்பு தீண்டியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நுணா வில் மேற்கில் நடந்துள்ளது.

22 ஆம் பக்கம் பார்க்க

## பரீட்சார்த்த ரயில் மோதி பசு சாவு

கைதடி, செப்.22

நேற்று நடத்தப்பட்ட பரீட் சார்த்த ரயில் சேவையின் போது ரயிலால் மோதுண்டு பசுமாடு ஒன்று உயிரிழந்துள் ளது. இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் நாவற்குழி வீரபத்திரர் கோயில் பகுதியில் நடந்துள்ளது. பளையிலிருந்து யாழ்ப்பாணம்

22 ஆம் பக்கம் பார்க்க

## காணி வாங்கி பனை நடும் புலம்பெயர் தமிழர்கள்

தென்மராட்சி, செப்.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் காணிகளைக் கொள்வனவு செய்யும் புலம்பெயர் தமிழர் கள், அவற்றில் பனம் விதை களை நட்டு வருகின்றனர். வெளிநாடுகளில் பனம் பொருள் உற்பத்திப் பொருள்

22 ஆம் பக்கம் பார்க்க



ரஷ்யாவைச் சேர்ந்த டிமிரிதி, கலினா என்னும் ஜோடி இந்து கலாசாரத்தின் மீது கொண்ட பற்றுக் காரணமாக அங்கி ருந்து வந்து, திருகோணமலையில் இந்து சமய முறைப் படி திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். இந்தத் திருமணம் கடந்த சனிக்கிழமை திருகோணமலை வேலூ ரில் உள்ள திருமண ஹய் பார்க் விடுதி கடற்கரை முன்ற லில் நடந்துள்ளது. அவர்கள் 50க்கும் மேற்பட்ட தமது நண் பர்களுடன் இந்தத் திருமணத்தை வெகு விமரிசையாகச் செய்துள்ளனர். (ற)

## இலங்கை அரசின் ஆசைப்படி ஆலோசனை வழங்க முடியாது

### இந்திய மனித உரிமை ஆர்வலர் அவ்டேஸ் கவுசல் தெரிவிப்பு

கொழும்பு, செப்.22

"இலங்கை அரசின் யோச னைகள் எனக்கு மகிழ்ச்சிய ளிக்காவிட்டால் நான் மீண் டும் இலங்கைக்கு வரமாட் டேன், நான் விலகிவிடுவேன்" என ஜனாதிபதி ஆணைக் குழுவின் சர்வதேச ஆலோச கர்களில் ஒருவரான இந்திய மனித உரிமை ஆர்வலர் அவ் டேஸ் கவுசல் குறிப்பிட்டுள் ளார்.

"இலங்கை அரசு தான் விரும் பும் வேளைகளில் மாத்திரம் நாங்கள் ஆலோசனைகளை வழங்க வேண்டும் என எதிர் பார்க்கின்றது போலத் தோன் றுகிறது. நாங்கள் எங்கள் ஆலோசனைகளை வழங்க முடியுமா என்பது தெரிய வில்லை. அவ்வாறு நாங்கள் செயற்படாவிட்டால் அது நேரத்தை வீணடிக்கும் செய லாகும்" என்றும் அவர் தெரி வித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக் குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது,

"ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் விசார ணையாளர்கள் இலங்கைக்கு

22 ஆம் பக்கம் பார்க்க

## நான்கு தமிழர்கள் தெரிவு

கொழும்பு, செப்.22

ஊவா மாகாணசபைத் தேர்த லில் அதிகூடிய விருப்பு வாக் குகளை பதுளை மாவட்டத் தில் போட்டியிட்ட ஐக்கிய தேசி யக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர் னான்டோ பெற்றுள்ளார். இவர் 173,993 வாக்குக ளைப் பெற்றுள்ளார், அத்து டன் வேலாயுதம் ருத்திரதீபன் 30,457 வாக்குகளையும், ஜயந்த கன்னாங்கர 28,290 வாக்குகளையும் பெற்றுள் ளனர். ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணியில், அனுர விதானகமகே- 59,316, சம்பத் திஸாநாயக்க- 34, 337, செந்தில் தொண்டமான்

22 ஆம் பக்கம் பார்க்க

# எந்த தேர்தலையும் எதிர்நோக்கும் வாக்கு வங்கி எங்களிடம் உண்டு

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறுகின்றார்

கொழும்பு, செப்.22

எதிர்காலத்தில் நடைபெறும் எந்தவொரு தேசிய ரீதியான தேர்தலையும் எதிர்நோக்கக் கூடிய வாக்கு வங்கி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு உண்டு என்று தெரிவித்துள்ளார் அந்தக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.



வழமையான மாகாண சபைத் தேர்தலில் பதிவாகின்ற வாக்குகளை விடவும் இந்த முறை தேர்தலில் கூடுதலான விகிதாசாரத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்றுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"இவற்றின்மூலம் எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள எந்தவொரு தேசிய ரீதியான தேர்தலையும் எதிர்கொள்வதற்கான வாக்கு வங்கியை தக்கவைத்துக்கொள்ள முடிந்துள்ளது. எவ்வாறாயினும், இறுதி தேர்தல் முடிவுகள் குறித்து திருப்தியடைகின்றோம். மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் யாவும் தற்போது நடத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன், நான்கு வருடங்களின் பின்னரே மீண்டுமொரு மாகாண சபைத் தேர்தல் நடைபெறும்.

வடக்கு, கிழக்கு உட்பட நடந்து முடிந்துள்ள சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களில் மொத்தமாக 49 இலட்சத்து 44 ஆயிரத்து 572 வாக்குகளை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தன்னகத்தே கொண்டுள்ளது"- என்று தெரிவித்தார். (ற)

# ஐ.தே.க. பெரும் வளர்ச்சி

## ஹர்ச டி சில்வா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப்.22

ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியால் வெற்றி பெற முடியாது போனாலும், தேர்தல் முடிவுகளின்படி கட்சி பெரும் முன்னேற்றத்தை எட்டியுள்ளது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"2009ஆம் ஆண்டு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 2 லட்சத்து 59 ஆயிரத்து 69 வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி 98 ஆயிரத்து 635 வாக்குகளை பெற்றது. அந்தத் தேர்தலில் ஆளும் கட்சி 67.8 வீத வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி 25.8 வீத வாக்குகளையும் பெற்றது.

அத்துடன் கடந்த பொதுத் தேர்தலில் ஊவா மாகாணத்தில் ஆளும்கட்சி 2 லட்சத்து 36 ஆயிரத்து 689 வாக்குகளை பெற்றதுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 886 வாக்குகளை பெற்றது.

2009ஆம் ஆண்டை விட 2010ம் ஆண்டு தேர்தலில் வாக்குகளை இழந்த ஆளும் கட்சி இம்முறை அதனை விட வாக்குகளை குறைவாக பெற்றுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# தேசப்பற்றாளர்களின் வெற்றி

## ஊவா தேர்தல் வெற்றி குறித்து பிரதமர்

கொழும்பு, செப்.22



ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஊவா மாகாண சபைத் தேர்தலில் பெற்ற வெற்றியானது கட்சி பெற்ற வெற்றி மாத்திரமல்ல, அது தேசப்பற்றுள்ள முழு இலங்கையர்களும் பெற்ற வெற்றி - என்று தெரிவித்துள்ளார் பிரதமர் டி.எம். ஜயரத்ன.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"மாகாண சபைத் தேர்தலில் மக்களின் தீர்ப்பு அரசின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. போர் முடிவுக்கு வந்த பின்னர் பல அபிவிருத்தித் திட்டங்களை அறிமுகப்படுத்திய அரசு, இலங்கையை ஆசியாவில் முன்னேறிய நாடாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தமுறை தேர்தலில் பெற்ற வெற்றியுடன் ஊவா மாகாணத்தின் அபிவிருத்தியை மேலும் அதிகரிக்க அரசு எண்ணியுள்ளது"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மனித உரிமை ஆணைக்குழு பணிப்பாளர் விபத்தில் சாவு

கொழும்பு, செப்.22

பலாங்கொட இரத்தினபுரி பிரதான வீதியின் பெலிகல சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் மேலும் மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணிகளுக்காக சென்று மீண்டும் கொழும்பு நோக்கி திரும்பிக்கொண்டிருந்த வான், அதே திசையில் பயணித்த இலங்கை போக்கு வரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடன் மோதி விபத்துக் குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் காயமடைந்தவர்கள் பலாங்கொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற)

# புதிய வியூகங்களை வகுத்து களமிறங்கவுள்ளது ஐ.தே.க.

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்

கொழும்பு, செப்.22

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது புது வியூகங்களுடன் களமிறங்க ஐ.தே.க. திட்டமிட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. அதன் பிரகாரம் கட்சியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சஜித் பிரேமதாஸவின் பொறுப்பில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் ஒப்படைக்கப் படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றே இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது. இதுகுறித்து மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

"முற்றிலும் இளைஞர்களைக் கொண்ட பரப்புரைக் குழுவொன்றைக் கொண்டு தேர்தல் பரப்புரைகள் முன்னெடுக்கப் படவுள்ளன. ஐ.தே.க.வின் மீது சர்வ மதத்தவர்களும் நம்பிக்கை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் சகல சமயங்களினதும் முக்கிய தலைவர்களை கவர்ந்திழுக்கும் செயற்திட்டம் கரு ஜயசூரியவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அனைத்து இன மக்களினதும் வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சிகளை அந்தந்த மதத்தலைவர்களின் ஊடாகவே முன்னெடுக்க ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

அரச தரப்பில் இருந்து வரும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் நடவடிக்கைகளில் மங்கள சமரவீர ஈடுபடுத்தப் படவுள்ளார். நாளாந்தம் செய்தியாளர்களை சந்தித்து, கட்சியின் ஊடக நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவருடைய பணியாகும்.


இன்னும் சில முக்கிய தலைவர்கள் ஏனைய கட்சிகளின் முக்கியஸ்தர்களை ஐ.தே.கவுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவை எல்லாவற்றுக்கும் வாக்குச் சாவடிகள் தோறும் ஆளுங் கட்சியினரின் வன்முறைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இளைஞர் படையொன்றை ஏற்படுத்தவும் ஐ.தே.க. திட்டமிட்டுள்ளது. அதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் திஸ்ஸ அத்தநாயக்க தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ளது"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

உடுவில் மகளிர் கல்லூரியின் 190ஆவது ஆண்டு நிறைவை அடுத்து, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை பாடசாலை அதிபர் திருமதி சிராணி மில்ஸ் தலைமையில் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது. சுன்னாகம் நகரப் பகுதியில் இருந்து ஆரம்பமாகிய இந்த ஊர்வலம் காங்கேசன்துறை வீதி உடுவில் மானிப்பாய் வழியாக கல்லூரியைச் சென்றடைந்தது. இந்த ஊர்வலத்தில் பழமையை எடுத்துக் காட்டும் வகையில் மாட்டு வண்டில்கள் மற்றும் வேடதாரிகளின் நடன நிகழ்வுகள் என்பனவும் இணைக்கப்பட்டிருந்தன. (ற-86)













யாழ்.நகரின் பிரதான வீதிகளில் ஆங்காங்கே வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர், உறுப்பினர்களை கேலி செய்யும் வகையிலான சுவரொட்டிகள் நேற்று ஒட்டப்பட்டிருந்தன. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஆகியோரது புகைப்படங்களை உள்ளடக்கியும், அனந்தி சசிதரனின் கணவரும், விடுதலைப் புலிகள் அமைப்பின், திருகோணமலை மாவட்ட முன்னாள் அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலனை உள்ளடக்கியதாகவும் அந்தச் சுவரொட்டிகள் காணப்பட்டன. யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதி மற்றும் ஸ்ரான்லி வீதி உள்ளிட்ட பிரதான வீதிகளில் இவை ஒப்பட்டப்பட்டிருந்தன. (ற-14)

Registered as a Newspaper

# உதயன்

கிளாசிக்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 06 திங்கள் (22.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 300

# 13ஆவது திருத்தம் குறித்து மோடி கேள்வி எழுப்புவார் மஹிந்தவிடம்

கொழும்பு, செப்ரெம்பர். 22

**ஐ.நா. கூட்டத்தொடரின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ள இந்திய பிரதமர் மோடி, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து கேள்வி எழுப்புவார் என புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

**மேலும், சீனாவின் விமானத் தள பராமரிப்பு நிலையத்தை ஹிங்குரா கொடவில் அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவது குறித்து மோடி தனது கவலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவிப்பார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

சீன ஜனாதிபதியின் பயணத்துக்கு முன்னதாக இலங்கைத் துறைமுகத்திற்கு அந்த நாட்டின் அதிநவீன நீர் மூழ்கிக் கப்பலும், போர்க்கப்பல்களும் வந்துள்ள விடயம் இந்திய பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் மோடி மஹிந்த சந்திப்பின்போது இதுகுறித்த விவகாரம் பேசப்படலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது -

ஐ.நா. கூட்டத்தொடரின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய பிரதமருடன் பேச்சுகளை மேற்கொள்வது உறுதியாகிவிட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சக வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. இதுகுறித்து புதுடில்லி உறுதி செய்துவிட்டதாகவும் அவை தெரிவித்துள்ளன.

இந்த சந்திப்பின்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து மோடி கேள்வி எழுப்புவார் எனத் தெரிவித்துள்ள புதுடில்லி வட்டாரங்கள் பதவியேற்பு நிகழ்வின்போது இடம்பெற்ற சந்திப்பின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நினைவுபடுத்தியுள்ளன.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மஹிந்தவின் விசேட இணையத்தளம்

கொழும்பு, செப்.22

ஐக்கிய நாடுகள் அமைப்புடன் ஜனாதிபதியும் இலங்கையும் கொண்டுள்ள நடவடிக்கைகள், தொடர்பாடல்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விசேட இணையத்தளமொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளார். இந்த வாரம் நியூயோர்க்கில் இடம்பெறவுள்ள 69ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தனது பங்குபற்றுதலுக்கு முன்னதாக ஜனாதிபதி இந்த இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

பின்வரும் முகவரியினூடாக இந்தப் புதிய தளத்தை அணுக முடியும்:

http://unga.president.gov.lk

1955ஆம் ஆண்டில் உறுப்பினரானமையிலிருந்து இலங்கை, எல்லா ஐக்கிய நாடுகள் முறைமைகளோடும் தொடர்புபட்டு வந்துள்ளதுடன், அதனைத் தொடர்ந்தும் வருகிறது. ஐக்கிய நாடுகளில் ஜனாதிபதியின் பணிகளினதும், பல்வேறு ஐக்கிய நாடுகள் அமைப்புக்களுடன் அரசின் இணைந்த செயற்பாடுகளினதும் சேமிப்பிடமாக இந்த இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்யப்படுகிறது என்று

(22 ஆம் பக்கம் பார்க்க)

## நலிவுற்ற பெண்களுக்கு பயிற்சி

ஏறாவூர், செப்.22

சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கான வியாபார அபிவிருத்தி சேவைகள் பற்றிய பயிற்சி சனிக்கிழமை வை.எம்.சீ.ஏ அமைப்பின் சமூக அணித் திரட்டுநர் ஆர். சாருஜா தலைமையில் ஏறாவூர் தளவாய்க் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

இலங்கையிலுள்ள நலிவுற்ற பெண்களை வலுவூட்டும் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சிகள் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ அமைப்பினால் மாவட்டமெங்கும் நடத்தப்பட்டு வருகின்றன. சிறுகைத்தொழில் செய்யும் பெண் முயற்சியாளர்களுக்கான வியாபாரத்தை விருத்தி செய்யும் நோக்கில் இந்தப் பயிற்சி நெறி நடத்தப்பட்டுவருகின்றது.

தளவாய்க் கிராமத்தில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி நெறியில் சுமார் 24 பெண்கள் பங்குபற்றினர். பயிற்சியை முடித்துக் கொள்ளும் இந்தப் பெண்களுக்கு சிறுகைத் தொழில் முயற்சிக்கான சகல வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும், தனியாரிடம் அதிக வட்டிக்குக் கடன் பெறுவதைத் தவிர்த்து குறைந்த வட்டியில் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளினூடாக வெற்றிகரமான தொழில் முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளவும் வழிகாட்டல்கள் செய்யப்பட்டுள்ளது என்றும் சமூக அணித்திரட்டுநர் ஆர். சாருஜா தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் சேவ் த சில்ரன்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக களுத்துறையில் ஆர்ப்பாட்டம்

### சிஹல ராவய அமைப்பு நடத்தியது

கொழும்பு, செப்.22

களுத்துறையில் கத்தோலிக்க சமூகத்தினர் சிலை ஒன்றை நிறுவ எடுத்த முயற்சிக்கு பௌத்த பிக்குமார் குழு ஒன்று எதிர்ப்பை வெளியிட்டுள்ளதுடன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளர். களுத்துறை கட்டுகுருந்த சந்தியில் இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

(22 ஆம் பக்கம் பார்க்க)



## அரசின் தோல்விப் பயணம் ஆரம்பமாகியது ஊவாவில்

### ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, செப்.22

ராஜபக்ஷ அரசை முழுமையாக தோல்வியடைச் செய்வதற் கான பய ணம் ஊவாவில் ஆரம்பமாகியுள்ளது என்றும் அரசு தேர்தல் ரீதியாக பலவீனமடைந்துள்ளது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிப் பாதையில் செலுத்த முடி யும் என்ற தனது இலக்கை எட்டிவிட்டதாக அக்கட்சியின் ஊவா மாகாண முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியத்ாவது,

ஐக்கிய தேசியக்கட்சியை வெற்றியை நோக்கிய பாதையில் செலுத்த முடியும் என்ற எனது இலக்கை எய்துள்ளேன். அதேவேளை, அரசின் ஆதரவை பதுளையில் 50 வீதத்திற்கு குறைவான தாக்கியுள்ளோம்.

எனினும், பதுளையில் உள்ள தோட்டத்தொழிலாளர்களை பெருமள வில் எம்மால் கவர முடியவில்லை. இதன் காரணமாக பதுளையில் பெரும்பான்மையை பெறமுடியாமல் போய் விட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடில் மு.கா. பங்காளியாக இருப்பதில் பயனேதுமில்லை

### அந்தக் கட்சியின் குழுத் தலைவர் கூறுகின்றார்

திருகோணமலை, செப்.22

கிழக்கு மாகாண ஆட்சி நிறுவப்படும்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்பட்ட உத்தரவாதங்களை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரகடனத்திற்கு முன்னதாக அரசு நிறைவேற்றித் தர வேண்டும். இல்லையேல் இந்த அரசில் முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் பங்காளிக் கட்சியாக இருப்பதில் எவ்வித அர்த்தமுமில்லை. - இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவரும் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளருமான ஏ.எம்.ஜெமீல்.

சாய்ந்தமருதில் இடம்பெற்ற அபிவிருத்தி அங்குரார்ப்பண விழாப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"மறைந்த எமது பெரும் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளுக்கான போராட்டமும் அபிவிருத்திப் புரட்சியும் சமாந்தரமாகவே முன்னெடுக்கப்பட்டு வந்தது. அபிவிருத்தித் திட்டங்களுக்காக அவர் சமூக உரிமை எதனையும் விட்டுக் கொடுக்கவில்லை. சுயநலமற்ற சமூகக் காவலனாக மர்ஹூம் அஷ்ரப் திகழ்ந்தார். அதனால்தான் தனது கொள்கை, கோட்பாடுகளில் அவர் உறுதியாக இருந்து செயற்பட்டார்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் நம்பிக்கையே ஊவா வெற்றி

### பெருமிதமடைகின்றது அரசு



கொழும்பு, செப்.22

ஊவாவில் கிடைத்துள்ள வெற்றி மக்கள் அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கையையும் போரின் பின்னர் அரசின் அபிவிருத்தித் திட்டங்களை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதையும் புலப்படுத்துவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி அரசின் ஸ்திரத் தன்மையை மேலும் பலப் படுத்தியுள்ளதாகவும் அவர்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## யானைக்கு பயந்து ஓடியவர் மரத்துடன் மோதிக் காயம்

மட்டக்களப்பு, செப்.22

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேசத்தின், கெவுளியாமடு கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு புகுந்த இரண்டு காட்டு யானைகள்,

(22 ஆம் பக்கம் பார்க்க)



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# யாழ். பெண்கள் அபிவிருத்தி சங்கத்தினால்

கோயில்கள், கலை கலாசார நிகழ்வுகள் அனைத்திற்கும் தேவையான பூக்களை விநியோகித்தலும் சுற்றுலா பயணிகளுக்கு மனமகிழ்வை ஏற்படுத்தும் நோக்குடனும் அனைத்து வகையான பூங்கன்றுடன் தாவரவியல் பூங்காவுமாக மிகப்பிரமாண்டமான பூந்தோட்டம் அமைக்கப்படவுள்ளது.

**எமது கலாசாரத்தினை பாதுகாப்பதுடன் பெண்களுக்கு தொழில் வாய்ப்பினையும் பெற்றுக்கொடுக்கும் இச் செயற்றிட்டத்தில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்**



ஆர்வம் உடையவர்கள்
ஆலோசகர்களாகவும் அனுசரணையாளர்களாகவும்

**இணைந்து கொள்ள தொடருங்கள்:**
இல.70 கோயில்வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 0212226837, 0771882118, 0771877380

(52469)(4.3.6)


## போதையில் இடையூறு செய்த நபருக்கு 80 மணிநேர சமூகப் பணி

தென்மராட்சி செப். 22
மதுபோதையில் பொது மக்களுக்கு இடையுறு விளைவித்த வரணி வாசியை 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுமாறு சாவகச்சேரி நீதிமன்றில் வெள்ளிக்கிழமை உத்தர விடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்த வழக்கினை விசாரித்த நீதிவான் 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதி மன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (வ- 9)

## தொடக்க நிலைப் பாடசாலையின் பரிசளிப்பு விழா

வலி.வடக்கு. செப். 22
தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் நுழைவாயில் திறப்பு நிகழ்வும் நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் க.காராளசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரும், கௌரவ விருந்தினராக இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற பிராந்திய முகாமையாளர் எஸ்.விக்கினராசாவும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (வ-86)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலய அதிபர்
திருமதி
**கமலாசனி யோகநாதன்**
அவர்கள் 12.09.2014 அன்று
**சமாதான நீதிவானாகப்** பதவியேற்புச் செய்தமையை அகம் மகிழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பண்பிலே உயர் பதவி தனைப் பெற்று
அன்பால் அக மகிழச் சமூக சேவை தந்து
இன்புடனே வாழ இன்றல்ல என்றும்
இதயம் நிறை வாழ்த்துக்கள் நல்குகின்றோம்

ஆசிரியர் நலன்புரிகழகம்
யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்


## கிளிநொச்சி நகர சபை, கண்டாவளை பிரதேசசபை, கரைச்சி பிரதேசசபை உருவாக்கம்

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச சபையானது தற்போது கரைச்சி பிரதேசசெயலாளர் பிரிவு, கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபையைப் பிரித்து பரந்தன் நகரப்பகுதியை அண்மித்த பிரதேசத்தைவிட ஏனைய கண்டாவளை பிரதேசத்தை கண்டாவளை பிரதேச சபையாகவும், கிளிநொச்சி நகரம், பரந்தன் நகரம் ஆகியவற்றை அண்மித்த பகுதியை கிளிநொச்சி நகரசபையாகவும், மிகுதியாக உள்ள பகுதியை கரைச்சிப் பிரதேச சபையாகவும் உருவாக்குவது தொடர்பாக பொதுமக்களிடமிருந்தும், சமூக அமைப்புக்களிடமிருந்தும் அபிப்பிராயங்கள் கோரப்படுகின்றன. அபிப்பிராயங்களை எழுத்துருவில் அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "கிளிநொச்சி நகரசபை, கண்டாவளை பிரதேச சபை உருவாக்கம்" எனக் குறிப்பிட்டு இரு கிழமைக்குள் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**திருமதி றூ.கேதீஸ்வரன்,**
கிளிநொச்சி நகரசபை,
கண்டாவளை பிரதேசசபை உருவாக்கல்குழுத் தலைவரும்,
அரசாங்க அதிபரும், கிளிநொச்சி.

(சி16295)
(12.3.6)


# சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்
## Kids Park Pre School & Day Care Campus
**528, பலாலி வீதி, திருநெல்வேலி.**

**சிறுவர்களுக்கு உகந்த மிகப் பாதுகாப்பான சூழலில் சுமுகமான முன்பள்ளிக் கல்வி அனுபவம்**
**2015ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**2+ Play Group 3+ Montessori 4+ Pre School**

**உலகத் தரம் வாய்ந்த பயில்வுகள் :**
சுதந்திரமான கற்றல் வட்ட களக் கற்கைகள், விளையாட்டு மூல செயல்வழிக் கல்வி, ஆடல், பாடல், அபிநயம், ஓவியம், பொம்மலாட்டம், நாடகம், மணல் நீர் விளையாட்டுக் கற்கை (பிரமாண்டமான சிறுவர் பூங்கா) புலன் விருத்தி ஆற்றுகை, பண்டிகைக்கால பண்பாட்டுப் பயில்வுகள், பங்கேற்றுக்கற்றல், நூலக அனுபவம்.



கனடா ரொறன்டோ முன்பள்ளி சபை ஆலோசகர் பா.சிவபாலன் சிறுவர் பூங்கா களக்கற்கை செயலமர்வை ஆற்றுகின்றார்.



மொன்டிசூரி கற்றல் முறை பிரயோகிக்கப் படுகின்றது.



யப்பானில் இருந்து வருகை தந்த கணினிப் பொறியியலாளர் டோபோ யகோவா சிறார்களுக்கு கணினிப் பயில்வை வழங்குகின்றார்.



இங்கிலாந்தில் இருந்து வருகைதந்த முன்பள்ளி கல்வியியல் ஆய்வாளர் ரோசி அலக்ஸ் ஆங்கில CD வெளியிடுகின்றார்.

அனேக வேலை செய்யும் தாய்-தந்தையர்களின் வேண்டுகோள்களுக்கிணங்க பகல் நேர சிறுவர் பராமரிப்பு சேவைகள் காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறுகின்றது. 12.30 மணி தொடக்கம் 5.00 மணி வரை ஆரம்பக்கல்வி பயிலும் சிறார்களுக்கான கல்வி பராமரிப்புச் சேவைகள்.

**களிமண் பிசைவிலிருந்து கணினிக் கற்கை வரை பயிற்சி பெற்ற ஆசிரிய அம்மாக்களின் அரவணைப்பு, அர்ப்பணிப்பு.**
**நவீன முன்பள்ளிக் கல்வியில் உயர்ந்து நிற்கும் கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, யப்பான், சீனா முறைகள் பொருத்தமாகப் பிரயோகிக்கப்படும் செயன்முறைகள்.**

**எமது ஆரம்பப்பிள்ளை அபிவிருத்தி நிலையத்தின் சேவைகள் :**
முன்பள்ளிக் கல்வி, சிறுவர் காப்பக பகல் பராமரிப்பு தரம் 1, 2 சிறார்களுக்கான மாலை நேர வகுப்புக்கள், சுகம்-முதியோர் இளைப்பாறும் மகிழ் களம், ஆலோசனை வழிகாட்டல் சேவை வீட்டுத் தாதியர் சேவை, சிறார்கள் விளையாடி மகிழ சிறுவர் பூங்கா சேவைகள், சர்வதேச முன்பள்ளி வளநிலையம், சிறுவர்-முதியோர் நாடக மகிழ்களம், சிறுவர்களுக்கான குறும்பட - சினிமாப் பட மாளிகை, CD கள், குறும்படங்கள் நூல்கள் தயாரிப்பு.

**எதிர்வரும் விஜயதசமி அன்று 03.10.2014 ஏடு தொடக்கல் நிகழ்வு நடைபெறும்.**

நிபுணத்துவ ஆலோசகர் :
**பாலசுப்பிரமணியம் தனபாலன்**
BA(Cey), PGDM (Merit), M.Phil in Pre School Education
Dip in Guidance & Counselling (Distinction)
Cert in Tourism (India) Cert in Vacational Guidance (Singapore)

பணிப்பாளர் :
**திருமதி கர்ணி தனபாலன்**
Dip in Pre School Education (Distinction)
PRC Guidance & Counselling (1st Class)
T.P : 077 645 6974

# கிளி.நகர் மாவட்ட ஆயுள்வேத உப பிரிவை மூடவேண்டாம்

## ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 22

கிளிநொச்சிநகர் மாவட்ட ஆயுள்வேத திணைக்களத்தின் உப பிரிவு ஆயுள்வேத மருந்தகத்தை மூட வேண்டாம் என்றும் அது தொடர்ந்து இயங்க அனுமதிக்க வேண்டும்என்றும் - கிளிநொச்சி ஆயுள் வேத பாதுகாப்புச் சபையின் தலைவர் கே.திருலோகமூர்த்தி வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கத்துக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கேட்டுள்ளார்.

போரின் பின் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த நான்கு ஆண்டுகளாக குறித்த மருந்தகம் கிளி நொச்சி நகரில் செயற்பட்டு வருகிறது. கிளி நொச்சி வட்டக்கச்சி, அக்கராயன் குளம், இராமநாதபுரம், பாரதி புரம் போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்கு வசதியாக இந்த மருந்தகம் அமைந்துள்ளது. தினமும் பெருமளவு மக்கள் அங்கு வந்து சிகிச்சை பெறுகின்றனர் தற்போது பிரதான ஆயுள் வேத மருந்தகம் பூநகரிப் பகுதியில் ஒரு ஒதுக்குப்புறமாக அமைந்துள்ளது.

எனவே, பொது மக்கள் அங்கு செல்லக் கூடியதான வசதிகள் இல்லை. எனவே கிளிநொச்சி நகர் ஆயுள்வேதமருந்தகம் தொடர்ந்தும் இயங்க அனுமதிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(வ-7)



இலக்கியவாதி வி.திருநாவுக்கரசுவின் நூல் வெளியீடும் நவசமசமாஜக் கட்சியின் யாழ். மாவட்ட முன்னாள் அமைப்பாளர் ஆ.க. அண்ணாமலையின் 25 ஆம் ஆண்டு நினைவு தினமும் யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வின் போது "தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வின்றி இலங்கைக்கு விடிவில்லை" என்ற நூல் வெளியிடப்பட்டது. இலக்கியவாதிகள், ஆர்வலர்கள், அரசியல் பிரமுகர்கள் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ-10)

# பொங்கல் மண்டபம் இன்று திறப்பு

தென்மராட்சி, செப். 22

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆல யத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொங்கல் மண்டபம் இன்று மு.ப. 11 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

புலம்பெயர் நாடொன்றில் வதியும் ஆலய அடியார் நாகலிங்கம் ஜெயசீலன் என்பவரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொங்கல் மண்டபத்தை கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் திறந்து வைப்பார் என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் கா.தேவநாயகம் அறிவித்துள்ளார். (வ-9)

# முதலாம் கட்ட மானிய உர விநியோகம்

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பின் நெற் செய்கையாளர்களுக்கான முத்லாம் கட்ட மானிய உர விநியோகம் எதிர் வரும்27ஆம்திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மீசாலை புத்தூர்சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளன.

நெற்செய்கையாளர்கள் உர வகைகள் பெற்றுக் கொள்ளக் கூடியபொருள்களைக்கொண்டு வருமாறு அமைப்பின் செயலாளர் அறிவீத்துள்ளார். (வ-9)

# பாரவூர்தியில் சிக்கிய ரெலிக்கொம் வயர்களால் தொ.தொ.கம்பங்கள் சேதம்

யாழ்ப்பாணம், செப்.22

நிலத்தில் தொய்வடைந்து காணப்பட்ட ரெலிக்கொம் வயர்கள் பாரவூர்தியில் சிக்கிக் கொண்டதில் தொலைத் தொடர்பு கம்பங்கள் உடைந்து - வீதியின் குறுக்காக விழுந்து போக்குவரத்து தடைப்பட்டது. யாழ்ப்பாணம் நாவலர் வீதி அன்னசத்திரம் வீதிச் சந்திப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம் பவம் இடம்பெற்றது.



நாவலர் வீதியால் வந்து கொண்டிருந்த பாரவூர்தியில் இவ்வாறு காணப்பட்ட வயர்கள் சிக்கிக் கொண்டதை அடுத்து பாரஊர்தி நிறுத்தப் படாமல் பயணித்துக் கொண்டிருந்தது. அதனால் வயர்கள் இழுபட்டதில் ஏற்கனவே சிறிது உடைந்து விழும் நிலையில் இருந்த தொலைத் தொடர்பு கம்பங்கள் அன்ன சத்திர வீதியில் குறுக்காக விழுந்ததுடன் நாவலர் வீதி ஓரமாக நடப்பட்டிருந்த மற்றும் ஒரு தொலைத் தொடர்பு கம்பமும் உடைந்து சரிந்து விழும் நிலையில் உள்ளதுடன் மற்றும் ஒரு தொலைத் தொடர்பு கம்பங்கள் நாவலர் வீதியின் குறுக்காகவும் விழுந்து கிடந்தன.

இதனால் வாகனப் போக்குவரத்து இடம்பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் வாகனங்கள் மாற்றுப் பாதைகளினூடாகவே தமது பயணத்தை மேற்கொண்டன.

இதை அடுத்து குறித்த சம்பவம் கேள்விப்பட்டதும் மின்சார சபை ஊழியர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போதும் ரெலிக்கொம் ஊழியர்களின் வருகைக்காக அவர்கள் காத்திருந்தனர். ரெலிக்கொம் ஊழியர்கள் தமக்குரிய இணைப்பு வயர் களை அகற்றிய பின்னரே தாங்கள் பணிகளைத் தொடர முடியும் என்றும் மின்சார சபையினர் தெரிவித்தனர்.

சுமார் 50 யார் தூரத்துக்கு ரெலிக்கொம் வயர்கள் அறுந்து கிடந்தன. மூன்று தொலைத் தொடர்பு கம்பங்கள் வரை சேதமடைந்திருந்தன. தொலைத் தொடர்பு கம்பங்கள் விழுந்த போதும் பொது மக்களுக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-7)

# வவுனியா மாவட்ட கலை இலக்கிய பெருவிழா நாளை

வவுனியா, செப்.22

வவுனியா மாவட்ட கலை இலக்கிய பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார் .

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்து கொள்வார். பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் உட்பட வவுனிமாவட்ட கலைஞர்களின் நிகழ்வு என்பன இடம் பெறவுள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட் டார்.

(வ-402)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கணபதிப்பிள்ளை செல்வராசா

தோற்றம் 20.04.1941
மறைவு 26.09.2011

திதி: சதுர்த்தசி 22.09.2014

அன்புடனே எமையீன்று ஆளாக்கி வாழவைத்த
அன்புகால் அப்பாவே ஆண்டுகள் மூன்று ஆனதையா
என்றுமைக் காண்போம் எம் துயரந் தீர்ப்போம்
மண்ணுலகில் நீரிங்கு மறுபடியும் வாரீரோ

என்றென்றும் உங்கள் நினைவில் வாழும்
செ.செல்லம்மா (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

முத்துமாரி அம்மன் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(47273)(4.3.6)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பஞ்சவர்ணம்பிள்ளை
கிருஷ்ணமூர்த்தி
[தேவி அச்சகம், ஸ்தாபகர், மூர்த்தி விளம்பரசேவை]

தோற்றம் 15.02.1936
மறைவு 26.09.2011

திதி: சதுர்த்தசி (22.09.2014)

ஆண்டுகள் மூன்று சென்றாலும் அப்பா
உங்கள் நினைவுகள் எம்
மனதில் நிழலாகநிற்கின்றன.
உங்கள் நினைவுகளைத் தந்துவிட்டு
உறவுகளை புலம்பவிட்டு எமைத் தவிக்க விட்டுச் சென்றீர்கள்
ஆயிரம் சொந்தங்கள் அருகினிலே இருந்தாலும் - அப்பா
உங்களைப் போல் யார் அவனியிலே வருவார்?
பாசத்தின் பெருங்கடலே பார்புகழ வாழ்ந்தவரே
...ளை ஆண்டுகள் சென்றாலும் மறக்கமுடியாது அப்பா
வாடுகின்றோம் உமைப்பிரிந்து ... காத்திடுவாய்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(52494)(12.6)

உங்கள் நினைவுகளுடன் உங்களது ஆத்மாசாந்தியடைய மாரியம்மனை வேண்டி நிற்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 53ஆவது நினைவு தினம்



நீர்வேலி
அமரர்
முகாந்திரம் முதலியார்
அத்தியார் அருணாசலம் (J.P.)

மலர்வு 27.08.1887
உதிர்வு 22.09.1961

திதி : 22.09.2014

ஊரும் செழிக்க உள்ளம் மகிழ
பள்ளி தந்து உள்ளம் மகிழ்ந்தார்.

"அத்த... அகம்"
பருத்தித்துறை வீதி, நீர்வேலி.

திரு.திருமதி ந.சிவகுமாரன்
(பேரப்பிள்ளைகள்)

(5 2393)(7.6.3)

# கணினி மூல கற்பித்தலுக்காக வடக்கில் 24 பாடசாலைகள் தெரிவு

## தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பரிசில்நாள் நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்.22

கணினி மூலம் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கென வட மாகாணத்தில் 24 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நேற்றுமுன்தினம்சனிக்கிழமை தெரிவித்தார்.

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதிபர் அறை, கணினி கூடம் கையளிப்பு மற்றும் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேலும் அதிகரிப்பதற்கு பல திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.


யாழ். மாவட்டத்தில் சாதாரண தரம் கற்கும் மாணவர்களுக்கு கணினி மூலம் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அதன் மூலம் அந்த மாணவர்கள் கூடுதலான நன்மைகளை பெற்றிருக்கிறார்கள் என்பதனை அந்த மாணவர்களின் பெறுபேறுகளை வைத்து எங்களால் அவதானிக்க முடிந்தது.

அதுபோல் ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் இவ்வாறு கணினி மூலமான கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க எமது அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதற்காக மாகாணத்திலுள்ள 24 பாடசாலைகளைத் தெரிவு செய்திருக்கிறோம். அதில் இந்த தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலையையும் உள்வாங்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளேன்.

எனவே, ஆசிரியர்களும் கணினி பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டியது கட்டாயத் தேவையாகவுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாத விடுமுறையின் போது ஆசிரியர்கள் கணினி பற்றிய கற்கைகளில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் எமது திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலகுவாக இருக்கும்.

அத்துடன், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பெற்றோர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.



அதுமட்டுமன்றி, பிரதேசம், தமிழர் பாரம்பரிய விழுமியங்கள் என்பனவற்றை எப்போதும் எடுத்துக் கூற வேண்டும் - என்றார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த பொன்.நடராசாப்பிள்ளை (மாணிக்கவாசகர்) நினைவாக அவரது மகன் உதயகரன் மற்றும் குடும்பத்தினர் (ஆஸ்திரேலியா) குறித்த கணினிக் கூடம், அதிபர் அறை ஆகிய இணைந்த கட்டடத்தை நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர்.

பாடசாலை அதிபர் க.குகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் உ.முனீஸ்வரன், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எஸ்.கனகரத்னம், செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகர் குமரன் பத்மநாதன் (கே.பி), தொழிலதிபர் ந.உதயகரன் (ஆஸ்ரேலியா) உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ)

# குமுழமுனை சங்கக் கூட்டத்துக்குத் தடை

யாழ்ப்பாணம், செப்.22

கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் உள்ளடங்கும் குமுழமுனைக் கிளையில் நேற்று முன்தினம் நடைபெற இருந்த கூட்டம் மற்றும் பேராளர் தெரிவுக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் இடைக் காலத் தடை விதித்துள்ளது.

சங்க உறுப்பினர்கள் தடையுத்தரவு கோரி நீதிமன்றில் சட்டத்தரணியூடாக வழக்குத் தொடர்ந்தனர். அதனைப் பரிசீலித்த நீதிமன்று அவற்றுக்கு 14 நாள்களுக்குத் தடை உத்தரவு விதித்தது.

குமுழமுனையில் 'ஏ' மற்றும் 'பி' என இரண்டு கிளைகள் உள்ளன. அதில் 'பி' கிளையில் உள்ள ஒருவர் சங்க விதிமுறைகள் உப விதிமுறைகளுக்கு முரணாக 'ஏ' கிளைக்குமாறுவதற்கான நடவடிக்கையை கூட்டுறவு ஆணையாளர் அலுவலகம் ஊடாக மேற்கொண்டுள்ளார்.

அது தவறானது என்றுஇரண்டுகிளைகளையும் சேர்ந்த 3 பேர் சட்டத்தரணிகளான கே.எஸ். பாலகிருஷ்ணன் மற்றும் கே.கணேஸ்வரன் ஊடாக வழக்குத் தொடுத்தனர்.

அதனைப் பரிசீலித்த நீதிமன்று நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த கூட்டம் மற்றும் பேராளர் தெரிவு என்பவற்றுக்குத் தடை விதித்ததோடு எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்படும் நபர் அதில் பங்குபற்றவும் இடைக் காலத் தடை விதித்தது.

அதற்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக வழக்கு எதிர்வரும் 2 ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (து-4)


## மரண அறிவித்தல்

### முருகேசு சின்னக்கிளி (கிளியண்ணை)



நவாலி கிழக்கு, முருகமூர்த்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சின்னக்கிளி 19.09.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான முருகேசு -முத்து தம்பதியரின் அன்பு மகனும், சுபத்திராதேவியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான குலசிங்கம் (கொழும்புத்துறை), மாசிலாமணி மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் சகோதரரும், சிவாஜினி, சுபாஸ்கரன் (நோர்வே), சுகந்தினி, சுதர்சன், சுரேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், முருகமூர்த்தி, மகிழ்மலர் (நோர்வே), ஹரிகரன் (குவைத்), சுகாஜினி, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுசாந், சிந்துஜன், அபர்ணா, தருண், தர்சா, ருசாந், ஹரிணி, சந்தோஸ், லட்சயன், தரண்ஜா, சுலக்ஷி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் ந.ப. 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக் காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

முருகமூர்த்தி கோயிலடி, நவாலி. (52533) (4.6.3) மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு சிதம்பரப்பிள்ளை (ஆசாரியார்)



காளிகோயிலடி மல்லாகத்தைச் சேர்ந்த கார்த்திகேசு சிதம்பரப்பிள்ளை 19.09.2014 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதியரின் புதல்வனும், வசந்த மல்லிகாவின் கணவரும், காலஞ்சென்ற சிவசங்கர் மற்றும் சிவசலோனி (ஆசிரியர் - யா/ இடைக்காடு மகாவித்தியாலயம் அச்சுவேலி), சிவலயன் ஆகியோரின் தந்தையும், முருகையா, பொன்னுப்பிள்ளை, கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் சகோதரனும், மகிந்தனின் மாமனும், ஆரபியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

காளிகோயிலடி, மல்லாகம். (52530) (45.6.3) குடும்பத்தினர்.

### முருகேசு நாகராசா



யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் இத்தாலியில் வசித்து வந்தவருமாகிய முருகேசு நாகராசா 19.09.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - ஐயாத்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் (லீலா இத்தாலி) பாசமிகு கணவனும், சஞ்சீவ், காலஞ்சென்ற சிரஞ்சீவ் ஆகியோரின் அன்புத் தந்தையும், தசிந்தாவின் அன்பு மாமனும், தம்பையா, கணேஸ், கலாஞ்சென்றவர்களான பரமானந்தம், கணபதிப்பிள்ளை மற்றும் சிவபாலன், தில்லைநடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சொர்ணலட்சுமி, நாகேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஸ்வரி, ருக்குமணி, நாகேஸ்வரி (மணி), அனுஷா, நாகராசா, மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற கருணாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகேஸ்வரியின் உடன்பிறவா சகோதரனும், சையோகநாதனின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2014) திங்கட்கிழமை இத்தாலியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சஞ்சீவ் 0039 328 099 0911 (52529) (45.6.3) து. சையோகநாதன (சகலன்) 077 312 6909

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



குஞ்சுப்பரந்தனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வி.சோகேஸ்வரன் அவர்களின் புதல்வனும், யாழ்.பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தின் இறுதிவருட மாணவனுமான

### சோ.கஜந்தன்

கடந்த வருடம் 05.10.2013 புத்தூர் வாதரவத்தை எனுமிடத்தில் டிப்பர் விபத்தில் அகாலமரணமானார்.

அவருடைய முதலாம் ஆண்டுக்கிரியைகள் 24.09.2014 புதன்கிழமை அவருடைய இல்லத்தில் நடைபெற இருப்பதால் அமரர் கஜனின் நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் வருகை தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கெருடாவில், சாவகச்சேரி. (47283)(6.4.3) குடும்பத்தினர். வி.சோகேஸ்வரன் (ஈசன்) 077 714 8082

## மறைந்தும் மறையாத எம் அன்புத் தெய்வத்தின் மூன்றாம் மாத நினைவுத் துளிகளும் மணிவிழா நினைவுநாளும் நன்றி நவிலலும்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், அம்மன்வீதியை வசிப்பிடமாகவும், லண்டனை வாழ்விடமாகவும் கொண்ட

### அமரர் கு.ந.இராசநாயகம்

B.Com - PhD லண்டன்

(முன்னாள் எழுதுவினைஞர், யாழ்.கல்வித் திணைக்களம்)

குடும்பக் குலவிளக்காக 22.09.1954

குடும்பம் இருள்மயமாக 07.06.2014

இராசாவே உங்கள் வைரவிழா வந்தபோதே இன்று வாழ்த்துக் கூற நீங்கள் உயிருடன் இல்லையே என்செய்வோம் [illegible]

[illegible]

[illegible]

[illegible]

அன்னாரின் பிரிவுத் துயர் கேட்டு ஓடோடி வந்[illegible] ஆறுதல் கூறி, பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அன்புள்ளங்கள் அனைவர்க்கும் [illegible] இருகரம் கூப்பி இதயம் நெகிழ்ந்த நன்றியறிந்தலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரின் ஆத்மாசாந்தியடைய நயினை நாகபூசணியம்மாளை வேண்டி நிற்கின்றோம்.

அம்மன் வீதி, யாழ்ப்பாணம். (52532)(12.4) மூன்றாம் மாத முடிவினிலே மீண்டெழாத்துயரினிலே சகோதரர்கள், மைத்துனர்கள்.

# 3 தினங்களுக்குள் 60 குர்திஷ் கிராமங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் வசம்

## ஆயிரக்கணக்கான குர்துக்கள் துருக்கியில் தஞ்சம்

கடந்த 3 தினங்களுக்குள் சிரியாவில் குர்திஷ் இன மக்கள் அதிகம் வசிக்கும் 60 கிராமங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் வசம் சிக்கியிருப்பதாகவும் பல ஆயிரக்கணக்கான மக்கள் அயல் நாடான துருக்கியில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும் அண்மையில் சிரியாவிலுள்ள கோபானி மற்றும் அயன் அல் அரஃப் ஆகிய முக்கியநகரங்களையும்ஐ.எஸ். ஐ.எஸ். கைப்பற்றியுள்ளது.

கடந்த சில தினங்களுக்குள் சிரியாவிலுள்ள குர்து இனத்தினர் ஐ.எஸ்.ஐ.எஸ். இனால் பெரிய மனித அவலத்தைச் சந்திக்க நேர்ந்துள்ளது என்றும் - இதனால் தமக்கு சர்வதேசத்தின் ஆதரவு தேவை எனவும் ஈராக்கை சேர்ந்த குர்து இனத் தலைவர் மசூத் பர்சானி அழைப்பு விடுத்துள்ளார். இந்த நிலையில் சிரிய எல்லையிலுள்ள கோபானி நகர் ஐ.எஸ்.ஐ.எஸ். இடம் சிக்கியிருப்பதால் துருக்கி தனது எல்லையைத் திறந்திருப்பதுடன் அகதிகளை சன்லி யுஃபா மாகாணத்துக்குள் நுழையவும் அனுமதி அளித்துள்ளது.



3 வருடங்களாக நீடித்து வரும் சிரிய உள்நாட்டுப் போரில் துருக்கியில் மாத்திரம் 3 மில்லியன் சிரிய அகதிகள் பதிவு செய்யப் பட்டுள்ளதுடன் கடந்த மாதம் மட்டும் 8 லட்சத்து 15 ஆயிரம் சிரிய அகதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஐ.நா. அறிக்கைப்படி 6.5 மில்லியன் மக்கள் சிரியாவுக்குள் இடம்பெயர்ந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)



ஈராக்கின் மோசுல் நகரத்தில் இருந்த துருக்கியத் தூதரகத்திலிருந்து ஐ.எஸ் எனப்படும் இஸ்லாமிக் ஸ்டேட் பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட 49 பிணைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது துருக்கி திரும்பியுள்ளனர். துருக்கியின் தென்பகுதி நகரமான சன்லியூர்பாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் 49 பேரும் இப்போது அங்காராவில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உலகளாவிய இணையத்தள இணைப்பிலிருந்து விலகவுள்ள ரஷ்யா

மொஸ்கோ, செப்.22

மேற்கத்திய நாடுகள், தன்னை உளவு பார்க்கக் கூடிய ஆபத்து இருப்பதாக அஞ்சும் ரஷ்யா, உலகளாவிய இணைய சேவைகளிலிருந்து, விடுவித்துக்கொள்ள இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அடுத்த ஆண்டிலிருந்து இந்த திட்டம் நடைமுறைக்கு வர உள்ளதாக தெரிகிறது.

அமெரிக்க தொழில்நுட்பத்தில்உருவான இணையத்தளத்தைப்பயன்படுத்துவதன்மூலம், அமெரிக்கா, தனது நாட்டின் இரகசியங்களை உளவு பார்க்க வாய்ப்புள்ளதாகச் சந்தேகப்படும்ரஷ்யா, தன்னை உலகளாவிய, இணையத்தளத்திலிருந்து விடுவித்துக்கொண்டு தனித்துசெயற்பட முடிவு செய்துள்ளது என்று தகவல்கள்தெரிவிக்கின்றன.(வ)

## ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக இணைந்தன உலக நாடுகள்

### ஒபாமா தெரிவிப்பு



வொஷிங்டன், செப்.22

சிரியா, ஈராக் நாடுகளில் பெரும்பான்மையான பகுதிகளைக் கைப்பற்றியுள்ள இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகளுக்கு எதிராக உலக நாடுகள் ஒன்றிணைந்துள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வொஷிங்டனில் அவர் கூறியதாவது:-

"இது அமெரிக்காவின் தனிப்பட்ட சண்டையல்ல. சிரியா-ஈராக் போன்ற நாடுகளில் எங்களது தரைப் படையினர் சண்டையிட நான் உறுதி பூணவில்லை. எதிர்வரும் காலங்களில் கூட்டணி நாடுகள் பாதுகாப்புடன் இருப்பதற்காக உதவிகளை வழங்கத் தயாராக உள்ளோம்.

ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக எங்களது விமானங்களை உபயோகப்படுத்த உள்ளோம்.

கூட்டணி நாடுகளின் வீரர்களைப் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராகத் தயார்படுத்தவும், ஆயுத உதவிகளை வழங்கவும் உள்ளோம்.

பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக உலகநாடுகள் அடங்கிய குழுவை வழிநடத்தத் தயாராக உள்ளோம். இந்தக் குழுவில் இடம்பெறும் நாடுகள், அதிக அளவிலான தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும் - என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

நியூயோர்க்கில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள - ஐ.நா.சபை கூட்டத்தில் இதுகுறித்து ஒபாமா வலியுறுத்தி பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

## நியூஸிலாந்து பிரதமராக ஜோன் கீ மீண்டும் தெரிவு

வெல்லிங்டன், செப்.22



நியூஸிலாந்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலில் தேசியக் கட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, தற்போதைய பிரதமர் ஜோன் கீ தனது பதவியைத் தக்க வைத்துள்ளார். அவர் மூன்றாவது முறையாக பிரதமர் பதவியை வகிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஜான் கீ, தலைமையிலான அரசு சிறப்பாக கையாண்டதற்கு பரிசாக மக்கள் இந்த வெற்றியை அவருக்கு அளித்துள்ளனர்.

இந்த வெற்றி குறித்து ஆக்லாந்தில் செய்தியாளர்களிடம் ஜோன் கீ கூறுகையில் :

"இது எங்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்திருந்தவர்களின் வெற்றி. நியூஸிலாந்துக்கு பிரகாசமான எதிர்காலத்தைஉருவாக்கநினைத்து தேசிய கட்சிக்கு வாக்களித்தவர்களின் வெற்றி. சைமன் வில்லியம் பில் இங்கிலீஷ், சிறந்த துணை பிரதமராக செயற்பட்டார் - என்றார். இந்தத் தேர்தலில் குறைந்த அளவிலான வாக்குகள் எண்ணப்பட இருந்த நிலையில், நியூசிலாந்து தேசியக் கட்சி .45 சதவீத வாக்குகளையும், முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 25 சதவீத வாக்குகளையும் பெற்றிருந்தன. (வ)

# தொடர் குண்டு வெடிப்பு ஈராக்கில் 31 பேர் சாவு

பக்தாத், செப்.22

ஈராக்கில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள் நிகழ்த்திய தொடர் குண்டு வெடிப்பில் 31 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து பொலிஸார் கூறியதாவது:-

பக்தாத்தின் மத்தியிலுள்ள கரதா மாவட்டத்தில் அல் முபாரக் மசூதி உள்ளது. இங்கு நண்பகலில் தொழுகை நடைபெற்றுக் கொண்டிருந்த போது, மசூதிக்கு அருகே வெடிகுண்டு கள் நிரப்பிய கார் வெடிக்கச் செய்யப்பட்டது. அதில் 9 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர்.

நஹ்ரவான், பாயா ஆகிய நகரங்களிலுள்ள சந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகளில் 9 பேர் உயிரிழந்தனர். 23 பேர் காயமடைந்தனர்.



பக்தாத்தின் தெற்குப்பகுதியிலுள்ள மஹ்மூதியா பகுதியில் நிகழ்த்தப்பட்ட மற்றொரு கார்க் குண்டுவெடிப்பில் 3 உயிரிழந்ததுடன், 10 பேர் காயமடைந்தனர். கிர்குக் நகரில் நடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் குண்டு வெடிப்பில், 10 பேர் உயிரிழந்ததுடன், 14 பேர் காயமடைந்தனர்.

பெரும்பாலான தாக்குதல்கள் தலைநகர் பக்தாத்தில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நிறைந்த பகுதிகளை குறி வைத்து நிகழ்த்தப்பட்டுள்ளன.

ஈராக்கில் பல்வேறு பகுதிகள் ஐ.எஸ். அமைப்பினரின் கட்டுப்பட்டில் உள்ள நிலையில்- அந்த அமைப்புடன் தொடர்புடைய பயங்கரவாதிகளே தாக்குதலில் ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## வெள்ளை மாளிகையில் மேலும் ஒருவர் அத்துமீறி நுழைய முயற்சி



வொஷிங்டன், செப்.22

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் மேலும் ஒருவர் அத்துமீறி நுழைய முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உமர் காஞ்சல்ஸ் என்பவர் வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு வேலியைத் தாண்டி உள்ளே குதித்துள்ளார். பாதுகாவலர்களின் எச்சரிக்கையும் பொருட்படுத்தாமல் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் அறையை நோக்கி சென்ற அவரை பாதுகாப்பு படையினர் சுற்றி வளைத்து கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்று முடிந்து ஒரு நாள் கடந்த நிலையிலேயே மேலும் ஒருவர் வெள்ளை மாளிகையில் அத்து மீறி நுழைய முயன்றுள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை நோட்டமிட்ட அவர் பின்னர் தனது வாகனத்தில் வந்து வெள்ளை மாளிகையில் நுழைய முற்பட்டுள்ளார். (வ)

## சீன முதலீட்டில் வடகிழக்கு மாநிலங்களுக்கும் பங்கு வேண்டும்

### அஸாம் முதல்வர் கோரிக்கை

இந்தியாவில் சீனா மேற்கொள்ளவிருக்கும் முதலீட்டில், வட கிழக்கு மாநிலங்களுக்கும் பங்குதர வேண்டும் என்று மத்திய அரசுக்கு அஸ்ஸாம் முதல்வர் தருண் கோகோய் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக குவாஹாட்டியில் செய்தியாளர்களிடம் அவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பேசியதாவது:

குஜராத்தில், பல கோடி ரூபா முதலீடு செய்யப் போவதாக சீனா அறிவித்துள்ளது. அதில், அஸாம் மாநிலத்துக்கும் பங்குதர வேண்டும்.

வட கிழக்கு மாநிலங்களும், இந்தியாவின் ஒரு பகுதிதான். ஆகையால், வடகிழக்கு மாநிலங்களுக்கும், அஸாமுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். சீன ஜனாதிபதியுடனான பேச்சின்போது, பிரம்மபுத்திரா நதி மீது அந்த நாடு அணைகள் கட்டி வருவதற்கு இந்தியா கவலை கொள்வதுடன், அது குறித்து வருத்தமும் தெரிவித்திருந்தார் மோடி-என்று தெரிவித்திருந்தார் தருண் கோகாய். சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங், இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்த போது, இந்தியாவில் அடுத்த 5 ஆண்டுகளில் சீனா 20 பில்லியன் டொலர்கள் (ரூ.1.21 லட்சம் கோடி) முதலீடு செய்யும் என்று அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



## காஷ்மீர் வெள்ள மீட்பு பணிகளை நிறைவு செய்தது இராணுவம்

ஜம்மு, செப்.22

ஜம்மு காஷ்மீரில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்பு பணிகளை நிறைவு செய்துள்ளது இந்திய இராணுவம். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில், தொடர் மழையால் அங்குள்ள ஆறுகளில் வெள்ளம் பெருக்கு எடுத்து ஓடின. இந்த வெள்ளப் பெருக்கில் 230 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

லட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்தனர். வெள்ளம் பாதித்த பகுதிகளில் இராணுவத்தினர் தீவிர மீட்புப் பணிகளில் ஈடுபட்டு லட்சக்கணக்கான மக்களைப் காப்பாற்றினார்கள்.

30 ஆயிரம் இராணுவ வீரர்களும், 84 ஹெலிகள் மற்றும் இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானங்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டன. அதேபோல் தேசிய மீட்புப் படையினரும் இந்த பணியில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில், இது தொடர்பாக இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்- 'கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்ற மீட்பு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. அதேநேரம், நிவாரணம் மற்றும் மருத்துவ உதவிகள் செய்யும் பணிகளில் தொடர்ந்து இராணுவம் ஈடுபடும் என்று கூறப்பட்டுள்ளது. (வ)

## இலங்கைத் தமிழர் விவகாரத்தில் கலைந்தது பா.ஜ.கவின் வேடம்

### தா.பாண்டியன் தெரிவிப்பு

சென்னை, செப்.22

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் பா.ஜ.க. வேடம் கலைந்து விட்டது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்தார்.

ஈரோட்டில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் கலந்து கொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு இன ஒழிப்பு கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது. ஏற்கனவே இருந்த காங்கிரஸ் அரசு இலங்கை நட்பு நாடு. எனவே அங்கு நடக்கும் உள்நாட்டுப் போரில் தலையிட முடியாது என்று கூறியது.

இதனையே தற்போது பதவியில் இருக்கும் பா.ஜ.க. அரசும் சொல்கிறது. உலக நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஐ.நா. சபை மூலம் இலங்கையில் நடைபெற்ற இன ஒழிப்பு பற்றி விசாரணை நடத்த முயற்சி மேற்கொண்டும். இலங்கை அதற்கு ஒத்துழைப்பு அளிக்கவில்லை.

தமிழகமீனவர்களைதொடர்ந்து இலங்கை கடற்படை தாக்கி வருகிறது.

இந்தநிலையில் இலங்கை தலைநகர் கொழும்பில் நடைபெறும் ஆசிய அரசியல் தலைவர்கள் மாநாட்டில் தமிழக பா.ஜ.க. பொறுப்பாளர் முரளீதரராவ் பங்கேற்றுள்ளார்.

இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த மாநாட்டில் பா.ஜ.க. அரசின் பிரதிநிதிகள் பங்கேற்றதன்மூலம்இலங்கை விவகாரத்தில் பா.ஜ.கவின் வேடம் கலைந்து விட்டது. இவ்வாறு தா.பாண்டியன் கூறினார். (வ)

## செவ்வாய்க்கிரக நீள் வட்ட பாதையை நெருங்கிய மங்கள்யான்

டில்லி, செப்.22

மங்கள்யான் விண்கலம் செவ்வாய்க் கிரகத்தின் நீள்வட்டப் பாதையைநெருங்கிவருவதால், அதன் இஞ்சினை இயக்குவதற்கான ஆயத்த பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் சார்பில் செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்காக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மங்கள்யான் விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

அந்த விண்கலம் தனது பயண தூரத்தின் கடைசி கட்டத்தில் உள்ளது.

மங்கள்யான் விண்கலம் இன்று செவ்வாய்க் கிரகத்தின் நீள் வட்டப் பாதையை அடையும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

இதனால் விண்கலத்தை செவ்வாய் கிரகத்தின் நீள் வட்டப் பாதையில் நிலை நிறுத்துவதற்காக, விண்கலத்தின் இஞ்ஜினை இயக்குவதற்கான பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.


திட்டமிட்டபடி நாளை மறுதினம் புதன்கிழமை மங்கள்யான் விண்கலம், செவ்வாய் கிரகத்தின் நீள் வட்டப் பாதையில் நிலைநிறுத்தப்படும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் மங்கள்யான் தனது ஆராய்ச்சி பணியை ஆரம்பிக்கும் என்று தெரிகிறது. (வ)

# மரண அறிவித்தல்

## தம்புத்துரை விஜயேந்திரன்

### (அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டமிடல் பிரிவு, பிரதேச செயலகம் - கரவெட்டி)



உடுத்துறையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட **தம்புத்துரை விஜயேந்திரன்** (அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டமிடல் பிரிவு, பிரதேசசெயலகம் - கரவெட்டி) நேற்று (21.09.2014) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்புத்துரை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், சிற்றம்பலம் - சறோஜா தம்பதியரின் அன்பு மருமகனும், சுபாசினியின் (ஆசிரியை, யா/பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம்) ஆருயிர்க் கணவரும், கீர்த்திகன் (மாணவன், யா/பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்), ஆர்த்திகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேந்திரா, சற்குணராசா (கனடா), சஞ்சிகா (நோர்வே), சுவேதிகா (கலைப்பீட முதலாம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சாந்தி, ரமேஸ்பாபு (சுவிஸ்), சுகந்தினி, சுதர்சினி (ஆசிரியை, யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), கஜிதா, நிவேந்தினி (கனடா), நந்தகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுஜிதா (சுவிஸ்), ஜெயந்திரன் (அதிபர், உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலை), சுதந்திரன் ஆகியோரின் சகலனும் ஆவரர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2014) திங்கட்கிழமை கொடுக்கிளாய், உடுத்துறையில் அமைந்துள்ள அவரது தந்தையாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3.00 மணிக்கு உடுத்துறை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொடுக்கிளாய்,
உடுத்துறை, தாளையடி.
TP: 077 079 7040, 077 933 3941

தகவல்:
**குடும்பத்தினர்.**

(சி15915) (12.6)

# ஜனாதிபதி தேர்தல் குறித்து தீர்மானம் எடுக்கவில்லை

## ஐ.தே.க. கூறுகின்றது

கொழும்பு, செப்.22

ஜனாதிபதித் தேர்தலில் யாரைக் களமிறக்குவது என்பது குறித்து இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கவீல்லை என்று தெரிவித்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் கபீர் ஹாசீம்;

"கட்சியின் தேசியத் தலைவர் ரணில் விக்ரமசிங்க தேர்தலில் போட்டியிடுவார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை"- என்று குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது;

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரைக் கட்சியின் சார்பில் களமிறக்குவது என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. எவ்வாறெனினும், முன்னாள் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கும் திட்டங்கள் கிடையா. அதற்கு ஆதரவளிக்கவும் தீர்மானிக்கப்படவில்லை"- என்று தெரிவித்துள்ளார்.(ற)



கொழும்பு சிறுவர்களின் சித்திரப் போட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் விகாரமகாதேவி பூங்கா சுற்றாடலில் நடைபெற்றது. கொழும்பில் குறைந்த வசதிகள் உள்ள வீடுகளில் வசிக்கும் 5 ஆயிரம் சிறுவர் சிறுமியர் இந்தச் சித்திரப் போட்டியில் கலந்துகெண்டனர். (ற)

# எதிர்க்கட்சிகளின் மாயைகள் உடைத்தெறியப்பட்டுள்ளன

## ஊவா தேர்தல் குறித்துக் கூறுகின்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ

கொழும்பு, செப்.22

ஊவா மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக எதிர்க்கட்சிகள் கட்டியெழுப்பிய மாயைகள் தேர்தல் முடிவுகளுடன் உடைதெறியப்பட்டுள்ளன என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னோக்கிய பயணத்தை நிறுத்த முடியாது. ஊவா தேர்தல் முடிவுகளை பார்க்கும் போது எதிர்க்கட்சிகள் கடந்த காலங்களில் கட்டியெழுப்பி வந்த மாயைகள் எல்லாம் உடைத்தெறியப்பட்டுள்ளன. தீர்மானிக்கும் சக்தி நாமே என ஜே.வி.பி கூறியதுடன் ஜே.வி.பியுடன் இணைந்து கூட்டணி ஆட்சியை ஏற்படுத்தப் போகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

இப்படியான பல மயக்கத்தை ஏற்படுத்தும் மாயைகளை எதிர்க்கட்சிகள் கட்டியெழுப்பின. இவ்வாறான பல நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டாலும் அவர்களால் ஆளும் கட்சியைத் தோற்கடிக்க முடியவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கத்துடன் நாட்டுக்கு மக்கள் மேற்கொள்ள இருக்கும் சேவைகளின் பயணம் முற்றுபெறாது.

மேலும் வெற்றிகளை பெற்று முன்னோக்கி செல்லும். அதற்கான நற்செய்தியாகவே ஊவா தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன"- என்று தெரிவித்துள்ளன.

அதேவேளை, அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி ஊவா மாகாண சபைத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட்டபோதும் ஒரு ஆசனத்தையும் கைப்பற்றவில்லை. மிகக் குறைவான வாக்குகளையே பெற்றது. மொனராகலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது. எனினும் அந்த கட்சியின் உறுப்பினர்கள் எவரும் தெரிவாகவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.(ற)

# ஜனாதிபதி தேர்தல் நடத்தினால் நிச்சயம் வழக்குத் தொடரப்படும்

## சரத் என் சில்வா எச்சரிக்கை



கொழும்பு, செப்.22

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால் நிச்சயமாக வழக்குத் தொடர்வேன் என்று எச்சரித்துள்ளார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ நவம்பர் மாதம் 19ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிவித்தால் நிச்சயமாக வழக்குத் தொடரப்படும். அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. 18ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னதாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாம் தவணைக்காகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். எனவே மூன்றாம் தவணைக்காக ஜனாதிபதியால் தேர்தலில் போட்டியிட முடியாது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் வரையில் நான் காத்திருக்கின்றேன். இந்த வழக்கு மிகவும் முக்கியமானதாக அமையும். ஏற்கனவே வழக்குக்குத் தேவையான ஆவணங்கள் தயார் படுத்தப்பட்டுள்ளன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஐ.தே.க. உறுப்பினர் மீது வாள்வெட்டு

கொழும்பு, செப்.22

ஐக்கிய தேசியக்கட்சியின் ஹல்து முல்லை பிரதேச சபை உறுப்பினர் நிமல் கருணாரத்னவின் மீது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் வாளால் வெட்டியுள்ளனர்.

படுகாயமடைந்த அவர், ஹப்புத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வாள் வெட்டு மேற்கொண்ட குழுவில் ஹல்துமுல்லை பிரதேச சபையின் தலைவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு

கொழும்பு, செப்.22

மொரட்டுவ அங்குலான பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று நண்பகல் 12.30 மணி அளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதன் பின்னர் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அங்குலான ரயில் நிலைய வீதியின் விகாரைக்கு அருகில் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.(ற)

# ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை மன்றில் சமர்ப்பியுங்கள்

## அரசிடம் கோரிக்கை விடுக்கவுள்ளது ஜே.வி.பி.

கொழும்பு, செப்.22

ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கவுள்ளது ஜே.வி.பி.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம், 2005ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்குழுக்களின் விசாரணைகள் மற்றும் அதற்கான பரிந்துரை அறிக்கைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கோரிக்கை விடுக்கவுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அனுரகுமார திஸாநாயக்க,

"அடுத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்து கேள்வி எழுப்பப்பட உள்ளது. பல மில்லியன் ரூபா நிதி இந்த விசாரணைகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் 17 ஜனாதிபதி ஆணைக்குழுக்களை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறுவியிருந்தார்.

இந்த ஆணைக்குழுக்களுக்காக 272 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியால் விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு ஆணைக் குழுக்கள் நிறுவப்பட்ட போதிலும், அதற்கு அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# டி.பீ.ஏக்கநாயக்கவின் காலணிக்கு ரூபா 13 ஆயிரத்து 200 கோடி கேள்வி!

கொழும்பு, செப்.22

"என்னுடைய சப்பாத்து ஜோடியை, இங்கிலாந்திலுள்ள நிறுவனமொன்று 1,000 மில்லியன் டொலருக்கு (13,200 கோடி ரூபா) கேட்கிறது. இது தொடர்பில், இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் எனக்கு அறிவித்தது. இருப்பினும், அவற்றைக் கொடுப்பதா, இல்லையா என்று நான் இன்னமும் தீர்மானிக்கவில்லை. இந்த சப்பாத்தை ஏலத்தில் விட்டால், நல்லதொரு வருமானத்தை ஈட்டலாம்" இவ்வாறு தெரிவித்துள்ளார் கலாசார அமைச்சர் டி.பீ.ஏக்கநாயக்க.

தற்போது அமைச்சரின் இந்தச் சப்பாத்து ஜோடி உலகப் பிரபலம் பெற்றுள்ளது. அடிகள் கழன்றுள்ள இந்தச் சப்பாத்தை அணிந்தே, கடந்த சில தினாங்களுக்கு முன், இலங்கைக்குப் பயணம் செய்திருந்த சீன ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சர் சென்று அமர்ந்திருந்தார். அதையடுத்தே இந்தச் சப்பாத்துக்கள் உலகப் பிரபல்யம் பெற்றது.



இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர்;

"என்னுடைய சப்பாத்து ஜோடி மிகவும் பழையது. சீன ஜனாதிபதியை சந்திக்கும்போது நான் அணிந்திருந்த வெள்ளை நிற ஆடைக்கு ஏற்ற வகையில் இந்த வெள்ளை நிற சப்பாத்து ஜோடியை அணிந்து சென்றேன். இவற்றை நான் நீண்ட காலமாக அணிந்திருக்கவில்லை. சீன ஜனாதிபதி வந்தபோதே அணிந்தேன். அதனால், அவற்றின் அடிகள் கழன்றிருப்பதை நான் அறிந்திருக்கவில்லை. இதனால், அவற்றை அணிந்து சென்றேன். போகும் வழியில் அடிகள் கழன்றுவிட்டன. இருப்பினும், சப்பாத்தை மாற்றிக்கொண்டு செல்வதற்கான நேரம் போதாமையால் அப்படியே சென்றுவிட்டேன். ஒரு முறை டட்லி சேனாநாயக்காவுக்கும் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றதாம். அவர் டை, கோட் அணிந்து செல்லும் போது சப்பாத்து ஜோடியின் அடி கழன்றுவிட்டதாம். அவர் அவற்றைக் கழற்றி வீசிவிட்டுச் சென்றிருந்தாராம். இதெல்லாம் பெரிய விடயமே இல்லை"- என்று கூறியிருந்தார். (ற)

# சீதனமா

## என்ன குடுக்கிறாங்க ?



சவுதியில் ஒருவர் தன் தங்கையின் திருமணத்துக்கு அப்பிள் ஐ போன் - 6 இனை சீதனமாக வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். தனது தங்கையின் திருமணத்தின் போது அவருக்கு சிறப்பு பரிசு அளிக்கவிருந்த தாகவும், தற்போது அப்பிள் ஐ போன் - 6 இனை பரிசளிக்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இப்படியும் நடக்கிறது

ஐந்து மனைவிகளால் மிரட்டலுக்கு உள்ளாகி பாலியல் உறவுக்குட்படுத்தப்பட்ட நைஜீரிய தொழிலதிபர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நைஜீரியாவின் பெனு மாநிலத்தின் உக்புகு பகுதியை சேர்ந்தவர் உரோகோ ஓனோஜா. தொழிலதிபரான இவருக்கு மொத்தம் ஆறு மனைவிகள்.



சம்பவத்தன்று இரவு உக்புகு நகரிலுள்ள மதுபானசாலையொன்றில் இரவு முழுதும் நன்கு குடித்துவிட்டு அதிகாலையில் அவர் வீடு திரும்பியுள்ளார். இதன்போது கடைசி மனைவியுடன் உடலுறவு செய்யும் வேட்கை தோன்றியுள்ளது. இதையடுத்து இளம் மனைவியை உடலுறவு கொண்டுள்ளார். கடைசி மனைவியை மட்டும் உரோகோ அழைத்து செல்வதை மற்றொரு மனைவி பார்த்துவிட்டார்.

அவர் பிற மனைவிகளையும் தட்டி எழுப்பி, உரோகோவும், கடைசி மனைவியும் இருந்த படுக்கையறைக்குள் அத்துமீறி நுழைந்துள்ளனர். தங்களது கையில் இருந்த கட்டைகளால் உரோகோவை அடித்துள்ளனர். கடைசி மனைவிக்கு மட்டும் நீங்கள் சிறப்புச் சலுகை வழங்கலாம். நாங்கள் என்ன ஏமாளிகளா என்று அவரைத் திட்டியுள்ளனர்.

இதன்பின்னர் கத்தியை காண்பித்து மிரட்டி, மரியாதையாக எங்கள் அனைவருடனும் உறவு வைத்து, நாங்கள் அனைவரும் சமம்தான் என்பதை உடனடியாக நிரூபிக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

இந்த எதிர்பாராத அதிரடியால் மிரண்டு போன உரோகோ, மனைவிமார்களின் கோரிக்கைக்கு சம்மதித்தார். இதன்பிறகு ஐந்து மனைவிகளுடனும், ஒவ்வொருவராக உறவு வைக்க ஆரம்பித்துள்ளார். நான்கு மனைவிகளுடன் உறவு வைத்து முடித்ததும், உரோகோ திடீரென சுருண்டு விழுந்து உயிரிழந்தார். அடுத்தடுத்து உடலுறவு வைத்ததால் இதயத்துக்கு இரத்த ஓட்டம் அதிகரித்து மாரடைப்பு ஏற்பட்டு உரோகோ உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. கணவன் இறந்ததும், கடைசி மனைவியை தவிர பிற மனைவிகள் அருகேயுள்ள காடுகளுக்குள் தப்பியோடிவிட்டனர்.

இந்த தகவல் கிடைத்ததும் விரைந்து வந்த பொலிஸார் விசாரணை நடத்தி, தப்பியோடிய 2 மனைவிகளைக் கைதுசெய்தனர். அவர்கள் மீது பலாத்காரம், கொலை ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது.



# போட்டியில்

## முட்டி மோதுகின்றனர்

தெலுங்குத் திரையுலகத்தைப் பொறுத்தவரை தற்போது முன்னணி கதாநாயகிகளிடையே பலத்த போட்டி நிலவி வருகிறது. சமந்தா, தமன்னா, ஸ்ருதிஹாசன், ஹன்சிகா, காஜல் அகர்வால் ஆகியோர் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு நடித்து வருகிறார்கள். அந்தப் போட்டி நடிப்பில் மட்டும் இல்லாமல், கவர்ச்சி விடயத்திலும் இருப்பதுதான் பெரிய விடயமே. இதனால், ரசிகர்களுக்கு ஒரு பக்கம் கொண்டாட்டமாகத்தான் இருக்கிறது.

பொதுவாகவே தெலுங்குத் திரையுலகில் காதாநாயகிகளுக்கான ஆடை அலங்காரங்கள் மிகச் சிறப்பாக இருக்கும். தமிழ்ப் படங்களை விட தெலுங்கில் கதாநாயகிகள் ஆடை விடயத்தில் தனிக் கவனம் செலுத்துவார்கள். அதில் கவர்ச்சி ஆடைகளும் அதிகம் இருக்கும். மகேஷ் பாபு, தமன்னா நடித்து வெளிவந்த 'ஆகாடு' படத்தில் ஸ்ருதிஹாசனும் ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார். படம் முழுவதும் தமன்னா அவருடைய அழகான தோற்றத்தாலும், கவர்ச்சிகரமான ஆடையாலும் வந்து அசத்தினாலும், ஸ்ருதிஹாசன் ஒரே ஒரு பாடலில் தமன்னாவை முந்தி விட்டார்.

தமன்னா படம் முழுவதும் கஷ்டப்பட்டு நடித்து பெயர் வாங்கினாலும், ஒரே பாடலில் மொத்த ரசிகர்களையும் ஸ்ருதிஹாசன் ஈர்த்திருப்பது எவ்வளவு பெரிய விடயம் என்று திரையுலகினரே பாராட்டுகிறார்களாம்.

இப்படி நடக்கும் என்று தெரிந்ததுதான் தமன்னா, படத்தின் படப்பிடிப்பில் இயக்குநருடனும், நாயகன் மகேஷ் பாபுவுடனும் சண்டை போட்டாரோ தெரியவில்லை என்கிறார்கள்.

# ஜிகர்தண்டாவை

## எண்ணி வேதனையில் இயக்குநர்




ஜிகர்தண்டா படத்தின் 50 ஆவது நாளுக்கு ஒரு பத்திரிகை விளம்பரம்கூட இல்லை என்று இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

சித்தார்த், சிம்ஹா, லட்சுமி மேனன் உள்ளிட்ட பலர் நடிப்பில் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் வெளியான படம் ஜிகர்தண்டா.

ஜிகர்தண்டா மக்கள் மத்தியிலும், விமர்சகர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றது. சிம்ஹா நடிப்புக்கு பலரும் பாராட்டுத் தெரிவித்து இருந்தனர். இந்த நிலையில், ஜிகர்தண்டா வெளியாகி 50 ஆவது நாள் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்தது. இதற்கு ஒரு விளம்பரம் கூட இல்லை என்று கார்த்திக் சுப்புராஜ் தெரிவித்துள்ளார்.

# படித்துப் பாருங்கள் சிந்திப்பீர்கள் !



பணக்காரனாகிவிட்டான் பாகன், இன்னும் பிச்சையெடுக்கிறது யானை.

ஆணி குத்திய கால்களுடன், செருப்புத் தைக்கும் சிறுவன்.

ஆயிரம் பெற்றோர்கள் இருந்தும், முத்தமிட ஒரு குழந்தை கூட இல்லை – முதியோர் இல்லத்தில்.


அழைத்த குரலுக்கு ஓடி வர, ஆள் இல்லாத நெடுஞ்சாலை விபத்தில், உயிருக்குப்போராடி இறந்துக்கிடந்தார் அவசர ஊர்தி (அம்புலன்ஸ்) ஓட்டுநர்.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து, எதிர்க்கட்சியினர் எரித்துவிட்டனர், ஏழைக்குடிசைகளை.

பட்டினிச் சாவை எதிர்த்து, ஊர் மக்கள் இன்று உண்ணாவிரதம்.

அதிக வலியெடுக்கிறபோது, 'அம்மா' என்று கத்திவிடுகிறது, அநாதைக் குழந்தை.

# பெண் கல்வியின் முக்கியத்துவம்



கல்வி கற்பது என்பது ஒவ்வொரு ஆண், பெண் இருவர் மீதுள்ள கட்டாயக் கடமையாகும். கல்வி ஒரு மனிதனை அறிவுடையவனாகவும், பண்பாடுள்ளவனாகவும், ஒழுக்கமுடையவனாகவும் மாற்றுகிறது.

பெண் என்பவள் ஒரு குடும்பத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கிறாள். குறிப்பாக, தன்னுடைய குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் பண்பாட்டுக்கும் அடித்தளம் இடுபவளே பெண்ணாகிய தாய்தான். ஒரு குழந்தை முதலில் அறிமுகம் ஆவது தனது தாயாரிடம்தான் அந்தக் குழந்தைக்கு இரண்டு வருடங்கள் பாலூட்டுவதுடன் இறைபக்தியையும், நல்லொழுக்கத்தையும் சேர்த்தே ஊட்டுகிறாள்.

எனவே ஒவ்வொரு ஆண் பெண்ணுக்கும் முதல் பள்ளிக்கூடமாகவும் பாலகப்பருவ ஆசிரியையாகவும் திகழ்பவள் தாயாகிய பெண்தான். அந்தத் தாய்க்கு நல்ல அறிவும், கேள்வி ஞானமும் இருந்தால்தான் அவளிடம் பாடம் கற்கும் குழந்தைகளுக்கும் கிடைக்கும் என்பதைத்தான் 'தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை' என்கிறார்கள். ஆகவே, அவளுக்கு கல்வியறிவும் கேள்வி ஞானமும் வேண்டுமென்றால் கல்வி மிக அவசியமாக இருக்கிறது.

ஒரு பெண் கல்வி கற்பதன் மூலம் அவள் தன்னை முதலில் திருத்திக் கொண்டு, மதா... அனுமதிக்காத விடயங்களில் இருந்து த... பாதுகாத்துக் கொள்கிறாள்.

தனது கணவனோடு எப்படி நடந்து கொ... வேண்டும் என்பதை அவள் அறிந்து கொ... தன் மூலம் குடும்பத்தில் ஏற்படும் அதிக... பிரச்சனைகள் தீர்ந்து சந்தோசமான குடும்ப சூழ்நிலை உருவாகி ஒரு ஆண் சமூகத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சிறப்பாக செய்யப் பெண் உதவியாக இருப்பாள்.

தனது உறவினர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து உறவினர்களுக்கு மத்தியில் ஒருங்கிணைப்பை உருவாக்குவதன் மூலம் சமூகத்திலும் மறுமலர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. தன்னுடைய குழந்தைகளை முறையாக வளர்த்து அதன் மூலம் எதிர்கால சமுதாயம் உருவாகுவதில் அதிக பங்கு வகிக்கின்றார்கள். பெண்கள் தங்களது நியாயமான உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். பெண்களுக்கே உரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நால்வகைக் குணங்கள் கல்வி அறிவால் மேலும் பலப்படும். பெண்களுக்குக் கல்வியறிவு நிச்சயம் தேவையாகும். அது முழுச் சமுதாய முன்னேற்றத்திற்கு உதவும். இன்று பெண்கள் பல்வேறு வழிகளில் அலைக்கழிக்கப்படுகிறார்கள் . வரதட்சணைக் கொடுமை, அடக்குமுறை, பாலியல் துன்புறுத்தல்கள், சிறைக் கொடுமைகள் போன்று எத்தனை எத்தனையோ சுமைகளைச் சுமந்துக் கொண்டிருக்கிறார்கள். இவைகளிலிருந்து விடுபட்டு நமது நியாயமான கோரிக்கைகளைப் பெறுவதற்கு பெண்களுக்கு கல்வி மிக மிக அவசியமானதாக உள்ளது.

■ சோபனா





# பெண்களின் பாதுகாப்புக்கு இளைஞர்கள் மனதில் மாற்றம் வேண்டும்

■ மரகதம்

மங்கையராகப் பிறந்திடவே மாதவம் செய்திட வேண்டும்மா என்று பாடத்தில் எழுதிப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கின்றோம். மாதர் தம்மை இழிவு செய்யும் கொடுமையைக் கொளுத்துவோம் என்ற உணர்வு எத்தனை பேருடைய எண்ணத்தில் நிலைக்கிறது? சொல்லிக் கொடுப்பது ஒரு சடங்கு! அதைக் கற்றுக் கொள்வதும் ஒரு சடங்கு போல் ஆகிவிட்டது.

பெண்ணென்பவள் ஆணைப் போன்ற மனித ஜீவன். எந்தவித வேறுபாடுமின்றி எல்லா உரிமைகளும் கொடுக்கப்படல் வேண்டுமென்று எத்தனையோ சீர்திருத்தங்கள் தோன்றின. சிசுக் கொலை, பலதார மணங்கள் முதலான மூடவழக்கங்கள் எல்லாம் ஒழித்து பெண்களுக்குக் கல்வி தந்து, வேலை தந்து, சமவாய்ப்பு உருவாக்கிக் கொண்டிருக்கும் காலம் இது.

மாணவர்களிடையே சமூகப் பொறுப்புணர்ச்சியை உருவாக்கப்படல் வேண்டும். சமுதாயம் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? தான் வாழ்ந்தால் போதும்! என்று எண்ணுகிற மனப்பாங்கு ஒழிந்தாக வேண்டும். சமுதாயத்தின் இழிவைத் துடைப்பதற்கு ஒவ்வொருவருக்கும் பங்கு இருக்கிறது. குறிப்பாக இளைஞர்களின் பங்கு மிக அவசியம். அவற்றைக் கல்விக் கூடங்களில் கற்றுக் கொடுப்பதில்லை. பல அரசியல் இயக்கங்கள் இவற்றை எடுத்துச் சொல்வதில்லை. தொழிற் சங்கங்கள், சமுதாய இயக்கங்கள் முயன்றும் சமூகப் பொறுப்புணர்ச்சி என்பது இன்னும் வேர்விடவில்லை.

பெண்ணைக் கேலி செய்யும் ஒருவன் வீட்டில் ஒரு பெண்ணுக்குத் தான் மகனாகப் பிறந்திருக்கிறான். ஒரு அக்காவுக்கு தம்பியாக வளர்ந்திருக்கிறான். ஒரு தங்கைக்கு அண்ணனாக ஆளாகியிருக்கிறான். வீட்டில் அவர்களோடு, அந்தப் பெண்களோடு இருக்கையில் கேலி பேசவும், இடிக்கவும், பிடிக்கவும், அடிக்கவும் அதிகம் வாய்ப்புகள் உள்ள போது அங்கே அதைச் செய்வதில்லை. மற்ற பெண்களிடம் இப்படி நடந்து மரணத்தை வரவழைக்கிறார்களே ஏன்?

இன்று கல்விக் கூடங்கள் எல்லாம் மாணவர்களைப் பட்டதாரிகள் ஆக்கப் பாடுபடுகின்றன. அதிகாரிகளாக்கவும், மருத்துவர்களாக்கவும் பொறியியலாளர்களக்கவும் உழைக்கின்றன. வழக்கறிஞர்களாக்கவும், பேராசிரியர்களாக்கவும் பங்களிக்கின்றன. ஆனால் மாணவர்களை முதலில் மனிதர்களாக்கப் பாடுபடல் வேண்டும். மனிதாபிமான உணர்வுகள் நாளுக்கு நாள் சமூகத்தில் மங்கி மறைந்து கொண்டு வருகின்றன. கல்வி நிலையங்கள் மாணவர்களை மனிதர்களாக்கியிருந்தால் மனித சமுதாயத்தின் சரி பகுதியான பெண் நலம் மரணத்துக்குப் போராடியிருக்குமா? பெண் மாண்பு இவ்வளவு புறக்கணிக்கப் பட்டிருப்பதையும் கேவலப்படுத்தப் பட்டிருப்பதையும் காண முடியாது.

அன்றாடம் நமது நாட்டில் தயாரிக்கப்பட்டுத் திரையிடப்படும் திரைப் படங்கள் எல்லாம் மக்களுக்கு என்ன சொல்கின்றன? பெண்மையின் தியாகத்தை, மேன்மையைச் சொல்வதில்லை. பெண்களின் உழைப்பையும் பங்களிப்பையும் மறைப்பதோடு, பெண்களை அலங்காரப் பதுமைகளாகச் சித்திரித்து, சிங்காரித்து ஆண்கள் மனம் மகிழ ஆடவும் பாடவும் வைக்கின்றன. அவர்களுக்கு வருமானம் தரத்தக்கதாகவே அமைந்து விட்டது. உண்மையான மனிதப் பண்பாடு அழிவதைப் பற்றிய கவலையே இல்லை.

திரைப்படங்களில் வரும் எந்தக் கதையாக இருந்தாலும் அதன் காதல் காட்சிகளில் ஆண் பெண்ணைத் துரத்த வேண்டும் அல்லது பெண் ஆணைத் துரத்த வேண்டும். அவர்களுக்கு சமுதாயக் கவலையோ, அக்கறையோ, சிந்தனையோ எள்ளளவும் இருக்கக் கூடாது என்ற எச்சரிக்கையோடு தான் படங்களைத் தயாரிக்கிறார்கள். ஒரு நாட்டின் அவலங்களை ஒழித்து மேன்மையை உருவாக்கிட வேண்டிய இளைஞர்கள், இல்லாமையைப் போக்க, கல்லாமையை ஒழிக்க, சமூக அநீதிகளை அழித்து நீதியை நிலைபெறச் செய்யப் பங்களிக்க வேண்டிய மாணவர்கள், மகளிரைக் கேலி பேசி மரணத்தில் தள்ளும் கொடுமையைத் தடுப்பது எப்படி?

மனிதர்களை விலங்குகளாக்கும், புலன் உணர்வுகளைத் தூண்டும் திரைப்படங்களால், சின்னத்திரைகளால், பத்திரிகைகளால் இளைஞர்களின் வாழ்வு, சிந்தனை, செயல்கள் சீரழிக்கப்படுகின்றன. இந்நிலையை மாற்றிட, இதே மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் மனித மாண்பை வளர்த்திடல் வேண்டும்; மகளிர் மாண்பைக் காத்திடல் வேண்டும்.

# துரத்தியது காட்டு யானை உயிர் பிழைத்தனர் இருவர்

முல்லைத்தீவு, செப்.22

முல்லைத்தீவு ஐயன்கன் குளம் பிரதான வீதியில் பயணித்த இருவர் காட்டு யானைகள் துரத்தியதில் மயிரிழையில் உயிர் தப்பினர். இந்தச் சம்பவம் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது.

முல்லைத்தீவு ஐயன்கன் குளத்தில் இருந்து மல்லாவிக்குச் செல்லும் பிரதான வீதியின் தேறாங்கண்டல் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மல்லாவியிலிருந்து சைக்கிளில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த இருவரை தேறாங்கண்டல் காட்டுப்பகுதியில் வைத்துக் காட்டு யானை ஒன்று துரத்தியுள்ளது.

குறித்த இருவரும் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருவதுடன் பணிக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (த-55)

> “ தேறாங்கண்டல் காட்டுப் பகுதியில் வைத்துக் காட்டு யானை ஒன்று துரத்தியுள்ளது.



200 வருடம் பழமை வாய்ந்த காத்தார் சின்னக்குளம் சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு, வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்களுக்கு வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த அமைப்பின் தலைவரும், முன்னாள் நகரசபை உறுப்பினருமான தேசமான்ய. சு.குமாரசாமி மாணவர்களுக்கு உபகரணங்களை வழங்கினார். (த-421)

# தொழில் முயற்சியாளருக்கு ‘வேள்ட்விஷன்’ உதவியளிப்பு

கரட், பீற்றூட், வல்லாரை போன்றவற்றில் பப்படம் தயாரித்துச் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது பெற்ற முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பைச் சேர்ந்த திருமதி சாயிராணிக்கு ‘வேள்ட் விஷன்’ நிறுவனத்தினர் 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

பப்படத் தொழிலை மேம்படுத்தவென உற்பத்திப் பொருள் காய வைக்கும் இயந்திரத்தையும்- பொதியிடும் உபகரணத்தையும் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் வழங்கினார்.

கரட், பீற்றூட், வல்லாரை ஆகியவற்றிலிருந்து பப்படம் தயாரிப்பில் ஈடுபட்டமைக்காகத் தேசிய மட்டத்தில் இந்தப் பெண் இரண்டாம் இடம் பெற்று அண்மையில் கொழும்பில் வைத்து கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# பழைய முறிகண்டிக் கிராமத்தில் நாளாந்தம் யானைத் தொல்லை

துணுக்காய், செப்.22

துணுக்காய் பழைய முறிகண்டி கிராமத்தில் நாள்தோறும் யானைகளின் தொல்லையை மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

38 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் யானைகள் மாலை 4.00 மணியளவில் காடுகளிலிருந்து கிராமத்துக்குள் நுழைவதாகவும், இந்த யானைகள் வாழைகள், தென்னைகள் போன்ற பயன்தரு மரங்களை அழித்து நாசப்படுத்தி வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



இதேவேளை- கோட்டைக்கட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களிலும் யானைகள் அடிக்கடி கிராமங்களுக்குள் நுழைந்து வாழை, தென்னைகளை அழித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வனஜீவராசிகள் திணைக்களம் ஊடாக யானை வெடிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும்-வெடிகளுக்கு அச்சம் கொள்ளாது யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும்-கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (த-18)

## மாங்குளம் தபாலகம் இன்று திறப்பு

மாங்குளம், செப்.22

மாங்குளம் பிரதான தபால் அலுவலகம் இன்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

ஏ-9 வீதியில் இந்தப் புதிய தபாலகக் கட்டடத்தை அமைச்சர் ரிஷாத் பதியூதீன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் தபால் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதுவரை காலமும் மாங்குளம் பிரதான தபால் அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்காலிக கட்டடத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-421)

# வீடமைப்புப் பணிகள் வறட்சியால் பாதிப்பு

## கிளிநொச்சி மாவட்டத்தில்

கிளிநொச்சி, செப்.22

கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்டுள்ள நீர்த்தட்டுப்பாடு காரணமாக வீடமைப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்காக உதவி அமைப்புகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வரும் நிலையில் பூநகரி பகுதிக்கு கிளிநொச்சி, பரந்தனிலிருந்து குடி தண்ணீர் எடுத்துச்செல்லப்படும் நிலையில் வீடமைப்பு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணம்கொடுத்து நீரை வாங்கி வீடமைப்புப் பணிகளில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

கண்டாவளை பிரதேசத்தில் பிரமந்தனாறு, கல்லாறு போன்ற கிராமங்களில் குடிதண்ணீர் நெருக்கடி கூடுதலாகக் காணப்படும் நிலையில் வீடமைப்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



அக்கராயன் போன்ற பகுதிகளில் தற்போது மலசலகூடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்றுவரும் நிலையில் நீர்த்தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாகவுள்ளது. (வ-18)

# விஞ்ஞான பாட ஆசிரியர் நெருக்கடி தொடர்பில் பெற்றோர் முறைப்பாடு

கிளிநொச்சி, செப்.22

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் விஞ்ஞானப் பாடத்துக்கான ஆசிரியர் நெருக்கடி தொடர்பில் பெற் றோர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த கல்லூரியின் இடைநிலை, உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானப் பாடத்துக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. அண்மையில் அந்தக் கல்லூரியில் நடைபெற்ற பவளவிழாவில் உரையாற்றிய பாடசாலையின் அதிபர் விஞ்ஞானப் பாடத்துக்கான ஆசிரியர்கள் இல்லை என்ற விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆசிரியர் நெருக்கடி மாணவர்களின் கற்றலுக்கு இடராகவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். இதேவேளை-முருகானந்தாக் கல்லூரியில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக் குறை தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் குறிப்பிடுகையில்;

ஆசிரியர் நெருக்கடி என்பது கிளிநொச்சி வலயத்தில் பெரும் இடராகவுள்ளது. கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து 248 ஆசிரியர்கள் ஆசிரிய கலாசாலைக்குச் சென்றுள்ளனர். இதன் காரணமாக வும் ஆசிரிய நெருக்கடி உள்ளது. கிளிநொச்சி கல்வி வலயத்தில் 18 கணித ஆசிரியர்களுக்கும் 28 விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது. விஞ்ஞான ஆசிரியர்கள் புதிதாக வலயத்துக்கு வருகின்றபோது முருகானந்தாக் கல்லூரி போன்ற ஆசிரிய நெருக்கடி காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு நியமிக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவித்தார். (வ-8)

## நிரந்தர வீடுகளை அமைப்போர் மரம், மணல் பெறுவதில் சிரமம்

கிளிநொச்சி, செப்.22

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர வீடுகளை அமைக்கும் குடும்பங்கள் மரம், மணல் என்பவற்றை பெறுவதில் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற வீட்டுத் திட்டக் கூட்டத்தில் நிரந்தர வீடுகள் அமைப்பதில் காணப்படும் இடர்கள் தொடர்பாக ஆராய்ந்தபோது கூடுதலான குடும்பங்கள் மரம், மணலைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மணலையும் மரத்தையும் பெறுவதற்கு அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. பிரதேச செயலாளர்களின் அனுமதியுடன் மணல் மரங்களைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் சிலவேளைகளில் மணல் மரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-18)

# தண்ணீரூற்று பாடசாலையில் அதிபர் அறை, கணினிக் கூடம்



முல்லைத்தீவு, செப்.22

முல்லைத்தீவு வலயக் கல்வி வலயத்துக்குட்பட்ட தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதிபர் அறை, கணினிகூடத் திறப்பு விழா மற்றும் பரிசளிப்பு விழா என்பன நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் க.குகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் உதயராணி முனீஸ்வரன், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எஸ். கனகரத்னம், செஞ்சோலை சிறுவர் இல்லப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு தண்ணீரூற்று பிரதேசத்தைச் சேர்ந்த பொன். நடராசாப்பிள்ளை (மாணிக்கவாசகர்) நினைவாக அவரது மகன் உதயகரன் மற்றும் குடும்பத்தினர் குறித்த கணினிக் கூடம், அதிபர் அறை இணைந்த கட்டடத்தை நிர்மாணித்துக் கொடுத்துள்ளனர். இதற்கென 25 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. (த-433)

# கடல் நீர் வீதிக்கு செல்லாதவாறு தடுப்பணைகள் அமைக்கும் பணி

## பண்ணை முதல் ஊர்காவற்றுறை வரை

வலி.வடக்கு. செப். 22

யாழ்.பண்ணைப் பகுதியில் இருந்து ஊர்காவற்றுறை வரையான கரையோரப் பகுதியில் கடல் நீர் வீதிக்குச் செல்லமால் தடுப்பதற்கான அணைகளை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சர் ப.டெனீஸ்வரன் வழிகாட்டலில் நகர அபிவிருத்தி சபையினால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. யாழ். மாவட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகள் 10 நகரை அழகுபடுத்தும் வேலைத் திட்டங்களின் கீழ் கடந்த ஆண்டுகளில் மண்டைதீவு, அரியாலை, பொன்னாலை, மாதகல், மந்துவில், அடம்பன், நயினாதீவு, தொண்டமானாறு, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் கடற்கரையோரமாக முன்னெடுக்கப்பட்டன.



10 ஆவது திட்டம் யாழ். பண்ணைப் பகுதியிலிருந்து ஊர்காவற்றுறை வரை கடற்கரையோரப் பகுதியில் தடுப்பணை அமைக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இறுதிக் கட்ட நடவடிக்கை துரிதமாக நடைபெற்றுவருகின்றது. 20 கிலோமீற்றர் தூரம் வரை பகுதியில் இந்த அணை அமைக்கப்படுகின்றது.

நகர அபிவிருத்தி அமைச்சினால் 875 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பணிகள் இடம் பெறுகின்றன. (த-86)

## சிறந்த ஆசிரியர்களை கௌரவிக்க ஏற்பாடு

குருநகர்.செப். 22

மாணவ .மாணவிகள் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆகியோரை எதிர்காலத்தில் கௌரவிக்க உள்ளோம் எனக் கூறினார் யாழ். கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிநாதன்.

2013 இல் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தர. ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றில் யாழ். கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்து தோற்றி விசேட சித்திகளைப் பெற்ற மாணவ, மாணவிகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்வு கடந்த 16ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தலைமையில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மாணவர்கள் தேசிய நிலையில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் உந்து சக்தியாகச் செயற்படுவோம். மாணவர்களின் கௌரவிப்பு விழாவைத் தொடர்ந்து நடத்த ஒத்துழைப்பு வழங்கவேண்டும். கடந்த வருடத்தை விட இந்த வருடம் உயர்ந்த பெறுபேறுகள் கிடைக்க வேண்டும். சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த மாணவ, மாணவிகளை கௌரவிப்பது காலத்தின் தேவையாகும். கடந்த எமது பொற்காலவாழ்வை உறுதிப்படுத்த வேண்டும். அதற்கான பல்வேறு செயற் திட்டங்களை நாம் உருவாக்கி வருகின்றோம் - என்றார். (த-51)

## வரவு-செலவுத் திட்ட நிதி தொடர்பில் மக்களிடையே பொய்யான பரப்புரை

### சாவகச்சேரி நகர சபை கண்டனம்

தென்மராட்சி. செப்.22

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வேலைத் திட்டங்களை பொருளாதார அமைச்சின் வேலைத் திட்டமாகப் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொதுமக்களிடையே பரப்புரை செய்வது குறித்து கண்டனப் பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் த.சுதர்சன் மேற்படி பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

எமது கோரிக்கைகளை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் நிதி ஒதுக்கீடு செய்து யாழ். மாவட்ட அரச அதிபர் ஊடாகப் பிரதேச செயலகத்துக்கு வேலைத்திட்டங்கள் அடங்கிய பட்டியல்கள் கட்டம் கட்டமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களை மேற்பார்வை செய்யும் பணிகள் அந்தந்தப் பிரிவு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களைப் பார்வையிடும் உத்தியோகத்தர்கள் பொருளாதார அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டதாகப் பரப்புரை செய்வதாக எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இந்தச் செயற்பாடுகள் குறித்து கண்டனம் தெரிவிப்பதாக அவர் தெரிவித்தார். பிரேரணையைச் சபை ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## டெங்கு நுளம்பை அழிக்க மீன் குஞ்சுகள் விநியோகம்

தென்மராட்சி. செப். 22

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகச் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் வளர்க்கப்பட்ட மீன் குஞ்சுகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களாகக் கருதப்படும் கைவிடப்பட்ட கிணறுகள். பாவனையற்ற கிணறுகள். குளங்கள். மோட்டர் பயன்படுத்தும் கிணறுகள் உட்பட நீர் நிலைகளில் நுளம்புக் குடம்பிகளை அழிக்கும் இந்த மீன்குஞ்சுகளை வளர்த்து நுளம்பு பெருகாமல் தடுக்க முடியும்.

இந்த நீர் நிலைகளில் மீன் குஞ்சுகளை வளர்க்க விரும்புவோர் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்து மீன் குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## நடனப் பயிற்சி மேற்கொண்ட 41 மாணவிகளுக்கு சான்றிதழ்




யாழ்ப்பாணம். செப்.22

நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவை நடத்திய நடனப் பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்ட நல்லூர் பிரதேசத்தில் உள்ள உயர்தர பாடசாலையின் உயர்வகுப்பு மாணவிகள் 41 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் உட்பட ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள், நல்லூர் பிரதேச செயலக திட்ட மிடல் உதவிப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன், கலாபூஷணம் பத்மினி தெய்வேந்திரன், மாகாண கலாசார உத்தியோகத்தர் திருமதி விஜயரட்ணம் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

முன்னதாக தேவார இசையும், மங்கல விளக்கேற்றல் நிகழ்வும், அதனைத் தொடர்ந்து மாணவிகளின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. நல்லூர் பிரதேச கலாசார உத்தியோக்த்தர் திருமதி ரஜனி குலசிங்கம், நல்லூர் பிரதேச உதவி பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் ஆகியோர் இதில் உரையாற்றினர். (த-7)

## விஞ்ஞானிகளாகவும் நிபுணர்களாகவும் எமது மாணவர்கள் உருவாகவேண்டும்

### யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

குருநகர்.செப்.22

இங்குள்ள எமது மாணவ, மாணவிகள் எதிர்காலத்தில் மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக வருவதைவிடப் பெரிய விஞ்ஞானிகளாகவும், நிபுணர்களாகவும் வர முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார்.

2013 இல் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரம், ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளில் தோற்றி சிறப்புத் தேர்ச்சிகளைப் பெற்ற யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 16ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவித்து அவர்களைச் சாதனையாளர்களாக்குவதே எமது நோக்கம் - முன்னைய ஆண்டில் கிடைத்த பெறுபேறுகளை உற்று நோக்கும்போது எமது மாணவிகள் மாணவர்களை விட உயர்வாகச் சித்தியடைந்துள்ளார்கள். சாதனை படைத்த மாணவர்களை ஊக்குவித்து கௌரவிப்பதனால் இதுவரை சாதனை படைக்காத மாணவர்களும் சாதனை படைக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாகும். இனிவரும் காலத்திலும் மாணவர்கள் பரீட்சைகளில் உயர்பெறுபேறுகளைப் பெறவேண்டும். பல்கலைக் கழகங்களுக்குத் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் மாணவர்களாக உங்கள் கல்விச் செயற்பாட்டை வளர்க்க வேண்டும். யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து 2013 ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி 9 ஏ பெறுபேற்றைப் பெற்ற 64 மாணவ, மாணவிகளும், 8 ஏ.பி பெறுபேற்றைப் பெற்ற 11 மாணவ, மாணவிகளும், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களிலும் அதி விசேட சித்திகளைப் பெற்ற 55 மாணவர்களுமாக மொத்தம் 230 மாணவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்-என்றார். (த-51)

## விறகுகள் எடுத்துச் செல்லும் நடைமுறையை அறிவிக்குக

### பிரதேச செயலருக்கு நீதிமன்றம் பணிப்பு

தமது காணிகளிலிருந்து தறிக்கப்பட்டும் மராங்கள், விறகுகள், மட்டைகள் (பனை, தென்னை) என்பவற்றை வாகனங்களில் எடுத்துச் செல்லும் மக்கள் உரிய நடைமுறைகள் தெரியாததால் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

மக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க இந்த விடயம் தொடர்பான அறிக்கையை ஊடகங்கள் மூலம் அறிவிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றினால் தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மராங்கள், விறகுகள், மட்டைகள் (பனை, தென்னை) சுள்ளிகள் மற்றும் வேறு விறகுகள் போன்றவற்றுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் போது கிராம அலுவலர்பிரிவுகள் உள்ளும், பிரிவுக்கு வெளியேயும் மற்றும் பிரதேச செயலகபிரிவுகளிலிருந்து வெளியேயும் கொண்டு செல்வதற்கான நடைமுறைகள் மக்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இவற்றுக்கு யாரிடம் அனுமதிப் பத்திரம் பெறுவது, எவ்வாறு பெறுவது போன்ற நடைமுறைகளை மன்றுக்கு அறியத்தருமாறு பிரதேச செயலருக்கு நீதிமன்றினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காலத்தை வீணடிக்காமல் அரசு துணிந்து காரியத்தில் இறங்குமா?

உள்நாடுகளில் குழப்பங்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலம் அந்த நாடுகளைச் சீர்குலைக்கிறார்கள் என்று உணராமல் ஜனநாயகத்தை நிலைநாட்டுகிற போர்வையில் வெளி சக்திகள் தலையீடுகளைச் செய்து வருகின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தாமரைத் தடாக ஆற்றுகை அரங்க மண்டபத்தில் ஆசிய நாடுகளின் அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டில் கடுமையான விமர்சனம் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

வெளிநாடுகளின் தலையீடுகள் என்று அவர் சொல்லியிருப்பதன் தாற்பரியம் பற்றி இலங்கையின் இன்றைய நிலைமைகள் குறித்து அறிந்தவர்களுக்கு நன்கு புரியும். பொதுவில் இலங்கையில் ஐந்து ஆண்டுகளுக்கு முன் நடந்து முடிந்த குரூர போரின் விளைவாக எழுந்துள்ள நிலைமைகளையும், அதன் காரணமாக ஐ.நா.மனித உரிமை சபையில் சில முக்கிய வல்லரசுகள் வேறு நாடுகளுடனும் இணைந்து கொண்டு வந்த தீர்மானங்கள், அந்தத் தீர்மானங்களை இலங்கை அலட்சியம் செய்ததால் போர்க் குற்றங்கள், மனித உரிமைகள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கவென மனித உரிமை சபையின் தீர்மான ஆணைக்கமைவாக ஆணையாளரின் சர்வதேச விசாரணைக்குழுவொன்றும் அதற்கான ஆலோசனைகளை வழங்க சர்வதேச நிபுணர்களும் நியமிக்கப்பட்டிருப்பதன் பின்னணியிலேயே ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளியாகியிருக்கிறது என்று புரிந்து கொள்வது கடினமன்று.

பல பத்தாண்டு காலமாக நிலவும் இந்த நாட்டின் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் முறையாகத் தீர்க்கப்படாத நிலையில் அது இருதரப்புப் போராக உச்சத்தை அடைந்திருந்த வேளையில் பதவிக்கு வந்த இந்த ஜனாதிபதியானவர் தமிழ் தரப்பில் போராடியவர்களைப் பயங்கரவாதிகளாக உலகுக்காட்டி பல நாடுகளின் குறிப்பாக இந்தியாவின் ஆயுத மற்றும் ஆலோசனைகளைப் பெற்று அந்தப் போராட்டத்தை முறியடித்தார். அதன் மூலம் நாட்டில் அமைதியை நிலைநாட்டிவிட்டதாகவும் பெருமிதம் கொண்டார். ஆனால் போரின் போது பெற்றுக் கொண்ட வெளி உதவிகளை மறந்ததுடன் அதற்காக அவர் கொடுத்த வாக்குறுதிகளையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டார்.

குறிப்பாக ஐ.நா.செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் மற்றும் இந்தியாவின் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இவர் கொடுத்த வாக்குறுதிகளை எவரும் மறந்துவிட மாட்டார்கள். போர் ஓய்ந்தவுடனேயே அந்த வகையில் தேசியப் பிரச்சினைக்கு சிலாக்கியமான நடவடிக்கைகளை அவர் எடுக்கத் துணிந்திருந்தால் உலக நாடுகளின் தலையீடுகளையும் இந்தியாவின் இடித்துரைப்புகளையும் தவிர்த்திருக்கலாம். தமிழர் பிரச்சினையைத் தேர்தல் கண்ணோட்டத் திலும் குடித்தொகைப் பரம்பலோடும் சேர்த்து பார்க்கப்படுவதன் பயனை அரசு இன்று எதிர்கொள்கின்றது.

ஆஸிய நாடுகள் அரசியல் கட்சிகளின் மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த இந்திய பா.ஜ. கட்சிப் பிரமுகர்கள் ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்தித்த போது இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசமைப்பின் பிரகாரம் தீர்வு காண வேண்டும் என்று யோசனை கூறியதாகத் தெரிகிறது. இந்திய அரசின் அனுசரணையில் அரசமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தத்தையே அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்பது சந்தேகமில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேச வருகிறார்களில்லை என்று ஜனாதிபதியும் தமிழர்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று மூத்த அமைச்சர்கள் முனகுவதும், அவர்களோடு பேசினால் தொலைந்தீர்கள் என்று பேரினவாதிகள் குமுறுவதும் காலத்தை வீணடிப்பதாகவே இருக்கப் போகிறது. நடைமுறை சாத்தியமான செயற்பாட்டில் இந்த அரசு துணிந்து கால் வைக்க வேண்டிய காலம் பிறந்திருக்கிறது. அப்படிச் செய்வது நாட்டுக்கும் நாட்டின் எதிர்கால அமைதிக்குமே நல்லது என்போம்.

# தமிழர் பிரச்சினை உத்வேகம்; இனியும் ஏமாற்ற முடியாது



இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே பலருக்கு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றையெல்லாம் மறந்துவிட்டவர் போன்று காணப் படுகின்றார்.

சேரலாதன்

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கையரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கென தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச வேண்டும். இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்த இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்கள் இருவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்திக் கூறியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே இலங்கையின் வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸைச் சந்தித்த போதும் இவர்கள் இதனை வலியுறுத்திக் கூறியிருந்தனர். இவர்கள் இந்திய மத்திய அரசின் கருத்துக்களையே இலங்கை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

இந்தியாவில் காங்கிரஸ் கட்சித் தலைமையிலான அரசு பதவியில் இருக்கும் வரை இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை. இதற்கு சோனியா தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் அழுத்தங்களே முக்கிய காரணமெனக் கூறலாம். ராஜீவ் காந்தியின் கொலையில் விடுதலைப் புலிகளே ஈடுபட்டதாகச் சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டபோதே இலங்கைத் தமிழர்களின் விவகாரங்களில் இந்தியாவின் அணுகுமுறைகளில் மாற்றங்கள் தென்படத் தொடங்கி விட்டன. விடுதலைப் புலிகள் என்றால் இலங்கைத் தமிழர்கள் என்றும், இலங்கைத் தமிழர்களே விடுதலைப் புலிகள் என்றுமொரு தவறான எண்ணம் இந்திய அரசியலில் விதைக்கப் பட்டிருந்ததால் இலங்கைத் தமிழர்கள் இந்தியாவால் நட்டாற்றில் விடப்பட்டதாகக் கூறுபவர்கள் உண்டு. எவர் என்ன கூறினாலும் இலங்கைத் தமிழர்கள் இன்று அனுபவிக்கும் துன்பங்களுக்கு இந்தியா பதிலளித்துத் தானாக வேண்டும்.

இந்தியாவில் காங்கிரஸ் தலைமையிலான அரசும், பிரதமர் பதவியில் மன்மோகன்சிங்கும் இருக்கும்வரை இலங்கைத் தமிழர்கள் தமது பிரச்சினைகள் தீருமென நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ஆனால் நரேந்திர மோடியின் வருகைக்குப் பின்னர் சிறி தளவு நம்பிக்கை அரும்பத் தொடங்கியுள்ளது.

மோடியின் பதவியேற்பு நிகழ்வுக்கு இலங்கை ஜனாதிபதி சென்றபோது இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பாக இந்தியப் பிரதமர் கருத்துத் தெரிவித்ததாகவும் இதற்கு மஹிந்த ராஜபக்ஷ வழக்கம் போல சில வாக்குறுதிகளை வழங்கிவிட்டு நாடு திரும்பியதாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டது. மஹிந்தரின் வாக்குறுதிகள் தொடர்பாகத் தெரிந்தவர்கள் அவை தொடர்பாக அலட்டிக் கொள்ளமாட்டார்கள். ஆனால் இந்தியப் பிரதமர் மோடி ஏனையவர்கள் போன்று தாம் ஏமாற்றத் தயாரில்லை என்பதை நிரூபித்து வருகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை அவர் சந்தித்து உரையாடியதும், தமது கட்சியின் மூத்த தலைவர்கள் மூலமாக இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை நினைவூட்டியதும் இதற்குச் சான்றுகளாகக் காணப்படுகின்றன.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே பலருக்கு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றையெல்லாம் மறந்துவிட்டவர் போன்று காணப் படுகின்றார். ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ -மூன் போரின் பின்னர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அப்போது விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டதால் இனிமேல் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படுவதில் தடையிருக்காதென அவரிடம் உறுதிமொழி வழங்கப்பட்டது. மேலும் மீள் குடியமர்வு துரிதமாக இடம்பெற்று வருவதாகவும் விரைவில் இடம் பெயர்ந்த அனைவருமே தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியுமெனவும் கூறப்பட்டது. ஆனால் போர் முடிவடைந்து ஆறாவது ஆண்டை நெருங்கும் வேளையிலும் இடம்பெயர்ந்த தமிழர்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படாத நிலையே தொடர்கின்றது. அதைவிட தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடங்கள் பாதுகாப்புக் காரணங்களைக் கூறி அபகரிக்கப்படும் நிலையும் தொடருகின்றது. வடக்குக் கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் தொடர்ந்து இராணுவ முற்றுகைக்குள் அடங்கிக் கிடக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. அவர்களின் ஒவ்வொரு அசைவும் படையினராலும் இராணுவப் புலனாய்வாளர்களாலும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. இதனால் போர் நிறைவடைந்த போதிலும் அமைதியையும் சுதந்திரத்தையும் அவர்களால் அனுபவிக்க முடியவில்லை.

இந்த நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது மாநாட்டில் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காதுவிட்டால் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் அஹிம்சை வழியிலான போராட்டங்கள் ஆரம்பமாகுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியல் சாசனத்துக்கு மதிப்புத் தெரிவித்து ஆயுதம் ஏந்தாத, பிரிவினையைக் கோராத அஹிம்சை வழிப்போராட்டத்தைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்குமேயானால் அதற்குச் சர்வதேச சமூகமும் இந்தியாவும் ஆதரவு வழங்குமென் பதை நிச்சயமாக எதிர்பார்க்க முடியும். மேலும் இலங்கை அரசு தமிழர்களுக்கு எதனையும் வழங்கப் போவதில்லை என்பதும் தற்போது வெட்டவெளிச்சமாகி விட்டது.

மேலும் கடந்த காலங்களில் இந்தியாவையும் சர்வதேசத்தையும் ஏமாற்றியத்தைப் போன்று இனிமேலும் இலங்கையினால் ஏமாற்ற முடியாது. ஏனென்றால் அது தமிழர்களை மாத்திரமின்றி சர்வதேசத்தையும் போதும் போதும் என்று கூறுமளவுக்கு ஏமாற்றிவிட்டது.

இலங்கையால் தொடர்ந்தும் சீனாவின் வாலில் தொங்கிக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் இலங்கை போன்றதொரு சிறிய நாட்டுக்காக பெரிய நாடுகளைப் பகைத்துக் கொள்ள அந்த நாடு ஒருபோதுமே விரும்பமாட்டாது. மேலும் இந்தியா போன்ற பெரிய நாடுகளுக்கு இணையாக இலங்கையை மதிக்கும் எண்ணமும் அதனிடம் கிடையாது. சீன அதிபர் இலங்கைக்கு வந்தபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடந்து கொண்ட விதமும் அவர் இந்தியா சென்ற போது பிரதமர் நரேந்திரமோடியின் அணுகு முறையும் இதை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது. சீன அதிபரை விமான நிலையத்துக்குச் சென்றே இலங்கை ஜனாதிபதி வரவேற்றதுடன் வழியனுப்பியும் வைத்தார். ஆனால் மோடியோ தமது சொந்த மாநிலத்துக்கே சீன அதிபரை வரவழைத்ததுடன் இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

அவர் எந்தக் கட்டத்திலும் இந்தியாவின் கௌரவத்தை விட்டுக் கொடுக்கவில்லை. படி இறங்கி நடந்து கொள்ளவில்லை. இந்த நிலையில் இலங்கை விவகாரங்களிலும் அவர் இறுக்கமான போக்கையே கடைப்பிடிக்கப் போகின்றார் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

எனவே இனிவரும் காலங்கள் இலங்கையைப் பொறுத்தளவில் சர்வதேசத்தால் மட்டுமன்றி இந்தியாவாலும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்படும் நிலை உருவாகப் போகின்றது. அதிலும் மோடி போன்ற உறுதியான தலைவர் ஒருவர் இருக்கும்வரையில் இலங்கை மேலும் மேலும் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்க முடியாது. தமிழர்களும் இலங்கைக் குடிமக்களே என்ற வகையில் அவர்களுக்கான உரிமைகள் யாவும் உடனடியாக வழங்கப்பட வேண்டும். தவறினால் அதன் விளைவுகள் பாரதூர மானவையாகவே அமைந்துவிடப் போகின்றன.

நடேசு தயாளன்
அதிபர்.

# சமூக மூலதனமும் பாடசாலை விளைதிறனும்



கல்வியை சமூகத்துக்கு வழங்குவதில் இன்று மாற்றுவகையான சிந்தனைகள் வரவேற்கப்படுகின்றன. பாடசாலைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் மாற்றுவகையான சிந்தனைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அதன் மூலம் வெற்றிகரமான பாடசாலையை அல்லது நல்ல பாடசாலையைத் தோற்றுவிப்பதற்கும் இந்த அடைவு நிலை நோக்கிய முன்னெடுப்புக்களின் போது ஏற்படும் தடைகளை வெற்றி கொள்வதற்கும் சமூக மூலதனம் என்ற எண்ணக்கரு தொடர்பில் கல்விப் புலம் சார்ந்தோர் சிந்திக்க வேண்டியது அவசியமானதாகும்.

சமூக மூலதனம் (Social capital) என்பது பண்பு ரீதியானதும், தொகை ரீதியானதுமான தொடர்புக் கோலம் -வலையமைப்பு மற்றும் நியமங்களாகும். மக்களுக்கிடையேயானதும் நிறுவனங்களுக்கிடையேயானதுமான கூட்டுச் செயற்பாடாக இது அமைந்து காணப்படும்.

சமூக மூலதன உருவாக்கத்துக்கு பிரதானமான மூன்று தந்திரோபாயச் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

1. தனியாளுக்கும் சமூகத்துமிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான தந்திரோபாயக் கூட்டுச் செயற்பாடுகள்.

2. இலக்கை அடைந்து கொள்வதற்கு குழுவாகவும் சமூகமாகவும் கூட்டுச் சேர்ந்து செயற்படுவதிலுள்ள தகர்த்தெறிவுகள், தந்திரோபாயங்கள்.

3. கொள்கை ரீதியானதும் செயலொழுங்கு ரீதியானதுமான சமூக மாற்றத்தை உண்டு பண்ணுவதற்கான கூட்டுச் செயற்பாடுகளுக்கான தந்திரோபாய அளவீடுகள்.

சமூகத்துக்கு நேர் விளைவுகளைப் பெற்றுத் தரக்கூடிய சமூக மாற்றங்களை உண்டு பண்ணுவதற்கான திட்டமிடல் செயலொழுங்குகளை மேற்கொள்வதற்கு வாண்மைத்துவ மிக்க ஊழியர்கள் அணி அமைக்கப்படுதல் அவசியமானதாகும். இதற்கு சுயாதீனமான சமூகத் திட்டமிடல் அவசியமானதாகும். இது சமூகச் செயலொழுங்கினூடாகவே கட்டியெழுப்பப்பட வேண்டும்.

சமூகத் திட்டமிடலாளர்கள் சமூக சமத்துவம் சமூக நீதி சமூக உள்ளடக்கம் என்பன தொடர்பில் தெளிவு உள்ளவர்களாக விளங்குதல் அவசியமானதாகும். சமூக மூலதனமானது சமூக மாற்றத்துக்கும் அபிவிருத்திக்குமான ஒரு வளமாக நோக்கப்படுதல் அவசியமானதாகும். சமூக அணி திரட்டலினூடான செயற்பாடுகள் சமூகத்தின் உள்ளடக்கத்தை அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பளிப்பதாக இருத்தல் வேண்டும். சமூகத்துடன் இணைந்து செயற்பட விரும்புபவர்கள் தகவல் பரப்பும் தந்திரோபாய உத்தியினூடாக சமூகத்தின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பிக் கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

கூட்டுறவான செயற்பாடுகளை முன்னேற்றுவதனூடாக செயற்பாட்டுக்கான தடைகளை அகற்றி பொருத்தமான சமூக வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். தனியாள் அல்லது நிறுவனங்கள் தாம் எதிர்கொள்ளும் சவால்களை முன்னிறுத்தி அதனது பரிமாணங்களை சமூகத்துக்கு உணர்த்துவதனூடாக சமூகப் பங்களிப்பை குறித்த விடயத்துக்குப் பெற்றுக் கொள்ள முடியும்,

சமூகத் திட்டமிடலினூடாக ஆய்வும் தகவல்களும் கொள்கை உருவாக்கம் பகுப்பாய்வு தந்திரோபாய விருத்திகள் ஒழுங்கமைத்தலும் இணைப்பாக்கலும் தொடர்பான இயலுமைகளை வளர்த்தெடுக்க முடியும். சமூக அபிவிருத்தியும் சமூக இசைவில் ஏற்படும் முன்னேற்றமும் கற்றலின் தாக்கத்தை விளைவிக்க வல்லன. அது மட்டுமல்ல சமூக மாற்றமும் அடிப்படை அம்சங்களில் ஏற்படும் செயற்பாட்டுத் திறனும் கல்வியில் சமவாய்ப்பின்மையைக் குறைக்கவல்லது. இதற்குத் துணை புரியக் கூடியதாக விளங்குவது சமூக மூலதனமாகும்.

பாடசாலைக் கல்வியில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான மாணவர்களே வெற்றியடையும் நிலையிலுள்ளார்கள். இதனில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் குடும்பத்தவர்களின் பங்களிப்பு கல்விச் செயன்முறையில் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். பாடசாலையானது கல்விச் சேவையை வழங்குவதற்கு மட்டுமல்ல சமூக வெளியீட்டையும் அதிகரிப்பதாக விளங்க வேண்டியது அவசியமானதாகும். பாடசாலையின் சமூகப் பெறுமானமானது. இந்தச் செயற்பாட்டுக்குப் பங்காற்றும் விடயமாகும். இதுவே சமூக வலைப்பின்னலை பாடசாலைக்கு வெளியே தோற்றுவிப்பதாக இருக்கும். இத்தகைய முக்கியமான செயற்பாடுகளானது சமூக மூலதனத்தைத் தோற்றுவிப்பதாக இருக்கும்.

விளைதிறன் மிக்க பாடசாலையானது தனி மனிதனதும் சமூகத்தினதும் முழுமையான பங்களிப்புக்கு வழிகாட்டுவதாக இருக்கும். பிள்ளையின் வளர்ச்சிக்கான அத்திபாரத்தை இடும் இடமாகப் பாடசாலை விளங்குகின்றது. பிள்ளையை நல்ல மனிதனாகவும் பொறுப்புள்ள பிரசையாகவும் உருவாக்குவதற்கு இது வழி சமைப்பதாகவுள்ளது. கல்வியானது உலகு பற்றிய அறிவை எமக்கு வழங்குகின்றது.

நல்ல சமூகப் பாத்திரமாக ஒருவர் மிளிர்வதற்கு இது பங்காற்றுகின்றது. இதன் மூலம் பலம் மிக்க தேசக் கட்டமைப்பும் தோற்றுவிக்கப்படுகின்றது. கல்வியானது ஒருவரை மனித மூலதனமாக மாற்றுகின்றது. இத்தகைய மனித மூலதனத்தைத் தோற்றுவிப்பதில் சமூக மூலதனத்தின் பங்களிப்பானது இன்றியமையாததாகும். கல்வியின் நேரான விளைவு யாதெனில் அறிவு அடையப் பெறுவதாகும். உலகு பற்றிய பூரண அறிவு கிடைக்கப் பெறுவதால் எதிர்கால வாழ்வு பற்றிய தெளிவு கிடைக்கப் பெறுகின்றது.

கல்வியானது இன்றியமையாததாகும். ஏனெனில் எமக்குச் சரியான நடத்தைக் கோலத்தை அது கற்றுத் தருகின்றது. நாகரிக சமூகத்தைத் தோற்றுவிப்பதாகவுள்ளது. கல்வியானது ஒருவரை முதிர்ச்சியடைந்த மனிதனாக மாற்றும் திறனுடையது. எதிர்காலம் தொடர்பான சிறப்பான திட்டமிடலை ஒருவரால் மேற்கொள்ள முடிகின்றது. தன்னம்பிக்கையை ஒருவரிடத்தில் கட்டியெழுப்ப முடிகின்றது. என்பதோடு அவரது இயலுமையினையும் வள்ர்த்தெடுக்கின்றது. எண்ணுவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் கல்வி உதவுகின்றது.

கல்வியானது எம்மிடையே மறைந்துள்ள தவறான எண்ணங்களை இல்லாது செய்கின்றது. எம்மைச் சுற்றியுள்ளவை பற்றிய தெளிவான விம்பத்தைப் பெற்றுத் தருவதாகவுள்ளது. சுற்றாடல் தொடர்பான ஆர்வத்தைத் தூண்டுகின்றது. சந்தேகங்களுக்கான விடைகளைக் காணும் திறனை வளர்க்கின்றது. இன்றைய போட்டி உலகில் கல்விச் சமூகமானது தேசத்தின் சொத்தாகவே கொள்ளப்படுகின்றது. இத்தகைய கல்வியின் சிறப்புக்களை ஒரு பாடசாலை தனது உள்ளீடுகளுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டுமானால் பாடசாலையானது வினைதிறன் மிக்கதாக விளங்கவேண்டும். பாடசாலையினது ஆரோக்கியமான நிறுவனக் கலாசாரக் கட்டமைப்பை விருத்தி செய்து கொள்ள வேண்டும். இதற்கான பங்களிப்பை வழங்கக் கூடியதான சமூக மூலதனக் கட்டமைப்புத் தோற்றுவிக்கப்படல் அவசியமானதாகும்.

கல்வியின் வெளியீட்டினைத் தீர்மானிப்பதில் சமூக மூலதனம் முக்கிய பங்காற்றுகின்றது. இதனாலேயே சமூக மூலதனத்தை எவ்வாறு நிர்வகிப்பது பராமரிப்பது என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. பாடசாலையின் விளைதிறனான இயக்கத்துக்கு சமூக மூலதனம் என்பது இன்றியமையாததாகும். பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் சமூக மூலதனம் காணப்படுவதால் பாடசாலை யின் விளைதிறனை வளர்த்தெடுப்பதற்கு இத னைப் பயன்படுத்துதல் அவசியமானதாகும்.

பாடசாலையின் விளைதிறன் என்பது விமர்சன ரீதியானது என்பதோடு கவர்ச்சிகரமானதுமான விடயமாகும். ஆய்வாளர்கள் கல்வியியலாளர்கள் கொள்கை வகுப்பாளர்கள் அனைவரது நோக்கிலும் பாடசாலை விளைதிறன் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் கல்விச் செயலொழுங்கானது அபிவிருத்திக்கும் சமூக மாற்றத்துக்குமான செயலொழுங்காகவுள்ளமையே காரணமாகும். பணிக் குழுவாட்சி அணுகுமுறை, சமூகச் செயன்முறை, அணுகுமுறை கலாசார அணுகுமுறை என்பன பாடசாலையின் விளைதிறன் அடைவுக்குப் பயன்படுத்தப்படும் உத்திகளாகவுள்ளன.

பணிக்குழு அணுகு முறையானது பொருத்தமான வளங்களை உருவாக்கல் கட்டமைத்தல் கட்டுப்பாட்டு பொறிமுறை இலக்கை அடைவதற்கான செயலொழுங்கு என்றவாறாகவுள்ளது. சமூகச் செயன்முறை அணுகுமுறையானது பாடசாலையின் நெகிழ்வுத் தன்மை உள்ளகச் செயன்முறை வெளிப்புறச் சூழல் பற்றிய அறிவு அது எந்த வகையில் செயன்முறையில் தாக்கத்தை உண்டுபண்ணுவது என்பதாகவுள்ளது. கலாசார அணுகு முறையானது பாடசாலையின் பணிச் செயலொழுங்கைக் குறிப்பதாகவுள்ளது. நிதி மூலதனம் மனித மூலதனம் வரையறுக்கப்பட்டதாகவுள்ளமையால் சமூகவியல் நோக்கில் சமூக மூலதனம் என்ற விடயம் கல்வியை வழங்கும் செயன்முறையில் முக்கியத்துவமுடையதாக விளங்குகின்றது.

சமூக மூலதனத்தைக் கட்டியெழுப்பிய பாடசாலையில் பெற்றோர் பழைய மாணவர்கள் பாடசாலை நலன்விரும்பிகள் என்போரின் பங்களிப்புக்கள் அதிகளவில் காணப்படும். பங்கேற்புத் திட்டமிடல் உயர்ந்தளவில் காணப்படும் ஒவ்வொருவரிடத்திலும் உரித்தாளர் உணர்வு மேலோங்கியிருக்கும். இந்த நிலையில் அந்தப் பாடசாலை விளைதிறன் மிக்க பாடசாலையாக விளங்குவதற்கான வாய்ப்புக்களும் அதிகளவில் தோற்றுவிக்கப்படும்.

கல்வியின் வெளியீட்டைத் தீர்மானிப்பதில் சமூக மூலதனம் முக்கிய பங்காற்றுகின்றது. இதனாலேயே சமூக மூலதனத்தை எவ்வாறு நிர்வகிப்பது பராமரிப்பது என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. பாடசாலையானது தனது உள்ளக வெளியக சமூக வலைப் பின்னலின் மூலம் வளங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். சமூக வளங்கள் பாடசாலைக்கு அணி திரட்டப்படும் போது பாடசாலை விளைதிறனுடன் விளங்குவதற்கும் இது அனுகூலமாக அமையும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்**: உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த பணவரவு தாமதமாக வந்து சேரும். எந்த வாக்குறுதியும் கொடுக்கும் முன் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. மற்றவர்களின் செயல்கள் கோபத்தைத் தூண்டுவதாக இருக்கலாம்.

**இடபம்**: தொழில் வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அவசரப்படாமல் நிதானமாக பணிகளைக் கவனிப்பது நல்லது. எந்த வாக்குறுதியையும் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்**: கோபத்தைக் குறைப்பது நன்மை தரும். உத்தியோகத்தில் முன்னேற்றமடைய கவனமுடன் இருப்பது நல்லது. எதிலும் நிதானம் தேவை. வீண் அலைச்சல் ஏற்படும். நண்பர்கள், உறவினர்களிடம் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**கடகம்**: தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். ஆக்கப்பூர்வமான யோசனைகள் தோன்றும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு காரியங்களைச் செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள்.

**சிங்கம்**: எதிர்பாராத செலவுகள் உண்டாகும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. எதிலும் நிதானம் தேவை. பொருள் சேர்க்கை உண்டாகும். திட்டமிட்டு காரியங்களைச் செய்வது நன்மை தரும்.

**கன்னி**: கோபத்தைத் கட்டுப்படுத்துவது நன்மை தரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். வியாபார செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். அதனால் களைப்பு ஏற்படலாம்.

**துலாம்**:குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கி எல்லோரும் உங்களது வார்த்தைக்கு மதிப்பு தருவார்கள். ஆனால் யாரிடமும் நிதானமாக பேசுவது நல்லது. வீண் மனக்கவலை உண்டாகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். செலவு கூடும்.

**விருச்சிகம்**: எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலனைத் தரும். கடினமான வேலைகளையும் எளிதாகச் செய்து முடிக் கும் திறமை உண்டாகும். வெளியூர் பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும்.

**தனுசு**: தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும் கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். சுப காரியங்கள் நடக்கலாம். சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**மகரம்**: எந்த வேலையையும் எளிதாகச் செய்து விடுவீர்கள். எதிர்ப்புகள் விலகும். எதிலும் கவனமாக இருப்பது நல்லது. காரியங்களில் தடை தாமதம் உண்டாகும். எதிலும் தலையிடாமல் ஒதுங்கி சென்றாலும் மற்றவர்கள் வலிய வந்து உங்களையும் இழுப்பார்கள்.

**கும்பம்**: தொழில் வியாபாரம் மந்தமாக காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலைச் சுமையும் ஏற்படலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்**: மற்றவர்களின் பேச்சை கேட்டு எதிலும் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. சக பணியாளர்களுடன் சிநேகபூர்வமாகப் பழகுவது வெற்றிக்கு உதவும். எதிலும் கவனமாக இருப்பது நல்லது. நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

## நாளை

**புரட்டாதி-07 செவ்வாய்க்கிழமை | 23.09.2014**

திதி: சதுர்த்தசி மு.ப.10.34 வரை
நட்சத்திரம்: பூரம் பி.ப.04.38 வரை
சுபநேரம்:10.32-12.02 வரை
இராகுகாலம்:03.02-04.32 வரை
அமாவாசை விரதம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பக்தியும் சிரத்தையும் ஆன்மாவுக்குப் பாதுகாப்பாகும்

நீ நேர்மையுடன் இரு, தைரியமாக இரு, எந்த நெறியானாலும் அதைப் பக்தி சிரத்தையுடன் பின்பற்று. அப்போது நீ இறைவனை அடைவது உறுதி. சங்கிலியிலுள்ள ஒருவளையத்தை முதலில் உறுதியாகப் பற்றிக் கொள். பிறகு படிப்படியாக சங்கிலி முழுவதும் உன் கைக்கு வருவது திண்ணம். மரத்தின் வேரில் நீரை ஊற்று. அது முழு மரத்துக்கும் நீர் பாய்ச்சியதற்கு ஒப்பாகும். இறைவனை முதலில் பற்றிக்கொள். அதன் மூலம் அனைத்தையும் நீ பெறுவாய். ஒருதலைச் சார்பாக நடப்பது, உலகுக்குத் தீமையை விளைவிக்கிறது. பல துறைகளிலும் முன்னேற்றம் அடைவதன் மூலம் பலவகையில் பிரபஞ்சத்தை உன்னால் அனுபவித்து மகிழ முடியும்.

ஞானி என்ற முறையிலும் பக்தன் என்ற முறையிலும் இன்னும் பல்வேறு முறைகளிலும் உன்னால் உலக அனுபவத்தைப் பெறமுடியும். உனது இயல்பை முதலில் நிச்சயப்படுத்திக் கொள். பிறகு உறுதியாகப் பற்றிக் கொள். தொடக்க நிலையில் இருப்பவனுக்கு தெய்வம் ஒன்றிடம் பக்தி கொள்வதே ஏற்ற நெறியாகும். பக்தியும் சிரத்தையும் அனைத்துக்கும் வழிகாட்டி ஒருவனை இறைவனிடம் அழைத்துச் செல்லும். கோயில்கள் கொள்கைகள், உருவங்கள் அனைத்தும் இளச்செடியைப் பாதுகாக்கும் வேலி போன்றவை. செடி வளர்ந்து மரமான பின்னர் வேலிகளை வெட்டி எறிந்து விட வேண்டும். பல்வேறு மதங்களும், பைபிள்களும் வேதங்களும் கொள்கைகளும் சிறிய செடிகளை பாதுகாக்கப் பயன்படும் தொட்டிகள் மட்டுமேயாகும். தொட்டிக்குள் இருப்பதை விடுத்து செடிகள் வெளிவந்துவிட வேண்டும். பக்தி என்பது செடியை தொட்டியில் வைப்பதற்கு நிகராகும். தனது நெறியில் செல்லப் பாடுபடும் ஆன்மாவுக்கு இது ஒரு பாதுகாப்பு ஆகும்.

# உடம்பில் கத்தியால் குத்தி மரியாதை இந்தோனேஷியா நாட்டில் விநோதம்

இந்தோனேஷியாவில் உள்ள மக்கள் இறந்த முன்னோர்களுக்கு மரியாதை செலுத்தும் விநோத விழாவை கோலாகலமாக கொண்டாடியுள்ளனர்.

இந்தோனேஷியாவின் செலும் பிங் கிராமத்தில் இறந்த முன்னோர்களுக்கு மரியாதை செலுத்தும் குசாபா பூசே என்ற விநோத விழா நடைபெற்றுள்ளது. இதில் ஆண்கள் விநோதமாக ஆடை அணிந்து அணிவகுத்து நடந்து சென்றனர்.

ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த விழாவில் ஆண்கள் தீ மூட்டி பாரம்பரிய நடனமான கத்திகளை வைத்து ஆடும் கெரிஸ் நடனம் ஆடுவார்கள். இந்த விழாவில் ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர்.



இந்த விழாவின் போது சில ஆண்கள் மிகவும் ஆழ்ந்த நிலைக்கு சென்றதால் கத்திகளை தங்களது உடம்பில் குத்திக் கொண்டனர்.

இறந்த முன்னோர்களுக்கு பூசாரி படையல் வைத்து வழிபாடு செய்தார்கள். அந்தக் கிராமத்தில் மொத்தம் 3000 மக்கள் மட்டுமே வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 2 | | | 9 | | |
| | 4 | 7 | | 1 | 9 | | 5 | |
| | 9 | | 8 | 4 | 5 | | 7 | 2 |
| | | | | | | | | 5 |
| 6 | | 3 | 4 | | 2 | 1 | | 7 |
| 4 | | | | | | | | |
| 9 | 3 | | 7 | 8 | 6 | | 1 | |
| | 1 | | 5 | 9 | | 2 | 8 | |
| | | 4 | | | 3 | | | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 5 | 1 | 2 | 6 | 9 | 3 | 8 |
| 9 | 6 | 2 | 4 | 8 | 3 | 5 | 7 | 1 |
| 1 | 3 | 8 | 9 | 7 | 5 | 6 | 4 | 2 |
| 3 | 5 | 1 | 8 | 9 | 7 | 2 | 6 | 4 |
| 8 | 2 | 9 | 6 | 4 | 1 | 3 | 5 | 7 |
| 6 | 7 | 4 | 3 | 5 | 2 | 8 | 1 | 9 |
| 4 | 8 | 6 | 7 | 3 | 9 | 1 | 2 | 5 |
| 5 | 1 | 7 | 2 | 6 | 8 | 4 | 9 | 3 |
| 2 | 9 | 3 | 5 | 1 | 4 | 7 | 8 | 6 |

# தாச்சிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.22
பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிவொளி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சிப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி 12:5 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி 12:3 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ரி- 23)



தேசியமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கல் போட்டியில் 19 வயதின் கீழ் பெண்களுக்கான 63 கிலோகிராம் நிறைப்பிரிவில் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட யா/சிதம்பரக் கல்லூரி மாணவி செல்வி இராமகிருஸ்ணன் தசாந்தினி, கல்லூரி அதிபர், மற்றும் பயிற்றுவிப்பாளருடன். (ரி-422)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே.குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான அணிக்கு 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

இதில், மாலை 3.45 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் குருநகர் சென்.றொக் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.55 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கலைஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(ரி- 23)

* * *

யாழ்ப்பாணம்,செப்.22
பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிவொளி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சிப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இன்று திங்கட்கிழமை 7 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் வைகறை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

# தெரிவுப் போட்டிகள் ஆரம்பம்



ஜனாதிபதி சவால் கிண்ணத்துக்கான அணிக்கு 6 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான பிரதேச மட்ட தெரிவுப்போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு, களுதாவளை பொது மைதானத்தில் ஆரம்பமானது.

இதன்போது மண்முனை தென் எருவில்பற்று, போரதீவுப்பற்று, மண்முனை மேற்கு ஆகிய 3 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் பங்குகொண்டன.

மண்முனை தென்எருவில் பற்று பிரதேசத்திலிருந்து 22 கழகங்களும், போரதீவுப் பற்று பிரதேசத்திலிருந்து 9 கழகங்களும், மண்முனை மேற்கு பிரதேசத்திலிருந்து 6 கழகங்களும் பங்குபற்றின.

ஒரு பிரதேசத்திலிருந்து ஒரு கழகம் வீதம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேசங்களிலுமிருந்து 14 கழகங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன. இவ்வாறு தெரிவு செய்யப்படும் 14 கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம்.என். நைறூஸ் கூறினார்.

ஜனாதிபதி சவால் கிண்ண அணிக்கு 6 பேர் கொண்ட தேசிய மட்ட கிரிக்கெட் சுற்று இறுதிப் போட்டிக்காக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 4 கழகங்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதில் அங்கத்தவர்கள் உட்படபலர் கலந்து கொண்டனர். (ரி- 315)

# வடமாகாண தடகளப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.22
வடமாகாணத்துக்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமானது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டி களில் முதல் மூன்று இடங் களைப் பிடித்தோர் விபரங் கள் முறையே வருமாறு :

**10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் - ஆண்கள்**
டெல்மன் - 34 நிமிடம் 4 செக்கன்கள் (கிளிநொச்சிமாவட்டம்)
ஜெயந்தன் - 36 நிமிடம் (யாழ்.மாவட்டம்)
கெவின் - 36 நிமிடம் 21 செக்கன்கள்(முல்லைத்தீவு மாவட்டம்)

**10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் - பெண்கள்**
ஆர்.சாளினி - 21 நிமிடம் 52 செக்கன்கள் (வவுனியா மாவட்டம்)
நேர்மதி - 22 நிமிடம் ஒரு செக்கன் (வவுனியா மாவட்டம்)
கோகிலவாணி - 22 நிமிடம் 42 செக்கன்கள்(வவுனியா மாவட்டம்)

**தட்டு எறிதல் - பெண்கள்**
சர்மிலா - 31.09 மீற்றர் (யாழ்.மாவட்டம்)
வினோஜிதா - 27.17 மீற்றர் (கிளிநொச்சி மாவட்டம்)
நிவோதா - 26.94 மீற்றர் (முல்லைத்தீவு மாவட்டம்)

**முப்பாய்ச்சல் - ஆண்கள்**
றொகன்குருஸ் - 13.51 மீற்றர்(மன்னார் மாவட்டம்)
கமல்ராஜ் - 13.34 மீற்றர் (கிளிநொச்சி மாவட்டம்)
சியந்தன் - 13.30 மீற்றர் (மன்னார் மாவட்டம்)

**குண்டு போடுதல் - ஆண்கள்**
ஆர்.நிமேலேந்திரா - 12.57 மீற்றர்(யாழ்.மாவட்டம்)
றொஜினேல்சூசை - 11 மீற்றர்(மன்னார் மாவட்டம்)
ஜினோஷண் - 10.19 மீற்றர்(வவுனியா மாவட்டம்)
(ரி-23)



# செல்டன், மிலாண்டோ அசத்தல்; சென்றலைட்ஸ், பற்றீசியன் அரையிறுதிக்கு

செல்டனின் அதிரடி ஆட்டத்தால் சென்றலைட்ஸ் அணியும், மிலாண்டோவின் அபார பந்து வீச்சால் பற்றீசியன் அணியும் அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினால் 30பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் பற்றீசியன் அணியை எதிர்த்து வை.எம்.சி.ஏ. அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய வை.எம்.சி.ஏ.அணி 26.3 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அந்த அணி சார்பாக சுதா 32, தரன் 28, கேசிகன், அனோஜன் தலா 11 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பற்றீசியன் அணி சார்பாக மிலாண்டோ 4 இலக்குகளையும், நிதர்சன், றோபட் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 23.4 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சதானந்தன் 54 ஓட்டங்களையும் அஜித் 40 ஓட்டங்களையும், டார்வின் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் வை.எம்.சி.ஏ. அணி சார்பாக ஜெயராசா 2 இலக்குகளையும், சுவேந்திரன், சுபாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர். இறுதியில் பற்றீசியின் அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் திருநெல்வேலி ரி.சி.சி. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ரி.சி.சி. அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக மிதுன் 54 ஓட்டங்களையும், அசோக் 47 ஓட்டங்களையும், லவக்சான் 40 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக டர்வின் 3 இலக்குகளையும், மதுசனன் 2 இலக்குகளையும், சாள்ஸ், துசாந் ஆகியோர் தலா ஒவ்வொரு இல்க்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரன் செல்டன் ரி.சி.சிஅணியினரின் பந்து வீச்சை நாலா பக்கமும் ஆறுகளாகவும் நான்குகளாகவும் மாற்றிக் கொண்டிருந்தார். இதனால் ரி.சி.சி.அணியினர் பந்து வீசுவதில் பெரும் சிரமப்பட்டனர். இதனால் சென்றலைட்ஸ் அணியினர் 23.5 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் செல்டன் 95 ஓட்டங்களையும், டர்வின் 54 ஓட்டங்களையும், பதுசனன் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரி.சி.சி.அணி சார்பாக கோகுலன், கௌசிகன், விதுன், கோபி, சுரேந்திரன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கை கைப்பற்றினர். இதனால் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி அபார வெற்றி பெற்றதுடன் அரையிறுதியாட்டத்துக்கும் தகுதி பெற்றது. (ரி-422)




வடமாகாணத்துக்குட்பட்ட மாவட்டங்களுக்கிடையிலான தடகளப் போட்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற குண்டு போடுதல் போட்டியில் முதலாமிடங்களைப் பெற்ற யாழ்.மாவட்ட வீரர் நிமேலேந்திரனும், வீராங்கனை சர்மிலாவும் போட்டியில் கலந்து கொண்ட போது. (ரி- 23)


# மில்லர், பட்டேலின் இறுதிநேர அதிரடி வெற்றி பெற்றது பஞ்சாப்



மில்லர், பட்டேலின் அதிரடியான இறுதிநேர இணைப்பாட்டத்தின் உதவியுடன் பார்படோஸ் அணியை வீழ்த்தி தொடரில் இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது கிங்ஸ் லெவன் பஞ்சாப்.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பார்படோஸ் ரிடென்ற்ஸ் அணிக்கு தொடக்க வீரர் முனவீர அதிரடியாக ஆட, மறுமுனையில் பேர்கின்ஸ் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். முதலாவது இலக்கிற்காக 54 ஓட்டங்கள் பெறப்பட்டிருந்த நிலையில் பேர்கின்ஸ் 10 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த முனவீர 26 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஒரு பக்கத்தில் இலக்குகள் சரிந்தாலும் மறுமுனையில் தன்னை நிலைப்படுத்திக் கொண்ட ராய்மன் ரீபர் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த வழி செய்தார். நிர்ணயிக்கப் பட்ட 20 ஓவர்கள் நிறைவில் பார்படோஸ் அணி 6 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்திலிருந்த ரீபர் 4 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் விளாசி 60 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பதிலுக்கு ஆடிய பஞ்சாப் அணிக்கு சேவாக், வோக்ரா ஓரளவுக்கு சிறப்பான தொடக்கத்தை அளித்தனர். வோக்ரா 27 ஓட்டங்களுடன் வெளியேற, உள்நுழைந்த சகா 14 ஓட்டங்களுடனும், அதிரடி மன்னன் மக்ஸ்வெல் 16 ஓட்டங்களுடனும் வெளியேறினர். அவர்களைத் தொடர்ந்து சேவாக்கும் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மக்ஸ்வெல் ஆட்டமிழந்த குறையைத் தீர்க்கும் முகமாக மில்லர் அதிரடியாக ஆடினார். இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த இவர் அக்ஷர் பட்டேலுடன் இணைந்து வெற்றியை உறுதி செய்தார். இரண்டு பந்துகள் மீதமிருந்த நிலையில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது பஞ்சாப் அணி. மில்லர் 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக 46 ஓட்டங்களையும், பட்டேல் ஒரு சிக்ஸர், 3 பவுண்டரிகள் அடங்கலாக 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். இதன் மூலம் பஞ்சாப் அணி 4 இலக்குகளால் வெற்றி பெற்று முதன்மைச் சுற்றில் இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது. ஆட்ட நாயகனாக மில்லர் தெரிவானார். (ரி)



# அஜ்மலுக்கு ஆதரவு தரும் முரளி

சர்வதேச கிரிக்கெட் சபையினால் பந்து வீசுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் வீரர் சயீட் அஜ்மலுக்கு இலங்கை அணியின் முன்னாள் சுழல் ஜாம்பவான் முத்தையா முரளிதரன் ஆதரவளித்துள்ளார்.

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மலின் பந்துவீச்சு விதிமுறைகளை மீறியதாக உள்ளது எனக்கூறி சர்வதேச கிரிக்கெட் சபை அவருக்கு பந்துவீச்சுத் தடை விதித்தது. பல்வேறு தரப்பினரும் ஐ.சி.சியின் நடவடிக்கை சரியானதே என்று கூறிவரும் நிலையில் முரளிதரன் அஜ்மலுக்கு ஆதரவு தரும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது பற்றி கூறுகையில், இப்போது உள்ள நிலை கடினமான ஒன்றாக இருக்கும். இந்த சமயத்தில்தான் தடைகளை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும். மனதளவில் வலிமையாக இருந்தால் தான் மீண்டும் வர முடியும். இதே போன்ற குற்றச்சாட்டுகள் என் மீது சுமத்தப்பட்ட போது நான் அவரின் மனநிலையில் தான் இருந்தேன். அவர் தனது கைகளை 15 பாகைகளுக்கு குறைவாக மடக்கி, பந்து வீசி தன்னை நிரூபிக்கும் போது அவரால் மறுபடியும் சாதிக்க முடியும் என்று முரளிதரன் கூறியுள்ளார்.

முரளிதரனும், தற்போது அஜ்மல் எதிர்கொண்டுள்ளது போன்ற சிக்கலில் மாட்டிக் கொண்டவர். 2004 ஆம் ஆண்டு இவருடைய பந்து வீச்சு, விதிமுறைக்கு புறம்பானது என ஐசிசியினால் தடைவிதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## இன்றைய CLT-20 ஆட்டங்கள்

மாலை 4 மணி

டொல்பின்ஸ் VS சென்னை சுப்பர் கிங்ஸ்

# சம்பியனானது சானியா - பிளாக் ஜோடி

ஜப்பானில் நடைபெற்ற டோக்கியோ ஓபன் ரென்னிஸ் தொடரில் சானியா - பிளாக் ஜோடி சம்பியன் பட்டத்தை வென்றது.

டோக்கியோ ஓபன் ரென்னிஸ் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியா, சிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி, ஸ்பெயினின் முகுருசா, கார்லா சுவாரஸ் ஜோடியை எதிர்கொண்டது. போட்டியின் முதல் செற்றை 6-2 என்ற ரீதியில் கைப்பற்றிய சானியா ஜோடி, இரண்டாவது செற்றை 7-5 எனத் தன்வசப்படுத்திக் கொண்டது. ஒரு மணித்தியாலமும், 15 நிமிடங்களும் நீடித்த போட்டியின் முடிவில் சானியா, பிளாக் ஜோடி 6-2, 7-5 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

சானியா - பிளாக் ஜோடி அண்மையில் நடந்து முடிந்த அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடரிலும் சம்பியன் பட்டத்தை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)



# பூப்பந்தாடிய டோனி

இந்திய கிரிக்கெட் அணித்தலைவரான மகேந்திரசிங் டோனி, பூப்பந்தாட்டம் விளையாடி அசத்தியுள்ளார்.

நடைபெற்றுவரும் சம்பியன் லீக் ரி- 20 தொடரின் ஆட்டம் ஒன்றில் பங்கேற்பதற்காக, டோனி அணித்தலைவராக உள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பெங்களூருக்கு சென்றுள்ளது.

பெங்களூர் சின்னசாமி விளையாட்டு மைதானத்தின் உள்ளரங்கில் கர்நாடக மாநில கிரிக்கெட் சங்க வீரர்கள் சிலருடன் பூப்பந்தாட்டம் ஆடியுள்ளார் டோனி. இரட்டையர் ஆட்டங்களில் விளையாடிய டோனி அதிரடியாகநிறைய ஸ்மாஷ்களை ஆட அங்கு குழுமியிருந்த சிறிய ரசிகர்கள் கூட்டம் ஆரவாரம் செய்துள்ளது.


டோனிக்கு பூப்பந்தாட்டம் மீது அலாதிப் பிரியம் உண்டு ஒவ்வொருமுறையும்சின்னசாமிவிளையாட்டு மைதானத்திற்கு அவர் வரும் போது பூப்பந்தாட்ட 'ராக்கெற்றை' எடுத்துக் கொண்டு விளையாடத் தொடங்கி விடுவார் என்று கர்நாடகா மாநில கிரிக்கெட்சங்கஅதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ((ரி)



**99** ஆம் அகவையில் கால் பதிக்கும்
சிவத்தமிழ் வித்தகர், மூதறிஞர், பண்டிதமணி, கலாநிதி
சிவத்திரு **க.வைத்தீசுவரக்குருக்கள்**
அவர்களுக்கு

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே
(சிவஞானபோதம்)



அன்பொழுக்கம் பண்பாடு அருளுள்ளம் அடக்கம்
அறிவுசெறி பேராண்மை ஆற்றலுயர் சான்றோன்
தன்னிகரில் குருக்களெனும் மலையிலுருவான
தமிழ் வளர்ச்சிக்கழகம் மணிவாசகரின் சபையும்
மன்னுபுகழ் இரு நதியாய்ப் பெருநிதியம் கொழித்து
மருவி வளர் தமிழ் சைவப் பயிர் விளைக்கும் பணியில்
பொன்னுமணி விழாக்காணக் கண்டுகளி கொள்ளும்
புண்ணியனே புகழ்குன்றே போற்றி நிதம்வாழி

வாழ்த்துவோர் :
காரைநகர் மணிவாசக சபை.

## அதிரடியில் குட்டி சச்சின்



இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர் பள்ளிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் 42 பந்துகளில் 118 ஓட்டங்கள் விளாசி சாதனை படைத்துள்ளார்.

பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சம்பியன் போட்டியில் தீருபாய் அம்பானி சர்வதேசப் பள்ளி சார்பில் ஆடிய அர்ஜுன் டெண்டுல்கரின் அதிரடி ஆட்டத்தினால் அந்தப் பள்ளி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

தனது மகனின் இந்த அதிரடி ஆட்டம் குறித்த செய்தியை, சச்சின் டெண்டுல்கர் தனது டுவிட்டர் மற்றும் முகப்புத்தக வலைத்தளங்களில் பதிவு செய்துள்ளார். (ரி)

## மரண அறிவித்தல்



### திருமதி சிவசோதி கனகசுந்தரம்

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி சிவசோதி கனகசுந்தரம் 19.09.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தையா (விதானையார்) - சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கனகசுந்தரத்தின் மனைவியும், திருமதி சித்திராதேவி - இளங்கோ (கனடா), திருமதி நேயப்பிறேமா (இளைப்பாறிய எழுதுவினைஞர்) - சின்னையா, முருகதாஸ், சிவராசா (லண்டன்), விக்கினேஸ்வரமூர்த்தி, சோமஸ்காந்தன் (லண்டன்), சிவஅன்பு (லண்டன்), சதாசிவம் (சுவிஸ்), காலஞ்சென்ற பாலகுமார் (பத்மன்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2014) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கச்சாய் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.
(52501)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 23.08.2014 அன்று சிவபதமடைந்த

### அமரர் விஜயரட்ணம் சுதாகரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் இன்று 22.09.2014 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் 24.09.2014 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **சுன்னாகம் ஐயனார் கோயில் மண்டபத்திலும்** நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

ஐயனார் கோயிலடி,
மல்லாகம்.

இங்ஙனம்,
தந்தை, தாய், மனைவி,
பிள்ளைகள், சகோதரிகள்

(52548)

## கண்ணீர் அஞ்சலி




கண்டாவளை பிரதேசசெயலகத்தில் சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றும் **திருமதி சு.மதிவதனி** அவர்களின் அன்புத் தந்தையார்

**பொன்னையா. கிருஷ்ணசாமி**

கடந்த வெள்ளிக்கிழமை (19.09.2014) காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரதேச செயலாளரும்,
உத்தியோகத்தர்களும்
பிரதேசசெயலகம், கண்டாவளை
(52546)(08)

## மரண அறிவித்தல்



### நாகமுத்து இராசதுரை

மாதனை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து இராசதுரை அவர்கள் 20.09.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2014) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதனை,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## 14 ஆம் ஆண்டு நினைவுகள்



### திருமதி கலைமணி இராசதுரை

அன்னை மடியில்
22 . 10 . 1954

ஆண்டவன் அடியில்
26 . 09 . 2000

அம்மா அம்மா எங்கள் தெய்வமே!
அன்போடு அரவணைத்த அம்மாவே!
ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும்
அம்மா உங்கள் அன்பிற்கும் ஈடாகுமா!
ஒரு முறையேனும் எங்களைக் காண
ஓடோடி வரமாட்டீர்களா?
என்றும் அன்புத் தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடமியன்,
வரணி.
(52538)(4.3.6)

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி

### அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் 01.01.2013 ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வவுனியா வடக்கு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது 08.02.2013ம் திகதிய NP/05/01/GE6/UNS/RQ இலக்க கடிதத்திற்கமைவாகவும் உள்ளூராட்சி ஆணையாளர் வடக்குமாகாணம் அவர்களின் NP/14/01/ET/ET5/ser.min/Gu/2013 இலக்க 20.01.2014ம் திகதிய கடிதத்திற்கு அமைவாகவும் கீழ் காணப்படும் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்.**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு சம்பளத்திற்கேற்ப பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

**அடிப்படைத் தகைமைகள்:-**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்தினத்தன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி வவுனியா மாவட்ட எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

**தெரிவு செய்யப்படும் முறை:-**

* கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ரூபா 100.00 செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு **செயலாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், பதவி இலக்கம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்பு திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னராகவோ, நியமனத்திற்கு பின்னராகவோ, நியமனத்தின்போதோ அல்லது விண்ணப்பத்தில் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் வழங்கப்பட்டிருக்குமாயின் நியமனமும் உடனடியாக முடிவுறுத்தப்படும்.
6. விண்ணப்பங்கள் யாவும் 09.10.2014ம் திகதி அல்லது அதற்கு முன்பாக எமக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**பதவிகள் பற்றிய விபரங்கள்.**

| | | |
|---|---|---|
| 01. | சுகாதாரத் தொழிலாளி | III |

சம்பள அளவுத்திட்டம்:- PL-1-2006-A (11,730 -10X120-10X130-10X145-12X160-17,600)

**மேற்குறித்த பதவிகளுக்கான கல்வித்தகைமைகள்,**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* மேற்குறிப்பிடப்பட்ட பதவியில் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் தரம் 08 சித்தி கல்வித் தகைமையாகக் கொள்ளப்படும்.

**பா.பிரபாகரன்**
செயலாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.

(C/5919)

## நன்றி தெரிவிக்கின்றோம்



பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையையும், அன்னசத்திர ஒழுங்கையையும் இணைக்கின்ற ரயில் கடவைப் பாதையை எங்களின் வேண்டுகோளிற்கு இணங்க வந்து அவ்விடத்தை பார்வையிட்டும் பாதையை அமைத்துத் தருவதாக உத்தரவாதம் அளித்தமைக்கும், உடனடியாக அதனை ஓரளவு செப்பனிட்டு தந்து மக்கள் போக்கு வரத்தை இலகுவாக்கியமைக்கும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், யாழ் மாநகர முன்னாள் மேயர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களுக்கும் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் திரு.சி.தவராசா மற்றும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் திரு.அ.ரவீந்திரதாசன் அவர்களுக்கும், அவர்களுடன் வருகை தந்த ஏனைய அதிகாரிகளுக்கும் மற்றும் ரயில்வே அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவ்விடத்தில் சமிக்ஞை விளக்குகளை பொருத்தி சிறுவர்கள், முதியோர்கள் இலகுவாக பயணிக்கக் கூடிய வகையில் ஒழுங்கமைத்து தருமாறு மக்கள் ஆகிய நாம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை வாழ் மக்கள்,**
**அன்னசத்திர ஒழுங்கை வாழ் மக்கள் சார்பாக**



**ஸ்ரீலங்கா ரயில்வே திணைக்களம்**
**பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ரயில்பாதையில் ரயில் பரீட்சார்த்த வெள்ளோட்டம் '**

பளைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ரயில் பாதையில் பரீட்சார்த்தரீதியான அதிவேகமான போக்குவரத்து 20.09.2014 தொடக்கம் 22.09.2014 வரை இலங்கை ரயில்வேத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

பொதுமக்கள் ரயில் கடவைகளைக் கடக்கும்போதும் ரயில்பாதையின் அருகில் செல்லும்போதும் இதனைக் கருத்தில் கொள்வதுடன் தங்கள் கால் நடைகளின் நடமாட்டத்தையும் ரயில்பாதையருகில் கட்டுப்படுத்தும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(52475) (12.3.6) **பொதுமுகாமையாளர், ரயில்வே திணைக்களம்**



## கடமை வீரனுக்கோர் கண்ணீர்க் காணிக்கை

### தம்புத்துரை விஜயேந்திரன்



கடவுளிடம் எமது
பிரார்த்தனைகளைச் சேர்த்தோம்
கடவுள் தன்னிடம்
உன்னைச் சேர்த்துக்கொண்டார்

வேகமும் சுறுசுறுப்பும்
உமது இயல்பு
மரணத்திலும் அது சேர்ந்திற்றோ!

மனிதத்தின் இன்னொரு பெயர் -
இன்று மரணத்தின் வசமாக
மனிதமே நம்பிக்கையற்று விட
மனம் இங்கு அழுகிறது சோதரனே!

பிரதேச செயலரும் திட்டமிடல் கிளை உத்தியோகத்தரும்.
**பிரதேச செயலகம், கரவெட்டி.** (கி.15914) (45.6.3)



## மரண அறிவித்தல்

### அரியகுட்டி யோகரத்தினம்



முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணம், சிறுப்பிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி யோகரத்தினம் 20.09.2014 சனிக்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முன்னாள் கிராமசபை தலைவர் அரியகுட்டி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும், சிறுப்பிட்டி காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் நல்லம்மா தம்பதியரின் மருமகனும், சத்தியபாமாவின் அன்புக் கணவரும், பிரபாநந்தினி (கனடா), [illegible]க்கியகலா (லண்டன்), தர்மிளா (லண்டன்) ஆகியோரின் தந்தையும், கிருஸ்ணகுமார், அன்புச் செல்வன், கேதீஸ்வரன் ஆகியோரின் மாமனும், அபினன், அபிசா, அபினா, அபிசன், அபினாஸ், அபிராம், அதுசன் ஆகியோரின் பேரனும், செல்வரத்தினம் (லண்டன்) இராசரட்ணம் (கனடா), அரியரத்தினம் (பவுணன் - கனடா), இராஜேஸ்வரி, காலஞ்சென்ற நகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீசத்தியலிங்கம் (லண்டன்), ஸ்ரீ சத்தியநேசன், ஸ்ரீ சத்திய வரதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.09.2014) செவ்வாய்க்கிழமை சிறுப்பிட்டி மேற்கு தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப.10.00 மணியளவில் சிறுப்பிட்டி மேற்கு பத்தகலட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,சிறுப்பிட்டி.
TP: 077 079 0167

(52537) (12.3.6)

தகவல்:
**குடும்பத்தினர்.**


## மட்டக்களப்பு புனித மிக்கேல் 141 ஆண்டு நிறைவு நடைபவனி



மட்டக்களப்பு, செப். 22

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் 141 ஆண்டு நிறைவை முன்னிட்டு 'மிக்' நடை பவனி சனிக்கிழமை காலை கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் அடிகளார் டொமினிக் சுவாமிநாதன் தலைமையில் இடம்பெற்றது.

புனித மிக்கேல் கல்லூரியும் அந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த நடை பவனியை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயரும், புனித மிக்கேல் கல்லூரி பழைய மாணவர் சங்கப் போஷகருமான அடிகளார் யோசப் பொன்னையா கல்லூரி வளாகத்திலிருந்து ஆரம்பித்து வைத்தார்.

கல்லூரியின் பெருமைகளையும் அதன் சரித்திரத்தையும், சாதனைகளையும் எடுத்துக் காட்டும் அலங்கார ஊர்திகள், பதாகைகள் என்பன நடைபவனியில் எடுத்துச் செல்லப்பட்டன.

நடை பவனி மட்டக்களப்பு - திருகோணமலை வீதி வழியாக தாண்டவன்வெளி தேவாலயத்தைக் கடந்து சற்றுத் தூரம் வரை சென்று மீண்டும் அதே பாதை வழியாக புனித மிக்கேல் கல்லூரியை வந்தடைந்தது.

இந்தப் பவனியில் கல்லூரியின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். (ஓ-10)

## இந்திய வீட்டுத் திட்டத்தில் போரதீவுப்பற்றுக்கு 488

போரைதீவுப்பற்று, செப்.22

போரதீவுப்பற்று பிரதேசத்துக்கு மாத்திரம் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 488 வீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம், தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:-

இந்திய அரசின் உதவியில் போரதீவுப் பற்று பிரதேசத்துக்கு 488 வீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் இந்தப் பிரதேசத்திலுள்ள [illegible]மடு கிராமத்துக்கு 48 வீடுகளும், மாலையர்கட்டு கிராமத்திற்கு 45 வீடுகளும், செல்வாபுரம் கிராமத்திற்கு 119 வீடுகளும், வம்மியடியூற்று கிராமத்துக்கு 125 வீடுகளும், பாலையடி வட்டைக் கிராமத்துக்கு 52 வீடுகளும், பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன, போரதீவுப் பற்று பிரதேசத்திலிருந்து கடந்த காலங்களில் இடம்பெயர்ந்து இந்தியாமற்றும்வன்னி பிரதேசத்திலும் இடம் பெயர்ந்து மீண்டும் இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள 99 பேருக்கும் இவ்வீட்டுத்திட்டத்தில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன - என்றார். (ஓ-10)

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

### நடமாடி நஞ்சு விற்போர்

தமிழ்நாட்டுக்குச் சென்று வந்த ஒருவர் அங்குள்ள சிறு தொழில் முயற்சியாளர்களின் நடமாடும் சேவை பற்றிக் குறிப்பிடுகையில் பாண்வண்டி, பழவண்டி என ஆரம்பித்து அடுக்கிக் கொண்டு போனவர் நடமாடும் அயன்வண்டி என்று முடித்தார். சைக்கிள் சில்லுகள் நான்கு பூட்டிய பலகைத் தட்டில் துணிகள் விரிக்கப்பட்ட மேடையாக அயன்வண்டிகள் ஆங்காங்கே நடமாடும். துவைத்த துணி வகைகள் வீட்டுக்கு வீடு சென்று சேகரிக்கப்பட்டு, கரிக்கட்டித்தணல் அயன் பெட்டியினால் மினுக்கப்பட்டு, மடித்துக் கொண்டு,போய்க் கொடுப்பார்கள். கேட்பதற்குச் சுவையாக இருந்தாலும் அங்குள்ளோரது அன்றாட சீவியத்துக்கான சிந்தனைகளின் வெளிப்படுத்துகைகளை உணரக் கூடியதாகவுள்ளது.

எமது மண்ணிலும் காலாதிகாலமாக தலைச்சுமையாகத் தூக்கிச் சென்று கோயில்கள், பொது இடங்களில் குந்தியிருந்து கடலை கச்சான் விற்போர்; தள்ளுவண்டி, ஓட்டோக்களில் மிக்சர், பாண், ஐஸ்கிறீம் விற்போர்; கொழும்பு தொடர் மாடிகளுக்கு முன்பாக வான்களில் வந்து இடியப்பம், பிட்டு, சம்பல் சொதியுடன் விற்போர் என அடுக்கிக் கொண்டே போகலாம். பெரும் முதலிட்டு கடைவைத்து தொழில்செய்ய இயலாத, ஆனால் உழைப்பை மட்டும் நம்பி வாழும் கூட்டத்தினர், அன்றாடம் காய்ச்சிகள் இங்கும் இருக்கவே செய்கின்றனர். இந்த மாதிரியான செயற்பாடுகளை சமூகத்துக்கான சேவைகள் என்ற வகைக்குள் அடக்கிக் கொள்வதும் தவறல்ல. நடமாடும் வியாபாரத்தில் தனித்துவம் காட்டவென்று மேற்குறிப்பிட்ட அனைத்தையும் மேவி விட்டார்கள் இங்குள்ள சிலர். ஹைஏஸ் வானில் நடமாடும் மதுபான நிலையம், ஓட்டோவில் கஞ்சா விற்பனை என்று களமிறங்கி விட்டார்கள் இந்தப் பிரகிருதிகள். குடித்துவிட்டு ஆங்காங்கே விழுந்து கிடப்போர் மீதான பச்சாதாபத்தினாலோ, வீதிகளில், வளவுகளில், வடிகால்களில் வீசப்பட்டிருக்கும் வெற்றுக் கலங்களின் மீதான அனுதாபத்தினாலோ இவர்கள் இந்த நடமாடும் சேவைக்கு முன்வரவில்லை. எப்படியாகிலும் எங்கள் இளசுகளைக் கெடுத்தே தீருவது என நடமாடும் இந்த நஞ்சு விற்பனையாளர்களை தலையெடுக்க விடாது தடுக்க வேண்டியது சமூகப் பொறுப்பாகும்.

செல்வவேலாயுதம்


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்**

மலர்வு 15 . 01 . 1922
உதிர்வு 25 . 08 . 2014



எமது இதய தீபம்
அமரர் **புண்ணியமூர்த்தி காசிப்பிள்ளை** (பத்தர்)

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை எம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
[illegible] புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
உங்கள் அன்பும் அரவணைப்பும் நினைத்து....
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.09.2014) திங்கட்கிழமை இல்லத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு (24.09.2014) புதன்கிழமை நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள "திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில்" முற்பகல் 10.00 மணியளவிலும் நடைபெறவுள்ளது. தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]
[illegible], திருநெல்வேலி.
021 320 2694

**குடும்பத்தினர்.**



## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் அபிவிருத்திஉத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி பு.சுதர்சனா** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி ஜேசுதாஸன் நாகபூஷணி**

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்ப்பாசனத்திணைக்களம், யாழ்ப்பாணம். (52540) (4.6.3) நீர்ப்பாசனப் பொறியியலாளரும், உத்தியோகத்தர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றும் எமது சக ஆசிரியர் **சூ.ஜெனட் ரவீந்திரன்** அவர்களின் அன்புத் தந்தை

**மரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியைக் கேட்டு ஆறாத்துயரடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்
கைதடி. (52542)(08)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 03.10.2013 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது சகோதரி

**அமரர் தவராசா புஸ்பமலர்**



அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவு நாள் ஆத்ம இளைபாற்றிற்காக இன்று (22.09.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

சகோதரர்கள்,
துரைலிங்கம், கணேசலிங்கம்.

3ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

தோற்றம் 17.12.1950 மறைவு 03.10.2013

## உள்ளத்தை உறைய வைத்தெம் உறவுகள் பறந்தோடிய 14ஆம் ஆண்டு நினைவலைகள்.....

அமரர் கணபதிப்பிள்ளை யோகலிங்கம்



ஜனனம்: 04.10.1948

அஸ்தமனம் 26.09.2000
திதி: சதுர்த்தசி

செல்வி தமிழரசி யோகலிங்கம்



ஜனனம்: 23.05.1975

யுத்த கோரப்பிடியில் சிக்கி எம் உறவுகள் எமைப் பிரிந்து பதினான்காம் ஆண்டில் அவர் தம் ஆத்மா சாந்தியுடன் நிலைபெற்றிருக்க இறைவன் தாளினை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சந்தை வீதி, கொடிகாமம்.
TP-077 608 2232 (52541)(12.6) குடும்பத்தினர்.

## ஈராண்டு நினைவுகளுடன்

**சின்னத்தம்பி மகேந்திரன்**

மலர்வு 04.01.1945 உதிர்வு 22.09.2012



**உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ் நாள்கள் நீடிக்கும்படி உன் தந்தையையும் தாயையும் மதித்து நட**

குடும்பத்தினர்.
148, பழைய பூங்காவீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
077 698 5271

# டெங்கு ஒழிப்புத் திட்டம் 24 கிராம அலுவலர் பிரிவுகளில்

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள உக்டா எனும் அரச சார்பற்ற அமைப்பின் ஏற்பாட்டில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 24 கிராம சேவகர் பிரிவுகளிலும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.



சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வின் போது அடுத்த டெங்குவின் பலி நீங்களா? எனும் தொனிப் பொருளில் கையேடும் மக்களுக்கு வழங்கப்பட்டதுடன் டெங்கு பெருகும் இடங்களும் அழிக்கப்பட்டன.

இதில் பட்டிப்பளை பிராந்திய வேள்ட்விஷன் திட்ட முகாமையாளர் து.அனுராஜ் கிராம சேவை உத்தியோகத்தர்கள், உக்டா நிறுவன உத்தியோகத்தர்கள் ஏனைய உப குழுக்களின் அங்கத்தவர்கள், கிராம அமைப்புகளின் அங்கத்தவர்கள், இளைஞர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டு டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-10)

# வைத்தியசாலையில் சிரமதானம்

ஆரையம்பதி, செப்.22

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் சனிக்கிழமை சிரமதானப் பணி நடைபெற்றது. வின்சன்ற் டி போல் ஞாபகார்த்தமாக இந்தச் சிரமதானப் பணியை ஏற்பாடு செய்திருந்ததாக வின்சன்ற் டி போல் சபையின் ஆரையம்பதி பிராந்தியத் தலைவர் ரீ.மோகனராஜா தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஆரையம்பதி பாத்திமாபுர கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் வின்சன்ற் டி போல் சபை ஆகிய அமைப்புகளின் சுமார் 50 இற்கு மேற்பட்ட தொண்டர்கள் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலைச் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர். வைத்தியசாலை வளாகமும், வைத்தியசாலையின் 4 ஆம் விடுதியும் முழுமையாக சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

வைத்தியர் எஸ்.ஸ்ரீபரதனின் இணைப்பாக்கத்தின் கீழ் நடைபெற்ற இந்தச் சிரமதானப் பணியில் மாவட்ட வைத்திய அதிகாரி மோகனாவதி சுவேந்திரன், வைத்தியர்களான ரி.திவாகரன், எஸ். ஸ்ரீபரதன், வின்சன்ற் டி போல் சபையின் பிராந்தியத் தலைவர் ரீ.மோகனராஜா, பாத்திமாபுர கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் அனுலா அன்ரன், தலைவர் எஸ், சுரங்கா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக (Lava Hospital அருகில்) றக்கா Road இல் 4 படுக்கையறைகளுடன் கூடிய வீடு காணியுடன் விற்பனைக்குண்டு. (யாழ். ரயில் நிலையம் 5 நிமிடம்)

(சி.16628) (46.6.3) தொ.பே: 077 305 0469, 077 428 9275

## மரண அறிவித்தல்

**சண்முகலிங்கம் கபிலன்**



முத்துக்கிருஸ்ணர் வீதி சுன்னாகத்தைச் சொந்த இடமாகவும் பிரான்ஸை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண் முகலிங்கம் கபிலன் (20.09.2014) அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் தெய்வ நாயகி (பிரான்ஸ், முன்னாள் சுன்னாகம் ப. நோ.கூ.ச.ஊழியர்) தம்பதியரின் அன்பு மகனும் வேணுயாவின் (பிரான்ஸ்) பாசமிகு தம்பியும், சுதர்சனின் (பிரான்ஸ்) மைத்துன்ரும், இசானி இஷானின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.09.2014 அன்று பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்துக்கிருஸ்ணர் வீதி,
சுன்னாகம். (52545)

தகவல்;
உறவினர்கள்

## மரண அறிவித்தல்



**திருமதி சின்னப்பிள்ளை கந்தையா**
(கொட்டடி யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், கொட்டடி சீனி வாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை கந்தையா நேற்று (21.09.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும், பத்மநாதன், தர்மலிங்கம் (குஞ்சன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சவுந்திரம், கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், காந்தரூபன் - சங்கீதா, கிருஸ்ணரூபன், நிறோசன், கஜானா, கஜீவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (52544)

தகவல்:
பிள்ளைகள்
பத்மநாதன், தர்மலிங்கம் (குஞ்சன்)

## கண்ணீர் அஞ்சலி



ப.கிருஸ்ணரூபனின் பேர்த்தியாரான

**சின்னப்பிள்ளை கந்தையா**
(கொட்டடி யாழ்ப்பாணம்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைய ருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்
திவ்யா ஸ்ரோர்
163, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்
(52543)(08)

## J.C.B (பைக்கோ) வாடகைக்கு



குறிப்பு :போக்குவரத்துக் கூலி அறவிடப்படமாட்டாது. ஒப்பந்த வேலைகளுக்கு விசேட கழிவுகள் உண்டு.

தொடர்பு: 021 224 1466 (யாழ்ப்பாணம்)
077 343 4657 (சுன்னாகம்)
077 771 2482 (பருத்தித்துறை)
(52517) (4.6.3)

**புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்**
207, K.K.S.வீதி, சுன்னாகம்.

## வீடு வாடகைக்கு

மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட சிறு குடும்பம் தங்குவதற் கான சிறிய வீடு. வரவேற்பறை, இரு படுக்கை அறை மற்றும் சமையல் அறை மலசல கூட வசதிகளுடன் யாழ் நகர மத்தியில் வாடகைக்குண்டு அரசாங்க, வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் சிறுகுடும்பத்துக்கு உகந்தது. முற்பணம் எதிர்பார்க்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 5160291
(52547)(08)

## ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015**
**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

| | |
|---|---|
| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| **அன்பொளி கல்வியகம்** | **அன்பொளி கல்வி நிலையம்** |
| யாழ். இந்துக்கல்லூரி வீதி, | தபாற்கந்தோர் வீதி, |
| யாழ்ப்பாணம். | சாவகச்சேரி. |

அனுமதிகளை 22.09.2014 திங்கட்கிழமையிலிருந்து 29.09.2014 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

*சின்ன் விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.*

இயக்குநர்கள்

## தொடர்ச்சிகள்

### சரிந்தது

அது இழந்துள்ளது. இரண்டு மேலதிக ஆசனங்களுடன் இம்முறை 19 ஆசனங்களையே அரசு கைப்பற்றியுள்ளது.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கியில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த முறையைவிட ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 629 வாக்குகளை அதிகம் பெற்று 6 ஆசனங்களையும் கூடுதலாக அக்கட்சி பெற்றுள்ளது. 2009இல் பதுளை மாவட்டத்தில் 12 தொகுதிகளிலும் அரசிடம் தோல்வியைச் சந்தித்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி, இம்முறை அரசுக்கு கடும் சவால் கொடுத்ததுடன் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வெலிமடை, பதுளை, ஹாலி - எல ஆகிய தொகுதிகளையும் கைப்பற்றியுள்ளது.

2009 இல் நடைபெற்ற தேர்தலில் ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 144 வாக்குகளைப் பெற்று 7 ஆசனங்களை வென்றிருந்த ஐ.தே.க. இம்முறை 2 இலட்சத்து 74 ஆயிரத்து 773 வாக்குகளுடன் 13 ஆசனங்களைத் தன்வசப்படுத்தியுள்ளது. இதன் மூலம் ஐ.தே.க. மீளெழுச்சி பெற்றுள்ளது என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், தலைமைத்துவ மாற்றத்தையடுத்து வெற்றிநடை போடும் ஜே.வி.பிக்கு ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவுகளும் சாதகமாகவே அமைந்துள்ளன. கடந்த முறை 14 ஆயிரத்து 259 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தை மாத்திரமே கைப்பற்றிய அக்கட்சி இம்முறை 36ஆயிரத்து 580 வாக்குகளைப் பெற்று இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. கடந்த தடவையைவிட இம்முறை 21 ஆயிரத்து 721 வாக்குகளை அக்கட்சி கூடுதலாகப் பெற்றுள்ளதன் மூலம் அதன் வெற்றிப்பயணம் தொடர்கின்றது.

அத்துடன், கடந்த மார்ச்சில் நடைபெற்ற மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களில் 12 ஆசனங்களைக் கைப்பற்றிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சிக்கு ஊவா மாகாண சபைத் தேர்தல் மரண அடியாக அமைந்துள்ளது. அக்கட்சிக்கு ஓர்ஆசனம்கூடக்கிடைக்கவில்லை. தீவிர பரப்புரையை முன்னெடுத்தும் ,பதுளை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 202 வாக்குகளையும், மொனராகலை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 274 வாக்குகளையுமே அக்கட்சியால் பெறக்கூடியதாக இருந்துள்ளது.

இந்நிலையில், அரசு கூட்டணியிலிருந்து தனித்துக் களமிறங்கிய அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் தோல்வியைச் சந்தித்துள்ளன. மு.காவும், அ.இ. ம.காவும் கூட்டணி அமைத்து களமிறங்கிய போதும் அக்கூட்டணியால் வெற்றியிலக்கைஅடையமுடியவில்லை. எனினும், குறிப்பிட்டளவு வாக்குகளை அக்கூட்டணி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பதுளை மாவட்டத்திலிருந்து 18 பேரையும், மொனராகலை மாவட்டத்திலிருந்து 14 பேரையும் என மொத்தம் 32 உறுப்பினர்களை ஊவா மாகாண சபைக்குத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பையொட்டி சுமார் ஒன்றரை மாதங்களாக ஊவாவில் தீவிர பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக கடந்த மார்ச் 29ஆம் திகதி நடைபெற்ற மேல் மற்றும் தென்மாகாண சபைத் தேர்தல்களின்போது இரண்டு லட் சத்து 47 ஆயிரத்து 103 வாக்குகளை இழந்து, 17 ஆசனங்களைப் பறிகொடுத்த கூட்டணி அரசுக்கு ஊவாத் தேர்தல் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்தது.

இதனால் தனது முழுப்பலத்தையும் பயன்படுத்தி அது பரப்புரையை முன்னெடுத்தது. ஜனாதிபதி மஹிந்தவும் நேரடியாகவே களமிறங்கிப் பரப்புரையில்ஈடுபட்டார். வழமைபோலவே அபிவிருத்தி, யுத்தமுடிவு ஆகியவற்றை மையப்படுத்தி அரசின் பரப்புரை நடவடிக்கைகள் அமைந்தி ருந்தன. தேர்தல் காலத்தில் வறட்சி நிலவியதால் தண்ணீர் அரசியல் கூட நடத்தப்பட்டது. எனினும், தேர்தல் முடிவுகள் அரசுக்குப் பீதியை ஏற்படுத்துவனவாகவே அமைந்துள்ளன என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தமக்கு தோல்வி அல்லவென அரசு சமாதானம் கூறினாலும், உண்மை என்னவென்பதைத் தேர்தல் முடிவுகள் வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் இருக்கின்றன என்று விமர்சகர்கள் குறிப்படுகின்றனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது குறித்து மக்களை நாடி பிடித்துப் பார்த்த அரசுக்கு ஊவாத் தேர்தல் நெருக்கடி மிக்க வெற்றியாக அமைந்துள்ளதால் இது விடயத்தில் அரசின் முடிவு எதிர்காலத்தில் மாற்றமடையலாம் என்று கருதப்படுகின்றது.

அதேவேளை, தோல்விப் பொறிக்குள் சிக்கித் தவித்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஊவாவில் வெற்றி பெறமுடியாமல் போனாலும் வாக்குவங்கியை அதிகரித்துக் கொண்டு மீளெழுச்சியை நோக்கி நகரக்கூடிய சக்தியைப் பெற்றுள்ளது என்பதையே மக்கள் ஆணை வெளிப்படுத்துகின்றது. பதுளை மாவட்டத்தில் அரசுக்கு கடும் நெருக்கடிகளைக் கொடுத்த ஐ.தே.க., 11 ஆயிரத்து 348 வாக்குகள் வித்தியாசத்திலேயே அங்கு தோல்வியைச் சந்தித்துள்ளது. 2009 இல் நடைபெற்ற தேர்தலில் ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 34 வாக்கு வித்தியாசத்தில் பதுளை மாவட்டத்தை அரசு கைப்பற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசின் ஊழல் மோசடி, திறனற்ற பொருளாதாரம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியே ஐ.தே.கவின் பரப்புரை அமைந்திருந்தது. பதுளையில் கட்சியின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் அதிருப்தியாளர்கள் அனைவரும் ஒரே மேடையில் ஏறியமை ஐ.தே.கவிற்குப் பெரும் உந்துசக்தியாக அமைந்தது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்துடன், ஊவாத் தேர்தலில் ஜே.வி.பிக்கு எதிராக அதிக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. இருந்தும் பின்வாங்காமல் அக்கட்சி பரப்புரையை முன்னெடுத்து மொனராகலையிலும் தனது பிரதிநிதித்துவத்தை இம்முறை உறுதிப்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் மூன்றாவது அரசியல் சக்தியெனக் கூறிக்கொண்டு ஜே.வி.பிக்கு சவால் விடுத்த பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சிக்கு ஊவாவில் உறுதியான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதையே தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆகமொத்தத்தில் தேர்தல் முடிவுகளானவை, அரசுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அமைந்துள்ளன என்று அரசியல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். (ற-5,சி)

### நான்கு

- 31,858 வாக்குகளை யும் பெற்றுள்ளனர்.

மொனராகல மாவட்டத்தில், சசீந்ர ராஜபக்ஷ 96,619 விருப்பு வாக்குகள் பெற்றுத் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இவரையடுத்து, குமாரசிறி ரத்னாயக்க 59,285 வாக்குகளையும், உதார சொய்சா 48,512 வாக்குகளையும், பெற்றுள்ளனர். ஜனாதிபதி மஹிந்தவின் பெறாமகனான, ஷசீந்ர ராஜபக்ஷ கடந்த முறை, 136,697 விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தெரிவாகியிருந்தார். இம்முறை அவர் 40 ஆயிரம் விருப்பு வாக்குகளை இழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஊவா மாகாண சபைக்கு இம்முறை 4 தமிழ் வேட்பாளர்கள் தெரிவாகியுள்ளனர். பதுளை மாவட்டத்தில் ஐ.தே.கவின் வேலாயும் ருத்ரதீபன் 30,457, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் செந்தில் தொண்டமான் 31,858, வடிவேல் சுரேஷ் 21,967, ஏ. கணேசமூர்த்தி 19,262 ஆகிய நால்வரே மாகாணசபைக்குத் தெரிவாகியுள்ளனர். (ற-சி)

### காணி வாங்கி

களுக்குப் பெரும் கிராக்கி நிலவுகின்றது. எதிர்காலத்தில் அவற்றுக்கு வெளிநாடுகளில் ஏற்படும் வரவேற்பைக் கருத்தில் கொண்டே தற்போது புலம் பெயர் தமிழர்கள், காணிகளைக் கொள்வனவு செய்து பனம் விதைகளை நட்டு வருகின்றன.

இவ்வாறு புலம்பெயர் தமிழர் ஒருவர் 5 ஆயிரம் பனம் விதைகளை நட்டுள்ளார். "பனம் விதையை நட்டு விட் டால் போதும். அதற்கு எந்த வொரு பராமரிப்பு செலவும், கால்நடைகளால் அழிக்கப் படும் அபாயம் இல்லை. வேலிகள் தேவையில்லை. இதனால் பனம் விதைகளை நடுகின்றோம். அடுத்த தடவைகளில் நாங்கள் வரும் போது பனை வடலிகளை துப்புரவு செய்து விட்டோமாயின் இன்னும் 15 அல்லது 20 வருடங்களில், புலம் பெயர் நாடுகளில் இருந்து தாயகம் திரும்பி வந்து பனம் பொருள் களை ஏற்றுமதி செய்து நிறைய வருமானத்தைப் பெற முடியும்"- என்று அவர் தெரிவித்தார்.

அவரைப் போன்று இன்னும் பலர் இவ்வாறு கட்டாந் தரையாகக் காணப்படும் காணிகளைக் கொள்வனவு செய்து பனை விதைகளை நட்டு வருகின்றனர். (ற-9)

### 24

வந்தடைந்ததும் இனிப்பு வழங்கப்பட்டது. 24 ஆண்டுகளின் பின்னர் வந்த ரயிலைப் பார்ப்பதற்குப் பெருமளவிலான மக்கள் குழுமியிருந்தனர்.

அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னேற்பாடாக, பரீட்சார்த்த ரயில் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாளை காலை 9 மணியவில் பளையில் இருந்து பரீட்சார்த்த ரயில் சேவை நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துக்கான மற்றுமொரு பரீட்சார்த்த ரயில் சேவை இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. ரயில்வே திணைக்களமும் மற்றும் போக்குவரத்து அமைச்சும் இணைந்து இந்த விசேட குளிரூட்டப்பட்ட ரயில் சேவையை நடத்தவுள்ளன. இந்த விசேட ரயில் காலை 10 மணிக்கு பளையிலிருந்து ஆரம்பமாகி நேரடியாக யாழ்.ரயில் நிலையத்தை வந்தடையும். இந்த ரயிலில் புகையிரத திணைக்கள அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பயணிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-14,ரி,17,9)

### இலங்கை

வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இது தொடர்பாக வெளிப்படையான அணுகுமுறை இருக்கவேண்டும்.

பிரபாகரன் இறந்துவிட்டார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு தாங்களாகவே உருவாக்கிக் கொண்ட அச்சத்திலிருந்து வெளிவரவேண்டும். இரு தரப்புமே இவ்வாறாக தாங்கள் கற்பனை செய்து கொண்டிருக்கும் அச்சத்திலிருந்து வெளியே வரவேண்டும். இல்லாவிட்டால் எதனையும் தீர்க்க முடியாது.

விடுதலைப்புலிகள் மீண்டும் புத்துயிர் பெறுவார்கள், வருவார்கள் என அரசு கற்பனை செய்து கொண்டிருக்கும் அச்சத்திலிருந்து வெளியே வர வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு இவ்வாறான அச்சத்தின் பிடியில் சிக்குண்டுள்ள வரை அரசிடமும் அச் சம் காணப்படும்.

அதிகாரம் பகிரப்படவேண்டும். அதுதான் ஜனநாயகம். இந்தியாவும் அதையே விரும்புகின்றது. அதே வேளை நாட்டை பிளவுபடுத்த அல்லது குழப்ப முயலும் சக்திகளுடன் நீங்கள் அதிகாரத்தை பகிர்ந்துகொள்ள முடியாது. இலங்கை அரசின் யோசனைகள் எனக்கு மகிழ்ச்சியளிக்காவிட்டால் நான் மீண்டும் இலங்கைக்கு வரமேட்டேன். நான் விலகிவிடுவேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### பரீட்சார்த்த

நோக்கி ரயில் சேவை நடத்தப்பட்டது. அந்த ரயில் மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து பளை நோக்கி திரும்பியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கன்று ஈனும் நிலையில் இருந்த பசுமாடே ரயிலால் மோதப்பட்டு 100 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற-288)

### கிறிஸ்தவ

சிஹல ராவய அமைப்பை சேர்ந்த பௌத்த பிக்குகளே இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதனையடுத்து பிக்குமாருக்கு ஆதரவாக பலர் அங்கு கூடியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் தமக்கு குறித்த வீதியில் சிலையை நிறுவ தமக்கு உரிமை இருக்கின்றது என்று கத்தோலிக்க சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். இந்தநிலையில் ஏற்பட்ட முறுகலை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகத்தை நடத்தினர். (ற)

### யானைக்கு

மூன்று வீடுகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளன. அவற்றிடம் இருந்து தப்பியோடிய ஒருவர் மரத்துடன் மோதுண்டு பலத்த காயமடைந்துள்ளார்.

நள்ளிரவு ஒரு மணியளவில் கெவுளியாமடு கிராமத்தினுள் புகுந்த இரண்டு காட்டு யானைகள், மூன்று வீடுகளை உடைத்ததுடன், வீடுகளில் உணவுக்காக வைக்கப்பட்டிருந்த தானியங்களையும் மற்றும் ஏனைய வீட்டுப் பாவனைப் பொருட்களையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளன. அப்போது அந்த வீட்டுகளில் இருந்தோர் பாதுகாப்புத் தேடி ஓடியுள்ளனர். அதன்போது ஒருவர் மரத்தில் மோதுண்டு பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். (ற)

### அரசு தந்த

ஆனால் இன்று அபிவிருத்திகளுக்காக சமூகத்தின் உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது. சமூகத்திற்கு எவ்வளவு அநீதிகள் இழைக்கப்பட்டாலும் வாய் மூடி மௌனிகளாக இருக்க வேண்டும் என்கின்ற நிலை காணப்படுகிறது. அதைத்தான் முஸ்லிம் தலைவர்கள் என்றுசொல்லிக் கொள்கின்ற சில அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் செய்து வருகின்றனர்.

ஆனால் அவ்வாறு எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியோ தலைமைத்துவமோ செயற்பட முடியாது. சமூகத்தின் பாதுகாப்பும் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற பெரும் இலக்குடன்தான் முஸ்லிம் காங்கிரஸ் பயணிக்கிறது. அதற்காக நாம் பதவிகள், சொகுசுகள், அபிவிருத்திகள் எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டியுள்ளது. அந்த வகையில் தான் எமது முஸ்லிம் காங்கிரஸ் கோட்டைகள் அபிவிருத்தியில் சற்றுப் பின்தங்கிக் காணப்படுகின்றன. எல்லா வியங்களிலும் நாம் புறக்கணிக்கப்படுகின்றோம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரகடனத்திற்கு முன்னதாக கல்முனை கரையோர மாவட்டம் உள்ளிட்ட முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் நாம் பிடிவாதமாக இருப்போம்.

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது ஏழு ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட நமது முஸ்லிம் காங்கிரஸ், இந்த அரசு கிழக்கில் ஆட்சியமைப்பதற்காக சில நிபந்தனைகளுடன் உத்தர வாதங்களைப் பெற்றுக் கொண்டே ஆதரவு வழங்கியது. ஆனால் இந்த அரசு அவற்றை நிறைவேற்றாமல் இழுத்தடித்தே வருகின்றது. அத்துடன் முஸ்லிம் பகுதிகளின் பிரதேச அபிவிருத்தி அதிகாரம், தென்கிழக்குப் பல்கலைக் கழகம், ஒலுவில் துறைமுகம் என்று இன்னும் பல விடயங்கள் உள்ளடங்கியிருந்தன. இவற்றை அரசு ஜனாதிபதித் தேர்தல் பிரகடனத்திற்கு முன்னதாக நிறைவேற்றித் தராவிட்டால் இந்த அரசில் தொடர்ந்தும் முஸ்லிம் காங்கிரஸ் பங்காளிக் கட்சியாக இருப்பதில் எவ்வித அர்த்தமும் கிடையாது."- என்று தெரிவித்துள்ளார். (ற-10)

### ஜனாதிபதி

தெரிவிக்கப்பட்டுள்ளது. 69ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பங்குபற்றுதலுடன் தொடர்பான, நியூயோர்க்கில் இடம்பெறும் ஏனைய உத்தியோகபூர்வ நிகழ்வுகள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் மும்மொழிகளிலும் உரிய காலத்தில் இந்த இணையத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ற)

### அரசின்

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சி விடுத்துள்ள அறிக்கையில், ராஜபக்ஷ அரசை முழுமையாக தோல்வியடைச் செய்வதற்கான பயணம் ஊவாவில் ஆரம்பமாகியுள்ளதாகவும் அரசு தேர்தல் ரீதியாக பலவீனமடைந்துள்ளதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

சிலரை மாத்திரம் பலப்படுத்தும் அரசின் கொள்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதை ஊவா தேர்தல் புலப்படுத்துகின்றது. ஊவா ராஜபக்ஷ அரசின் கோட்டை எனக் கருதப்பட்டது. இங்கு எங்களுக் குக் கிடைத்த வெற்றி அற்புதமானது.

ராஜபக்ஷக்களின் அசைக்க முடியாத பலம் குறித்து இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் உலகிற்கும் செய்தியொன்றை தெரிவித்துள்ளோம். அரசு இன்று நல்லதொரு பதிலை பெற்றுள்ளது. ஜனநாயகம் ஒரு நாள் வெல்லும் என்பது எங்களுக்குத் தெரியும் ஊவா இதனை நிரூபித்துள்ளது என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது. (ற)

### 13ஆவது

இதைவிட முக்கியமாக இந்தியாவின் புதிய பாதுகாப்பு கரிசனைகள் குறித்து மோடி மஹிந்த ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டவுள்ளார். சீனாவின் விமான தள பராமரிப்பு நிலையத்தை ஹிங்குராகொடவில் அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவது குறித்தே மோடி தனது கவலையை தெரிவிப்பார்.

முன்னர் இந்த நிலையத்தை திரு கோணமலையில் ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட வேளை கடும் எதிர்ப்பு உருவானது குறிப்பிடத்தக்கது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் இது குறித்த எதிர்ப்பை வெளியிட் டிருந்தார். இலங்கை சீனாவுடன் பாதுகாப்பு உறவை மேலும் விஸ்தரிக்க முயல்கிறது் என இந்தியா கவலை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கான சீன ஜனாதிபதியின் விஜயத்திற்கு முன்னதாக சீனாவின் நீர்மூழ்கியும், போர்க் கப்பல்களும் இலங்கை துறைமுகத்தை வந்தடைந்திருந்தன. சீனாவால் கட்டப்பட்ட சி.ஐ.சி.டி பகுதி யில் 7 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை இவை நிலை கொண்டிருந்தன.

சீனாவின் இரு போர்க்கப்பல்களும் ஒக்ரோபர் மாதம் மீண்டும் இலங்கை வரவுள்ளதாகவும், பின்னர் நவம்பரி லும் அவை திரும்பிவருமெனவும் இலங்கை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கான உத்தியோபூர்வ அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவை தெரிவித்துள்ளன. (ற-சி)

### மக்களின்

தெரிவித்துள்ளார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாகாணசபைகடந்த காலத்தில் தவறுகள் எதுவும் இடம்பெற்றிருந்தால் அதனைத் திருத்திக் கொண்டு முன்னரை விட மக்களுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

### நலிவுற்ற

மற்றும் மட்டக்களப்பு வை.எம். சீ.ஏ ஆகிய நிறுவனங்கள் இணைந்து கூட்டாக இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றன. (ற-10)

### ரயில் பார்த்த

பாம்பால் கடியுண்ட நுணா வில் மேற்கைச் சேர்ந்த மகிந்தன் மதுமிதா (வயது - 6) என்ற சிறுமி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வயல் வேலையில் ஈடுபட்டிருந்த பெற்றோருடன் வயலில் நின்ற சிறுமி பரீட்சார்த்தமாக நடத்தப்பட்ட ரயில் சேவையில் ஈடுபட்ட ரயில் செல்வதைக் கண்டுள்ளார். அதனை அருகில் சென்று பார்ப்பதற்காக வயல் வரம்பு வழியாக ஓடிய போது வரம்பில் இருந்த புடையன் பாம்பால் கடியுண்டார். உடனடியாக கால் நீல நிறமான நிலையில் பெற்றோரால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)